# உலகம் சீரழிந்து போதல்

சகோதரன் நெவில், உங்களுக்கு மிக்க நன்றி.

காலை வணக்கம், நண்பர்களே. நான் இந்தக் காலையில் படுக்கையில் படுத்திருந்தபோது மீண்டும் எழுந்திருக்க வேண்டியதாயிருந்தது, எனவே நான் சற்று களைப்புற்றிருந்தேன். வரவில்லை...ஒரு விதத்தில் எதிர்பாராமல் வந்தது. சகோதரன் ஷகாரியன், முழு சுவிசேஷ வர்த்தகர், இந்த இயக்கத்தின் தலைவர்... அவருடைய மனைவி நோய்வாய்ப்பட்டாள், எனவே...அவள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

2 அவரைப் போன்ற ஒருவருக்குப் பதிலாகக் களமிறங்கி, நேற்றே ஒரு தொடர் கூட்டத்தை நடத்துவது என்பது ஒரு மிகப்பெரிய பணி.

3 அப்பொழுது சகோதரன் ஆர்கன்பிரைட் வந்தார், நாங்கள் மேலே சென்றோம். மேலும், பாருங்கள், நேற்று காலை, நான் நான்கு மணிக்கு எழுந்து, நாங்கள் சின்சினாட்டிக்குப் புறப்பட்டோம். நாங்கள் நாள் முழுவதும் சென்று கொண்டிருந்தோம். நான் உள்ளே நுழைந்தேன், சற்று முன்புதான். நாங்கள் இன்று காலைப் பகல் வெளிச்சத்தில் உள்ளே நுழைந்தோம். எனவே அது கரகரப்பான, களைத்துப் போன குரலாய் இருந்தது, ஆனால் நாங்கள் இங்கே தேவனுடைய கிருபையினால் இருக்கிறோம்.

4 சகோதரன் ஆர்கன்பிரைட் வந்தடைந்தாரா என்று நான் எதிர்பார்க்கிறேன். சகோதரன் ஆர்கன்பிரைட், நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? அவர் இன்னமும் மார்பியஸின் கரங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மார்பியஸ் யாரென்று உங்களுக்குத் தெரியாது; ரோம அஞ்ஞானிகளின் தெய்வம், உறக்கத்தின் தெய்வம்.

5 எனவே நீங்கள் யாவரும் இந்தக் காலையில் என்னுடைய தொண்டை கரகரப்பாயிருப்பதை சற்று பொறுத்துக்கொள்ளுங்கள், நான் உங்களை நீண்ட நேரம் பிடித்து வைக்க முயற்சிக்க மாட்டேன்.

6 இன்று காலை ஆராதனை நடத்துவதற்கான என்னுடைய நோக்கம்...ஜனங்களுக்கு அல்ல. அடுத்த ஞாயிறு நான் என்னுடைய—என்னுடைய கிறிஸ்துமஸ் செய்தியை அளிக்கவிருந்தேன், ஆனால் நான்—நான் அவ்வாறு செய்திருந்தால், அப்பொழுது அது நகரத்திற்கு வெளியிலிருந்து வருகிற ஜனங்களை, ஒருவேளை, அவர்கள் திரும்பிச் செல்வதால், அது அவர்களுடைய கிறிஸ்துமஸ் பண்டிகையைச் சற்றுக் கெடுத்துவிடும் போலிருக்கிறது. எனவே, கிறிஸ்துமஸ் ஆராதனையின் என் பங்காக, இன்று காலை நாம் அனைவரும் இந்த முறையில் ஒன்றாகக் கூடிவந்து ஆண்டவரை ஆராதிப்பதே சிறந்ததாக இருக்கும் என்று நான் நினைத்தேன். அதன்பின்னர் அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீங்கள் உங்களுடைய...

நீங்கள் தூரமாய் வாழ்ந்தால், நீங்கள் எங்கிருந்து வந்தாலும், அல்லது நீங்கள் என்ன செய்ய விரும்பினாலும் உங்களுடைய சொந்த சபையில் இருக்கலாம்.

7 அந்த அழகான பாடலுக்காக நான் சகோதரனுக்கு நன்றி கூற விரும்புகிறேன். அது பாடிக்கொண்டிருக்கும்போதே நான் உள்ளே வந்தேன். அது உண்மையாகவே அருமையாக இருக்கிறது. எந்நேரமும் என் மனைவியும் மற்றவர்களும் அந்தச் சகோதரரின் பாடலைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன், ஆனால், கூடாரத்திலிருந்து விலகி, அவர் பாடுவதை நானே முதன்முறையாகக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது எவ்வளவு அற்புதமான விஷயம், இல்லையா? இங்கே கூடாரத்தில் உள்ள நம்முடைய சகோதரன், லூசியானாவில் உள்ள ஷ்ரீவ்போர்ட்டுக்கு, தன்னுடைய முதல் பாடலைப் பாடுவதைக் கேட்க அவர் செல்ல வேண்டியதாயிருந்தது. காரியங்கள் எவ்வளவு விசித்திரமாக இருக்கின்றன, அவைகள் அவ்வாறு இல்லையா?

8 அதன்பின்னர் நாம் இதைச் செய்தால், அது நம்முடைய… ஒன்று கூடுவதற்கு நமக்கு ஒரு நேரத்தை அளிக்கும் என்று நாங்கள் நினைத்தோம். மேலும் சாலைகள் மிகவும் மோசமாக இருந்தன. ஓஹையோவிலிருந்து சகோதரன் மற்றும் சகோதரி டௌச் வந்து சேர்ந்தார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர்கள் வந்துவிட்டார்களா? சகோதரன் டௌ, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? ஆம், ஆம். நான் யோசிக்கிறேன். உங்களுக்கு அங்கே நிறைய பனி இருக்கிறதா? நிறைய பனி. எனவே, பாருங்கள், சின்சினாட்டியில் அவர்களுக்கு ஒன்றுமே கிடையாது. இங்குள்ள அளவுக்குக் கூட அங்கு இல்லை. இப்பொழுது பனிப்பொழிவு கூட இல்லை. மேலும், நான் சின்சினாட்டியில் முதன்முறையாகப் பிரசங்கம் செய்தது நேற்றுதான், அதனால், எங்களுக்கு அது ஒரு அற்புதமான நாளாக அமைந்தது, ஒரு வருடம் கூட ஆகாத ஒரு புதிய குழு இது. மேலும், இது ஒரு மிகச் சிறந்த குழு, இதில் சில நல்ல மனிதர்களும் உள்ளனர். நாங்கள் அந்த ஐக்கியத்தில் மகிழ்ந்தோம். அதன்பின்னர் சகோதரர் ஷகாரியன் கலந்துகொள்ளவிருந்த மற்றொரு குழுவின் பிரதிஷ்டைக்காக அல்லது ஆராதனைக்காக, நாளைக் கொலம்பஸில் இருக்குமாறு இப்போதுதான் என்னை அழைத்தார்கள், ஆனால்… நான் முதலில் அதற்காக ஜெபிக்க வேண்டும். இது ஒரு…

9 இதற்குப் பிறகு நான் பீனிக்ஸ் செல்ல வேண்டும், உங்களுக்குத் தெரியுமா, நாம்…நாம் பன்னிரெண்டாம் தேதி பீனிக்ஸில் துவங்குகிறோம், அது வர்த்தகர்களின் காலை உணவாக இருக்கும். அது எங்கே நடத்தப்படுகிறது என்று எனக்குத் தெரியாது. ரமாதாவில்—ரமாதாவில் நடைபெறும் என்று நான் நினைக்கிறேன். வர்த்தக புருஷர் சங்கம் தங்களுடைய வழக்கமான காலைச் சிற்றுண்டியை அங்கேயே சாப்பிடுகின்றனர். அதன்

பிறகு ஞாயிற்றுக்கிழமைகளில் நான் எனது பயணத்தைத் தொடங்குவேன், சுமார் பன்னிரண்டு நாட்களுக்கு, மாரிகோபா பள்ளத்தாக்கு, ஃபீனிக்ஸ், டூசான் என எல்லா இடங்களிலும் இந்த ஞாயிற்றுக்கிழமைகளில் பயணம் தொடரும். மேலும், அடுத்த திங்கட்கிழமை இரவு, வருகின்ற திங்கட்கிழமை இரவு, டூசானில், போதகர்கள் மற்றும் முழு சுவிசேஷ வர்த்தகர்களுடன் எனக்கு ஒரு—ஒரு விருந்து உண்டு. ஆகையால் அதன்பின்னர் ஃபீனிக்ஸுக்குத் திரும்பி வரலாம், க்ளென்டேல் மற்றும் பல்வேறு இடங்களில் நான் நினைக்கிறேன். அதன்பின்னர் தொடர் கூட்டம் இருபது-…சகோதரன் ஃபிரட், அது என்ன? உங்களுக்கு நினைவிருக்கிறதா…இருபத்தி நான்காம், இருபத்தி நான்காம் முதல் இருபத்தெட்டாம் அல்லது இருபத்தி ஒன்பதாம் தேதிவரை, அங்கே உள்ளன. அதன்பின்னர், கர்த்தருக்குச் சித்தமானால், வீடு திரும்ப வேண்டும். நாம் இங்கே எப்படி முன்னேறி வந்திருக்கிறோம் என்று பார்ப்போம், ஏழு முத்திரைகள் இல்லை…அது முதற்கொண்டே, அதிலிருந்து நாம் எங்கே போகிறோம் என்று பார்ப்போம்.

10 இப்பொழுது, பிரதிஷ்டை செய்யப்படுவதற்காக இந்தக் காலையில் இங்கே சில சிறு குழந்தைகளை வைத்திருக்கிறோம் என்று யாரோ ஒருவர் என்னிடம் கூறினார் என்று நான் நினைக்கிறேன். அது சரியா? ஏதேனும் ஒரு தாய் தன் குழந்தையைப் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறாளா? ஏதோ ஒரு காரியத்தை டாக் என்னிடம் கூறினார். பாருங்கள், நான் தவறாக இருக்கலாம். ஓ, ஆம். ஆம். ஆம், ஐயா, இவைகள். சரி, சகோதரிகளே அல்லது சகோதரர்களாகிய நீங்கள் உங்களுடைய சிறிய பிள்ளைகளை மேலே அழைத்து வருவீர்களா? சகோதரியே, உங்களுக்கு நன்றி. குழந்தைகளைக் கொண்டு வருவதற்கு இது மிகவும் பொருத்தமான ஒரு நேரம் என்று எண்ணிக்கொள்ளுங்கள், இது கிறிஸ்துமஸ். சகோதரன் நெவில், நீங்கள் விரும்புகிறீர்களா? இப்பொழுது, இந்த அன்பார்ந்தவர்கள் தங்களுடைய சிறு பிள்ளைகளை இந்தக் காலையில் கொண்டு வரும்போது, அது—அது அப்படியே…

11 இப்பொழுது, அநேக ஜனங்கள், ஏராளமான சபைகளில், மற்றும்—மேலும் உங்களில் எவரேனும் நேற்று தொடர் கூட்டத்தில் இருந்திருந்தால், எப்படி சகோதரன் பிரவுன், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட எபிஸ்கோபாலியன், அவர் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு முன்பு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது குறித்து பெந்தேகோஸ்தே விசுவாசிகளிடம் மன்னிப்புக் கேட்டார். எனவே எபிஸ்கோபலியன்கள் தாங்கள் ஞானஸ்நானம் என்று அழைப்பதை, தெளிப்பதன் மூலம் செய்கிறார்கள்.

என்னைப்பொறுத்தவரை, *ஞானஸ்நானம்* என்றால் “மூழ்குதல், நீருக்குள் செல்லுதல், அடக்கம் செய்தல்” என்று பொருள்.

12 ஆனால் அவர்களில் அநேகர் அதைச் செய்கின்றனர். அது ஒரு பண்டைய…அது உண்மையாகவே கத்தோலிக்க

சபையிலிருந்து வந்த ஒரு முறையாயுள்ளது, பின்னர் மெத்தோடிஸ்ட், எபிஸ்கோபாலியன், லூத்தரன் போன்ற பல பிரிவினர் வழியாக அது வெளிக்கொணரப்பட்டது. மெத்தோடிஸ்டுகள் அதைச் செய்கின்றனர். அது நசரேயன்களுக்கும் மெதோடிஸ்டு சபைக்கும் இடையேயுள்ள ஒரு பிரிவினையாயிருந்தது, அது குழந்தை ஞானஸ்நானமாயிருந்தது. நாசரேயன் என்பது ஒவ்வொரு வார்த்தையும் ஒரு மெத்தோடிஸ்டு, குழந்தை ஞானஸ்நானம் மாத்திரமே, ஆகையால் அது அந்த நோக்கத்திற்காகவே வெளிப்படுகிறது.

13 சர்ச் ஆப் கிரைஸ்ட் ஒரு கிறிஸ்தவ சபையாய் உள்ளது, சபையில் உள்ள இசையைத் தவிர மற்ற ஒவ்வொரு காரியமும். ஆகவே, ஓ, அந்தச் சின்னச் சின்னப் பிரச்சனைகள்தான் சகோதரத்துவத்தைப் பிரித்து, சிதைக்கின்றன! நாம் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்…நீங்கள் ஒரு சபையில் சேர்ந்து கொள்ள முடியாது. நீங்கள்—நீங்கள் ஒரு விடுதியில் சேரலாம், ஆனால் நீங்கள் ஒரு சபையில் சேர முடியாது, பாருங்கள், ஏனென்றால் நீங்கள் சபையில் பிறக்க வேண்டும். அது ஒரு ஆவிக்குரிய பிறப்பு. எனவே வித்தியாசமானவர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கொண்டுள்ளனர், நாமும் அவர்களோடு ஒத்துப் போகிறோம், பரவாயில்லை.

14 ஆனால் இங்கே கூடாரத்தில்—உள்ள நாங்கள், வேதாகமம் எப்படிச் செய்யச் சொல்கிறதோ, அப்படியே சரியாக இருக்க விரும்புகிறோம். அது என்ன…ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு வேதத்தில் எந்த வேதவாக்கியமும் இல்லை. தெளித்தலைக் குறித்து வேதத்தில் எந்த வேதவாக்கியமும் இல்லை. எனவே வேதாகமத்தில் உள்ள ஒரே ஒரு வேதவசனத்தில்தான் இயேசு, அவர் நம்முடைய மாதிரியாயிருந்தார் என்று கூறினார், அவர்கள் பிள்ளைகளை அவரிடத்தில் கொண்டு வந்தபோது, அவர் தம்முடைய கரங்களை அவர்கள்மேல் வைத்து அவர்களை ஆசீர்வதித்து, “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள், அவர்களைத் தடை செய்யாதிருங்கள், பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” என்று கூறினார். இப்பொழுது, அந்தவிதமாகவே நாம் தொடர முயற்சிக்கிறோம்.

15 இப்பொழுது, போதகரும் நானும் இந்தக் குழந்தைகளின் மீது கைகளை வைத்து, எங்களுடைய கரங்கள் நம்முடைய கர்த்தருக்கு ஈடாகாது என்பதை நாங்கள் அறிவோம், ஏனெனில் அவருடையது பரிசுத்தமானது. ஆனால் அவர் ஒரு பரிசுத்த கரத்தைக் கண்டுபிடிக்க இந்தக் காலையில் பூமி முழுவதிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியதாயிருந்தால், நீங்கள் அதை எங்கே கண்டறிவீர்கள்? பாருங்கள், பூமியில் அப்படிப்பட்ட காரியம் கிடையாது. ஆனால் அவருடைய கிருபையினால் நாம் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். இங்குள்ள

பிள்ளைகளை நாம் பிரதிஷ்டை செய்வோம், அவர்கள்மேல் எங்களுடைய கரங்களை வைத்து, அவர் ஜனங்களுக்கு அவைகளைக் கொடுத்திருக்கிறபடியால் ஜெபமும் நன்றியும் செலுத்துவோம், மேலும் நீங்கள் முன்னேறிச் செல்லும் பாதையைப் பிரகாசமாக்க உதவும் சிறு மலர்களாக அவர்கள் உங்கள் இல்லத்தில் திகழ்வார்களாக. அவர்கள் தேவனுடைய போதனையில் வளர்க்கப்படுவார்களாக. இந்தச் சிறு பிள்ளைகள் இப்பொழுது பெரிய வேலையாட்களாகி, தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாளை என்ற ஒன்று இருக்குமானால், அதுவே எங்களுடைய உத்தமமான ஜெபமாயுள்ளது. சரி. கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

16 நாம் பார்க்கட்டும், இந்தச் சிறிய, கறுப்பு நிற தலையுடைய நபர் என்னை மிக அதிகமாக நோக்கிப் பார்க்கையில், நாம் இங்கே துவங்குவோம் என்று நான் நம்புகிறேன். அப்படியே ஒருவிதமாக... ஓ, என்னே! இந்தச் சிறு பிள்ளையைப் பிடித்து வைக்க என்னுடைய மனைவி இங்கிருக்க வேண்டும். நீங்கள் பாருங்கள், நான் அவர்களை முறித்துவிடுவேன் என்று எப்பொழுதும் பயப்படுகிறேன். என்னே ஒரு அழகான குட்டி நபர்! நீ எப்படியிருக்கிறாய்? என்னே ஒரு பொருத்தமான சமயம், "முன்னணையில், ஒரு குழந்தை காணப்பட்டது," குழந்தைகளைத் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்வதற்கான ஒரு கிறிஸ்துமஸ் நேரம். அவனுடைய பெயர் என்ன? சாமுவேல் தாமஸ். இப்பொழுது, அது ஒரு மிக நல்ல பெயர்.

நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

17 எங்களுடைய பரலோகப் பிதாவே, இந்தக் காலையில் இந்த மகிழ்ச்சியான சிறிய தம்பதிகள் அவர்களுடைய இணைப்பில் நீர் சேர்த்துள்ள இந்தச் சிறிய மகிழ்ச்சித் துளியான குட்டி சாமுவேல் தாமஸோடு வருவதால், பிதாவாகிய தேவனே, நீர் இந்தக் குழந்தையை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த காணமுடியாத கரங்கள் இந்தக் குழந்தையை ஆசீர்வதிப்பதற்காக நாங்கள் இக்காலையில் இவனை உம்முடைய பிரசன்னத்தில் எழுப்புகிறோம். கர்த்தாவே, அந்தப் பிள்ளை பிழைக்கட்டும். நாளை என்ற ஒன்று இருக்குமானால், அது தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான ஒரு மகத்தான ஊழியக்காரனாக இருப்பதாக. அதனுடைய பெற்றோரை ஆசீர்வதியும். இப்பொழுதும் பிதாவே, குட்டி சாமுவேல் தாமஸை உமக்கு ஒப்புக்கொடுத்து, தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஒரு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜீவியத்திற்காக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

18 தேவன் உங்களையும், கணவரையும் ஆசீர்வதிப்பாராக, உங்களுக்கு ஒரு சந்தோஷம் உண்டாயிருப்பதாக. உங்களுடைய பிரயாணம் முழுவதிலும், உங்களுடைய ஜீவியத்தில் ஒரு

பிரகாசமான சிறு இடம் இருப்பதாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

19 இப்பொழுது, இது தான் அந்தச் சிறு பிள்ளையா? [தாயார், “ஆம்” என்று கூறுகிறார், அப்பொழுது குழந்தை சத்தமிடுகிறது—ஆசி.] இப்பொழுது, என்னால் அந்த மொழியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னவென்று எனக்குத் தெரியும். அவர்கள் என்ன—என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன், ஆனால் என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

20 அண்மையில் நான் ஜெர்மனியில் இருந்தபோது, என்னால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. நான், “ஆனால், இங்குள்ள ஜெர்மானிய ஜனங்களாகிய உங்களைக் குறித்த காரியம்” என்று கூறி, “எனக்குப் புரியவில்லை” என்றேன். நான், “ஒவ்வொரு…நான் தெருவில் சென்று கொண்டிருந்தபோது, தாய் ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்துகொண்டிருந்தாள். அது ஆங்கிலத்தில் அழுது கொண்டிருந்தது” என்றேன்.

21 அவள் ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாம் மேடாவினிடத்திற்கு திரும்பி வரும்போது, நான் உங்களைக் முறுக்கிடச் செய்வேன். அவர்கள் இந்தக் காரியத்தில் முறுக்கப்பட்டிருக்கிறார்கள், உங்களுக்குத் தெரியும், கீழே பிணைக்கப்படுகின்றனர். [தாயார், “அலிசியா கே” என்று கூறுகிறார்.—ஆசி.] அலிசியா கே. [யாரோ ஒருவர், “கார்லைல்” என்கிறார்.] கார்லைல். அலிசியா கே கார்லைல், அது ஒரு அழகான பெயர். நான் அதை விரும்புகிறேன். நீங்கள் அந்தச் சிறிய சகோதரியை இங்கே கொண்டு வருவீர்களா? ஹும்! ஓ, சகோதரியே, நான் உங்களுடைய கரத்தையும் கூட அங்கே வைத்திருக்கிறேனா?

22 பாருங்கள், உங்களுக்குத் தெரியும், இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பலியை கொண்டு வந்தபோது (நான் நேற்று பிரசங்கித்தேன்) பாருங்கள், அவர்கள் தங்களுடைய கரங்களை அதன் மேல் வைப்பார்கள், ஏனென்றால் அவர்கள் தங்களுடைய பலிக்கு தங்களை அடையாளங்காட்டினர்.

23 உங்களுடைய குழந்தையின் மீதுள்ள உங்களுடைய கரங்கள், அப்பொழுது அந்தக் குழந்தையுடன் உங்களை அடையாளங்காட்டுகிறது. அது சரிதானே? நாங்கள் எங்களுடைய கரங்களை அதன் மேல் வைத்து, இந்தச் சிறிய அலிசியா கேக்கிற்காக, தேவனுக்கு ஜெபத்தில் எங்களை அடையாளங்காட்டுகிறோம். அது சரியா? கார்லைல்.

24 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இந்தச் சிறு பெண்மணியை உம்மண்டை எழுப்புகிறோம், தேவனே, இந்தச் சந்தோஷத்தின் இடம் இந்தக் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. கர்த்தாவே, இந்தச் சிறு பெண்ணை ஆசீர்வதியும், இந்த அழகான சிறிய பெண்ணை

நான் இங்கே இந்தக் காலையில் என்னுடைய கரங்களில் பிடித்து, தாய் இந்தக் குழந்தையைக் கொண்டு வருகிறாள். நீர் அதை அவளிடத்தில் அளித்தீர், இப்பொழுது அவள் அதை உம்மிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். கர்த்தாவே, அவளுடைய பிள்ளை தேவனுடைய போதனையில் வளர்க்கப்பட வேண்டும் என்ற அவளுடைய விசுவாசத்தையும், வாஞ்சையும் அது காண்பிக்கிறது. கர்த்தாவே, அவளை ஆசீர்வதியும், அவள் ஒரு நீண்ட மகிழ்ச்சியான வாழ்க்கை வாழந்து, மேலும், நாளை ஒன்று இருந்தால், நாளைய தினத்தில் உமக்காக ஒரு மகத்தான ஊழியக்காரியாக இருப்பாளாக. அது வருகிற வீட்டை ஆசீர்வதியும். கர்த்தாவே, அதை அருளும். இப்பொழுது, நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த அருமையான சிறு பெண்ணைப் பிரதிஷ்டைக்காக உம்மண்டை ஒப்புவிக்கிறோம். ஆமென்.

25 இப்பொழுது, அது ஒரு அழகான, சிறிய நபரல்லவா! நீங்கள் அறிவீர்கள், ஒவ்வொரு தாயினுடைய குழந்தையும் பூமியில் உள்ள அழகான குழந்தையாயிருக்கிறது. அது சரி, அப்படித்தானே? தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, மிகவும் இனிமையான ஒரு சிறு குழந்தை. அந்தவிதமாகச் சுற்றிலும் என்னைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நான் *என்னுடைய* கரத்தை நெகிழ வைத்துள்ளேன்.

26 இப்பொழுது, நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? பாருங்கள், இதுவும் கூட என்ன ஒரு அழகான, சிறு பெண்! அவளுடைய பெயர் என்ன? [தாயார், “லேத்தா ஆன் ஃபார்மர்” என்று கூறுகிறார்.—ஆசி.] லேத்தா, அலேத்தா ஆன். [“லேத்தா.”] லேத்தா ஆன் ஃபார்மர். என்னே, என்ன ஒரு அழகான, சிறு பெண்! லேத்தா, என்னோடு இங்கு வருவாயா? பார்த்தீர்களா? அது நல்லதுதான். இப்பொழுது, அதுவும் கூட ஒரு அழகான சிறு பெண். அவளும் நன்றாகக் காணப்படுகிறாள். லேத்தா, நீ சபைக்குச் செல்ல விரும்புகிறாயா? இப்பொழுது, நம்முடைய கர்த்தர் தம்முடைய கரங்களில் இதைப் போன்ற சிறு நபர்களை எடுத்தார் என்று நான் யூகிக்கிறேன். இவர்கள் சகோதரிகளா? [“ஆம்.”] நான் இப்பொழுது இங்கே நின்றுகொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள், நான் அதை எப்படி உணருகிறேன். நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? ஒரு விவாகம் அல்லது ஒரு பிரதிஷ்டை என்றால் என்ன? நீங்கள் தேவனுடைய பாதையில் நின்று கொண்டிருக்கிறீர்கள். ஓ, என்னே! என்னை நடுங்கச் செய்கிறது.

நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

27 ஓ தேவனே, நாங்கள் இந்தக் காலையில் இந்தச் சிறிய லேத்தாளைக் கொண்டு வருகிறோம். பரலோகப் பிதாவே, நீர் லேத்தாளை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும், அவள் ஜீவியத்தினூடாக அவள் செய்கிற எல்லாவற்றையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் நாங்கள் ஜெபிக்கிறோம். அவள் நீண்ட,

மகிழ்ச்சியான வாழ்க்கை வாழட்டும். அவளுடைய பெற்றோரை ஆசீர்வதியும். கர்த்தாவே, தேவனைப் போற்றவும், அவரைத் ஆராதிக்கவும், அவள் ஒரு வீட்டில் வளர்க்கப்படுவாளாக. நாளை என்ற ஒன்று இருக்குமானால், அவள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒரு ஊழியக்காரியாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவள் பிரயாணம் செய்யும்போது வியாதிகளையும் மற்ற காரியங்களையும் அவளிடத்திலிருந்து விலக்கி வையும். உம்முடைய இராஜ்ஜியத்தில் அவளை ஒரு மகத்தான ஆசீர்வாதமாக ஆக்குவீராக. நாங்கள் இந்தச் சிறு பெண்ணை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிரதிஷ்டைக்காக உம்மண்டை ஒப்புவிக்கிறோம். ஆமென்.

மிகவும் இனிமையான குழந்தை!

28 ஓ, நான் சிறு நபர்களை நேசிக்கிறேன். ஆனால் நான்…அவை முறிந்துவிடுமோ என்று நான் எப்பொழுதும் பயப்படுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவைகள் மிகச் சிறியவை. அதே சமயத்தில் மனைவி என்னிடம், “ஏன், என்னை விட—விட—அவர்களை உடைப்பது கடினமாக இருக்கும்” என்று கூறினாள். எனவே, ஆம், அது உண்மை. அவைகள் மிகவும் சுறுசுறுப்பானவை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

29 இப்பொழுது, சுகவீனமான யாராவது தங்களுக்காகப் ஜெபம் செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களா—அது ஒரு சிறப்பு வகை ஜெபமாகவோ அல்லது அது போன்ற ஒன்றாகவோ, நாங்கள் உங்களுக்காக ஏறெடுக்கலாமா? சரி, சகோதரியே, நீங்கள் இங்கே வந்து நின்றால் நலமாயிருக்கும். சரி. ஹூ-ஹூ. அதாவது ஒரு… நாம் இந்தக் காரியங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறோம், எனவே நாம் நம்முடைய கிறிஸ்துமஸ் செய்தியில் ஒரு சிறிதளவு இணைக்கப்பட்டிருந்தால், அது சரியாயிருக்கும். சரி, ஐயா.

30 இப்பொழுது, நாம் இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்குவோம். சகோதரன் நெவில், நீங்கள் என்னோடு முன்னோக்கி நடப்பீர்களா?

31 எங்கள் பரலோகப் பிதாவே, இந்தக் கிறிஸ்துமஸிற்கு முந்தின நாள் அங்கே எங்களுடைய மகத்தான பாவமன்னிப்பிற்கும் சுகவீனத்திற்கும் எங்களுக்காக ஒரு பலியாகும்படி இந்த உலகத்தில் பிறந்தீர். நாங்கள் எங்களுடைய சகோதரியை, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், எங்களுடைய கரங்களை அவள்மேல் வைத்து, நீர் என்ன செய்யச் சொன்னீரோ, அதை அப்படியே செய்யும்படிக்கு கொண்டு வருகிறோம். “வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.” அவளுடைய சுகமளித்தலுக்காக, நாங்கள் இதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்கிறோம். ஆமென்.

(சகோதரன் காபெல்லை அழைக்கவா…?…)

32 ஓ, அது சரியா? சகோதரியே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? இப்பொழுது, இப்பொழுது, நாம் மீண்டும் நம்முடைய தலைகளை வணங்குவோம்.

33 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இங்கே சர்வவல்லவரின் பிரசன்னத்தில் நிற்கையில், ஒரு துரதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ள எங்களுடைய சகோதரிக்காக ஜெபிக்கிறோம். அவளுடைய கண்களைக் குருடாக்கும் ஏதோ ஒரு காரியம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கர்த்தாவே, நீர் மோசேயினிடத்தில் கூறினது போல, “மனுஷனுடைய கண்ணைச் சிருஷ்டித்தது யார்?” சிருஷ்டிகராகிய, மகத்தான யேகோவா ஒருவர் மாத்திரமே உதவி செய்ய முடியும்.

34 எனவே பரலோகப் பிதாவே, நாங்கள் இதை எங்களுடைய இருதயங்களில் விசுவாசிக்கையில், நாங்கள் ஜெபித்து, நாங்கள் அவளை உம்மிடம் கொண்டு வருகிறோம். எங்களுடைய விசுவாசம், நாங்கள்—நாங்கள் விசுவாசத்தினாலே, தேவனுடைய மகத்தான பொன் பலிபீடத்தண்டை வந்து, அங்கே இரத்தம் தோய்ந்த பலியாகிய கிறிஸ்து, பீடத்தின் மேல் கிடக்கிறார். ஏசாயாவின் புத்தகம் 53-ம் அதிகாரம் 5-ம் வசனம், “நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்” என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது நாங்கள் எங்களுடைய விசுவாசத்தை அவளுடைய விசுவாசத்தோடு உம்முடைய பீடத்தின் மேல் வைத்து, இந்தக் குருட்டுத்தன்மை எங்களுடைய சகோதரியை விட்டு நீங்க வேண்டும் என்றும், அவள் தேவனுடைய கனத்தையும் மகிமையையும் காணும்படியாக, அவளால் பார்வையடைய வேண்டும் என்றும் இயேசுவின் நாமத்தில் கேட்டுக்கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

35 சகோதரர் காபெல். [சகோதரன் வால்ஸ் காபல் சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்—ஆசி.] ஓ, ஆம். பாரிஸ் ரீட்ஹெட். ஆம். ஆம், ஐயா. உம்-ஹும், உம்-ஹும். நல்லது.

36 இப்பொழுது என்னுடைய நண்பர் ஒருவரை சந்திக்கும்படியாக, நம்முடைய சகோதரன் காபிளின் ஊழியத்திற்கான அபிஷேகத்திற்காக நாங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். நான் அவரோடு நியூயார்க்கில் பணிபுரிந்தேன். பாரீஸ் ரீட்ஹெட், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற என்னுடைய வீட்டிற்கு வந்த ஒருவர்.

37 அவர் சூடான் ஊழியத்தில் செய்ய வேண்டிய ஒரு காரியமாயிருந்ததல்லவா? [சகோதரன் காபெல், “ஆம். அவர் ஆப்பிரிக்காவின் இயக்குநராக இருக்கிறார். அவர் நியூயார்க்கில் வசிக்கிறார், அங்கே நியூயார்க்கின் ஒரு பாகத்தில், அங்குள்ள இந்தப்

பெரிய சபையில் உதவி செய்யப் பணியாற்றுகிறார்."—ஆசி.] அற்புதமானது. அப்படியானால் நீங்கள் லூயிவில்லை விட்டுச் செல்லப் போகிறீர்கள். ["ஆம்."] ஓ, என்னே! லூயிவில்லிலிருந்து வந்துள்ள சகோதரன் காபெல் அவர்கள் பிரிந்து செல்வதை நாங்கள் வெறுக்கிறோம். சகோதரனே, உங்களுடைய இருதயம் ஆசீர்வதிக்கப்படுவதாக. என்னே!

38 நான் எப்பொழுதும் சகோதரன் காபிளை நினைவு கூருவேன். இந்த விலையேறப்பெற்ற சகோதரன், தேவனுடைய பரிசுத்தவான், அவரோடு என்னுடைய முதல் தொடர்பை நான் நினைவு கூருகிறேன். அவர் மரிக்கும்படியாக இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. சகோதரருக்குள்ளே அவருடைய மகத்தான பெயரை நான்—நான் அறிவேன். நான் அங்குச் சென்றேன். அங்கே மருத்துவமனையில் சகோதரர்கள் நின்று கொண்டிருந்தனர். நான், என்னைப் போன்ற ஒரு சிறு பையன், நான் உள்ளே செல்ல வெட்கமடைந்தேன், எனவே நான் மருத்துவமனை கூடத்தில் வெளியே இருந்த குளிர்பான கடைக்குப் பின்னால் முழங்காற்படியிட்டு, அவருக்காக ஜெபித்துவிட்டு திரும்பிச் சென்றேன்.

39 மீண்டும் தொலைபேசி ஒலித்தது, "நீங்கள் சகோதரன் காபிளைப் பார்க்க வரவில்லையே" என்றனர்.

40 நான் அங்குச் சென்றேன். அவர்கள் அவருடைய மூக்கில் ஏதோ ஒரு அறுவை சிகிச்சை செய்து, ஏதோ ஒன்றை வெட்டி, துண்டித்து, அவர் மரித்துப் போகும்படியாக இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அங்கே முழங்காற்படியிட்டு ஜெபித்தேன். அது உடனடியாக நின்றது.

41 எங்கள் பரலோகப் பிதாவே, அவர் உம்முடைய ஊழியக்காரனாயிருக்கிறார். இப்பொழுது அவர் எங்கள் மத்தியிலிருந்து நகர்ந்து கொண்டிருக்கிறார், ஆனால் கர்த்தாவே, நாங்கள் இன்னமும் இணைந்திருக்கிறோம். எங்கள் இதயங்கள் இப்பொழுது இருப்பது போல, ஒன்றோடொன்றாக, எப்போதும் துடிக்கும் என்று நான் ஜெபிக்கிறேன். பிதாவே, உம்முடைய மகத்தான ஊழியக்காரனுக்கு உதவி செய்ய அங்கே செல்லும் என் சகோதரனை ஆசீர்வதிக்குமாறு உம்மிடம் வேண்டுகிறேன், சகோதரன் பாரிஸ் ரீட்ஹெட், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். எல்லா அடிப்படைவாதிகளும் என்ன கூறினாலும் பொருட்படுத்தாமல், எப்படியும், அவர் இன்னமும் தேவனை விரும்புகிறார். சகோதரன் காபிளை ஆசீர்வதியும், கர்த்தாவே, அவர்களுடைய முயற்சிகளிலும், உமக்கான அவர்களுடைய பணியில் அவர்களை ஒருமித்து ஆசீர்வதியும். பவுல், சீலாவைப் போன்ற ஒரு குழுவாகச் பணியாற்றுவார்களாக. கர்த்தாவே, இதை அருளும்.

42 அவருக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அளியும். அவர் அந்த இடத்தைக் கண்டறிய அவர் ஏங்கியும், முயன்றும்,

அழுத்தியும், தள்ளியும் பார்த்தார், அங்கே கர்த்தாவே, நீர் உண்மையாகவே அவரை நிரப்பி, அவருக்காக மகத்தான காரியங்களைத் திறந்து கொடுக்க முடியும். கர்த்தாவே, நீர் அவரைப் பயிற்றுவித்து இந்த நேரத்திற்காக ஜெபித்த நேரம் இதுவாகவே இருப்பதாக, கர்த்தாவே, ஏனென்றால் நாங்கள் சாயங்கால நேரத்தில் இருக்கிறோம். கர்த்தாவே, அவருடைய சரீரத்தை பலப்படுத்தும். அவருக்குப் பெலன் தேவை. இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின வல்லமை, அவருடைய சரீரத்திற்கு சுகத்தைக் கொண்டு வருவதாக, மறுரூபப்படுத்தும் வல்லமையை, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையில் அவர் செல்வாராக. நாங்கள் அவரை ஆசீர்வதிக்கிறோம்.

43 சகோதரன் காபெல், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! சகோதரர் பாரிஸுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள், நான் உங்கள் அனைவரையும் பின்னர் சந்திப்பேன் என்று நம்புகிறேன். நான் வெளிநாட்டிற்குச் செல்கிறேன், இந்தியாவிற்கு. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சகோதரியே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? சகோதரனே, உங்களுக்கு நன்றி.

44 கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் இந்தச் சிறு பெண்மணியைக் கொண்டு வரும்போது, எங்களுடைய கரங்களை அவள்மேல் வைத்து, அவளோடு எங்களை இணைத்துக் கொண்டு, பலியைக் குறித்து, நீர் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறீர் என்பதை அறிந்து, நான் அவளுடைய சுகமளித்தலுக்காக இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

45 இங்கே தொங்கின தோளோடும், நரைமுடியோடும் நின்று கொண்டிருக்கிற இந்தத் தாய்க்கு, அவள் வரப்போகும் உலகத்திற்காக உறைந்திருப்பதைக் காண்பிக்கிறது. தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுவை கல்லறையிலிருந்து எழுப்பின வல்லமை, நாங்கள் எங்கள் கரங்களை அவள்மீது வைக்கையில், அவளோடும் கிறிஸ்துவோடும் எங்களை இணைத்துக் கொண்டு, கல்லறையிலிருந்து அவரை எழுப்பின வல்லமை, இயேசுவின் நாமத்தில், அவளுடைய சரீரத்தை குணப்படுத்துவதாக.

என் சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

46 பரலோகப் பிதாவே, அதேபோல நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் சகோதரியின் மேல் கரங்களை வைக்கும்போது, தேவனுடைய மகிமைக்காக அவள் சுகமடைவாளாக. ஆமென்.

47 கிருபையுள்ள பிதாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நாங்கள் எங்கள் சகோதரியின் மேல் கரங்களை வைக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், தேவனுடைய மகிமைக்காக அவள் சுகமடைவாளாக. ஆமென்.

சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

48 பரலோகப் பிதாவே, நாங்கள் எங்களுடைய கரங்களை இங்கே எங்களுடைய சகோதரன் மீது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவருடைய சுகமளித்தலுக்காக வைக்கிறோம். இயேசுவின் நாமத்தில் அவர் சுகமடைவாராக.

49 எங்கள் பரலோகப் பிதாவே, எங்களுடைய சகோதரிகளில் ஒருவள் கூட்டத்தில் இருப்பதற்காக வெகுதூரம் பிரயாணம் செய்கிறாள், ஆனால் அவள் இந்தக் காலையில் நிற்கிறாள், கர்த்தாவே, சுவிசேஷத்தில் நாங்கள் எங்கள் கரங்களை ஒருவருக்கொருவர் மற்றும் அவள் மீது வைத்து, எங்களை இணைத்துக் கொள்கிறோம். பரலோகத்தின் தேவன் அதைக் கண்டு கொள்வாராக, அங்கே, "பூமியின் மேல் இரண்டு அல்லது மூன்று பேர் ஒருமனப்பட்டிருந்தால்" என்று கூறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இங்கே நாங்கள் மூன்று பேர் சேர்ந்து நிற்கிறோம். கர்த்தாவே, இயேசுவின் நாமத்தில் அவளைச் சுகப்படுத்தும்.

50 அவ்வாறே கர்த்தாவே, இங்குள்ள எங்கள் சகோதரியின் மேல் நாங்கள் எங்கள் கரங்களை வைக்கிறோம். நாங்கள் ஒப்புக்கொள்கிறபடி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவள் சுகமடைவாளாக.

51 பரலோகப் பிதாவே, அவருடைய அற்புதமான கிறிஸ்தவ வாழ்க்கை...மனைவிக்குப் புற்று நோய் உள்ளது. ஓ தேவனே, அவர் அவளுக்காக நிற்கிறார். கிறிஸ்து அவளுக்காக நிற்கிறார்.

இப்பொழுது, பிசாசே, நீ இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளை விட்டுப் போ.

52 சகோதரனே, அதை விசுவாசியுங்கள். இது இங்கே கீழே அடிக்கப்பட்ட ஒரு முளை. இந்த நாளை நினைவில் கொள்ளுங்கள்.

53 எங்கள் பரலோகப் பிதாவே, கர்த்தாவே, இது எங்களிடத்தில் வருகிற எங்கள் சகோதரி. அவள் ஒரு உதாரணமான ஜீவியமாக ஜீவிக்கிறாள், அவள் தன்னுடைய சுகமளித்தலுக்காக வருகிறாள். நாங்கள் எங்களுடைய இருதயங்களையும், கரங்களையும் உம்மோடு இணைத்து, கர்த்தாவே, நாங்கள் இந்த ஆசீர்வாதத்திற்காக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம்.

54 உம்முடைய ஊழியக்காரியாகிய கர்த்தாவே, எங்களுடைய சகோதரி ரைஸர்ட் இந்தக் கிறிஸ்துமஸ் பண்டிகை நேரத்தில் வந்திருக்கிறாள். இயேசுவின் நாமத்தில், அவள் சுகமடையட்டும். ஆமென்.

55 பரலோகப் பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இந்தக் காலையில் இந்த அருமையான சிறு பெண்ணை நாங்கள் கொண்டு வருகிறோம். நாங்கள் எங்களுடைய கரங்களை அவள்மீது வைத்து, அவளுடைய சுகத்தை இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

56 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் வந்து, அந்த மகா பரிசுத்த நாமத்தில், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், எங்களுடைய சகோதரியின் மேல் கரங்களை வைக்கிறோம். தேவனுடைய மகிமைக்காக அவள் சுகமடைவாளாக.

57 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இன்றைக்கு எங்களுடைய சகோதரியை உம்மிடம் கொண்டு வரும்போது, உம்முடைய கிருபையின் ஒரு வெற்றிச் சின்னம், நீர் இந்த ஸ்திரீக்கு எப்படிப்பட்டவராய் இருந்து வந்திருக்கிறீர். அநேக ஆண்டுகளுக்கு முன்பு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, ஒரு சில மணி நேரங்கள் மட்டுமே உயிர் வாழ இருந்த நிலையில், அவள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தாள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், என்னவெல்லாம் தவறாக இருந்தாலும் கர்த்தாவே, இன்றைக்கு அவளைச் சுகப்படுத்தும். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

58 எங்கள் பரலோகப் பிதாவே, எங்கள் சகோதரியும் தேவனுடைய கிருபையின் ஒரு வெற்றிச் சின்னமாகவும் கூட இருப்பதால், நிர்பாக்கியமுள்ள, பரிதாபமான போதைக்கு அடிமையாகி, குடிகாரியாகி, இப்பொழுது முழுமையடைந்த ஒரு அழகான பெண்மணியாக நிற்கிறாள். கர்த்தாவே, என்னே ஒரு சுகமளித்தல்! அப்பொழுது அவளுடைய இருதயம் பாதிக்கப்பட்டுள்ள மற்றவர்களுக்காகக் கொழுந்துவிட்டு எரிகிறது, ஏனென்றால் ஒரு மகத்தான சுகமளிப்பவர் ஒருவர் இருக்கிறார் என்பதை அவள் அறிந்திருக்கிறாள். பிதாவே, அவள் இப்பொழுது மூன்று வெவ்வேறு பெயர்களைப் பேசினாள். இங்குள்ள நம்முடைய சகோதரனுடனும், நம்முடைய போதகருடனும், கர்த்தராகிய இயேசுவோடும் என்னை இணைந்து கொண்டு நான் ஜெபிக்கிறேன். அவருடைய மகிமையான நாமத்தில், இந்த மூன்று ஜனங்களும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஒப்புவிக்கப்படுவார்களாக. ஆமென்.

சகோதரனே, உங்களுக்கு நன்றி.

59 மகிமையான பிதாவே, இப்பொழுது நாங்கள் எங்களுடைய சகோதரன் வே மீது கரங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவர் மூன்று காரியங்களைக் கேட்கிறார். கர்த்தாவே, அவைகளை நீர் அறிந்திருக்கிறீர். அது எழுதப்பட்டிருக்கிறது என்று நாங்கள் விசுவாசித்து, வேதம், “எல்லாவற்றையும்” என்று கூறுகிறது என்பதை அறிவோம். ஆகையால் பரலோகப் பிதாவே, அதாவது இதை, அவர் கேட்டிருக்கிறபடியால், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவருக்குப் வெளிப்படுத்தப்படட்டும். ஆமென்.

60 மகிமையான பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் நாங்கள் எங்கள் சகோதரன்மேல் கரங்களை வைக்கிறோம், தேவனுடைய மகிமைக்காக அவருடைய சுகமளித்தலுக்காக

வேண்டிக்கொள்கிறோம். பிதாவே, இயேசுவின் நாமத்தில் இதை அருளும். ஆமென்.

61 பரலோகப் பிதாவே, எங்களுடைய சகோதரியின் மேல் நாங்கள் எங்களுடைய கரங்களை, தேவனுடைய இராஜ்ஜியத்தின் நிமித்தமாக வைத்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவர் செய்யும்படி கூறினதற்கு கீழ்படிய வேண்டும். இயேசுவின் நாமத்தில் அவள் சுகமடைவாளாக. ஆமென்.

சகோதரியே, உங்களை ஆசீர்வதிப்பாராக.

62 பிதாவாகிய தேவனே, அவ்வாறே, எங்களுடைய சகோதரன்மீது, நாங்கள் எங்களுடைய கரங்களை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வைத்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் நிமித்தமாக, நீர் அவரைச் சுகப்படுத்துவீராக. ஆமென்.

என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சகோதரி ஆர்கன்பிரைட்.

63 பரலோகப் பிதாவே, சகோதரி ஆர்கன்பிரைட்டை நீர் சுகப்படுத்த வேண்டும் என்று நாங்கள் அவளுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தாவே, அதை அருளும். அவளுடைய வேண்டுகோள், அது அவளுக்கு அளிக்கப்படுவதாக, எங்கள் பரலோகப் பிதாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

64 கர்த்தராகிய இயேசுவே, எங்கள் சகோதரன்மேல் கரங்களை வைத்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவருடைய விண்ணப்பம் அருளப்படுவதாக.

என் சகோதரனே, இதை விசுவாசி.

65 பரலோகப் பிதாவே, நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தச் சிறு பையன் மீது கரங்களை வைத்து, நாங்கள் இந்தக் காலையில் விசுவாசத்தினால் ஒன்று சேர்ந்து நிற்கையில், நாங்கள் இந்தக் குழந்தையை உம்மிடம் கொண்டு வருகிறோம். தேவனுடைய ஆசீர்வாதங்கள், கிறிஸ்துவின் சுகமளிக்கும் வல்லமை, இயேசுவின் நாமத்தில் அவனுடைய சிறிய சரீரத்தில் வெளிப்படுவதாக. ஆமென்.

66 பிதாவாகிய தேவனே, அவனைக் கொண்டு வரும் இந்த அருமையான தந்தையின் மேல், நீர் உம்முடைய சுகமளிக்கும் வல்லமையை இயேசுவின் நாமத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்.

என் சகோதரனே, உன்னை ஆசீர்வதிக்கிறேன்.

67 பரலோகப் பிதாவே, சகோதரி பெக்கின்பாக், தேவையுள்ள எங்களுடைய உன்னதமான சகோதரி என்ற முறையில், கர்த்தாவே, நீர் அவளுக்கு எவ்வளவு கிருபையாய் இருந்து வருகிறீர். உம்முடைய ஆசீர்வாதங்களின் தொடர்ச்சி அவளுடைய இருதயத்திற்குள் பாய்ந்தோட வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். அவள் கடந்து வந்திருக்கிற எல்லா சுகவீனத்தையும், துக்கத்தையும்,

கிறிஸ்துவின் வல்லமை அவளுக்கு நூறு மடங்காகத் திரும்ப அளித்து, கர்த்தாவே, இயேசுவின் நாமத்தில், அவளுடைய அன்பார்ந்தவர்களை, அவளை முற்றிலும் சுகமாக்குவதாக. ஆமென்.

உங்களை ஆசீர்வதிப்பாராக.

68 பரலோகப் பிதாவே, நாங்கள் எங்கள் சகோதரன் மீது கரங்களை வைத்து, இயேசு கிறிஸ்துவின் வல்லமை அவரைச் சுகமாக்கி, இந்த கிறிஸ்துவின்-பிள்ளையின் நாமத்தினூடாக நாங்கள் இந்த நேரத்தின் கொண்டாட்டத்தில் இருக்கிறோம். ஆமென்.

69 கிருபையுள்ள தேவனே, நாங்கள் எங்களுடைய கரங்களை உம்முடைய ஊழியக்காரியாகிய எங்களுடைய சகோதரியின் மேல் வைக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உம்முடைய மகிமைக்காக அவள் சுகமடைவாளாக.

70 கர்த்தாவே, நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் சகோதரியின் மேல் கரங்களை வைக்கிறோம். அவள் சுகமடைவாளாக. ஆமென்.

71 பரலோகப் பிதாவே, நாங்கள் இங்கே எங்கள் சகோதரியின் மேல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கரங்களை வைக்கிறோம். தேவனுடைய வல்லமை அவளைச் சுகமடையச் செய்வதாக. ஆமென்.

72 கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் தேவனுடைய மகிமைக்காக இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறபடியால், எங்கள் சகோதரியின் வேண்டுகோளை அருளும்.

73 எங்கள் பரலோகப் பிதாவே, எங்களுடைய சிறிய சகோதரி இத்தனை ஆண்டுகளாக இன்னமும் எங்களோடு இருப்பதை நாங்கள் காண்கிறோம். கர்த்தாவே, நாங்கள் அதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் அவளுடைய வேண்டுகோளை இயேசுவின் நாமத்தில் அவளுக்கு அளிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

தேவனாகிய கர்த்தர்…

74 என்ன? [அந்தச் சகோதரி சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்—ஆசி.] தேவன் சர்வ வியாபியாக, சமுத்திரங்களைக் கடந்து, இங்கே, எங்கும் இருக்கிறார். தேவன் இன்று காலை நார்வேயில் அவரைச் சுகமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [அந்தச் சகோதரி சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்.] என்ன? உங்களுடைய மகளுக்கும், உங்களுடைய தகப்பனாருக்கும், இரட்சிப்பிற்கு நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்க விரும்புகிறீர்கள்.

75 கர்த்தாவே, நீர் அந்தச் சிறு பெண்மணியைக் காண்கிறீர், அவளுடைய வேண்டுகோள்களை நீர் அறிந்திருக்கிறீர் என்பதை நாங்கள் அறிவோம். நீர் அவளுடைய சத்தத்தைக் கேட்டீர்.

அவள் இங்கே நின்று கொண்டிருக்கிறாள் என்பதை நீர் எப்படி அறிவீர்? நீர் அதை அறியாமல் ஒரு அடைக்கலான் குருவி கூட வீதியில் விழ முடியாது. ஆகையால் நீர் இந்த வேண்டுகோளை அறிந்திருக்கிறீர் என்பதை நான் அறிவேன், எனவே நாங்கள் இந்தக் காரியங்களை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அழைக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலமாக அவைகள் அவளுக்கு அருளப்படுவதாக.

76 பரலோகப் பிதாவே, அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கும் வயோதிகத்திலுள்ள அவருடைய தாயாருக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். தேவனே, உதவி செய்யும். கர்த்தாவே, நாங்கள் இன்னும் ஏதாகிலும் செய்ய முடிந்தால், அதை என்னிடத்திலோ அல்லது வேறு யாரிடத்திலோ கூறும், இந்த நாளுக்கு முன்னர், நம்முடைய சகோதரனுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். பிதாவே, இதை அருளும். நான் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

77 கர்த்தாவே, நாங்கள் எங்கள் சகோதரியின் மேல் கரங்களை வைக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நீர் அவளைச் சுகப்படுத்தி, அவளைச் சுகப்படுத்துவீராக. ஆமென்.

78 [ஒரு சகோதரி, “சகோதரன் பிரான்ஹாம், நான் நிற்க விரும்புகிறேன். நீங்கள் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்…?…”—ஆசி.]

பரலோகத்தின் தேவன் அவளுடைய வேண்டுகோளை அருளுவாராக. இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.

சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் தான் சகோதரி மார்கரெட். ஆம். சரி.

79 கர்த்தராகிய இயேசுவே, எங்களுடைய—எங்களுடைய சகோதரிக்காக நான் ஜெபிக்கிறேன், அவளுடைய கணவர் அவளுக்காக நிற்கிறார். அவர்கள் எப்படியாய் போராடுகிறார்கள், எப்படியாய் நீர் உம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, தேவனே, உம்மை அவர்களுக்குக் காண்பித்திருக்கிறீர்! நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். கர்த்தாவே, அவருடைய மனைவி குணமடைய அருள்புரியும், எங்கள் விலையேறப்பெற்ற சகோதரி, இயேசுவின் நாமத்தில்.

80 பரலோகப் பிதாவே, இந்தச் சகோதரன் கேட்டுக் கொண்டிருக்கிற இந்த வேண்டுகோள், கர்த்தாவே, இந்த நிலைமைகளைக் குறித்த எல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர். நான் உம்முடைய ஊழியக்காரனுக்காக ஜெபிக்கிறேன். தேவனே, அவர் பேசிக்கொண்டிருக்கிற சரீரங்களின் சுகமளித்தலுக்காக, அருளும். இப்பொழுது, நான் கேட்டதைக் காட்டிலும் நீர் அந்த வேண்டுகோள்களுக்குச் செவி கொடுத்திருக்கிறீர். எனவே நான் என்னுடைய இருதயத்தைத் திறந்து உம்முடைய பலிபீடத்தின் மேல்

வேண்டிக்கொள்கிறேன், இங்குள்ள என்னுடைய சகோதரனோடு என்னுடைய ஜெபத்தை வைக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அதாவது அவைகள் பதிலளிக்கப்படும். ஆமென்.

81 பரலோகப் பிதாவே, எங்கள் சகோதரியின் வேண்டுகோளுக்காக நாங்கள் கரங்களை அவள் மேல் வைக்கிறோம். அது இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளுக்கு அருளப்படுவதாக. ஆமென்.

சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

82 கர்த்தாவே, நாங்கள் எங்களுடைய சகோதரியின் வேண்டுகோளுக்காக அவள் மேல் கரங்களை வைக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அது அருளப்படுவதாக.

83 பிதாவாகிய தேவனே, இங்குள்ள எங்களுடைய சகோதரனின் மேல், அவருடைய வேண்டுகோள், கர்த்தாவே அவருக்கு அளிக்கப்படுவதாக. இத்தனை ஆண்டுகளாக அவர் உமக்குச் சேவை செய்ய முயன்று வருகிறார். கடினமாக இருந்தாலும், அவர் இன்னமும் சரியாக நிற்கிறார். தேவனே, அவர் உமக்குச் இந்தக் காலையில் பலிபீடத்தின் கொம்பைப் பற்றிப் பிடித்து, இங்கே பக்கவாட்டில் உள்ள முளையை கீழே இறக்குவாராக, "இதுவே அது வருகிற வேளையாயிருக்கிறது." அதை அருளும். இயேசுவின் நாமத்தில் அவருடைய மனைவி மற்றும் பேரப்பிள்ளைக்காக இந்த வேண்டுகோள் அருளப்படுவதாக.

சகோதரன் ப்ரூஸ்டர், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அதை விசுவாசியுங்கள்.

84 எங்களுடைய பரலோகப் பிதாவே, இந்தக் காலையில் இங்கே நின்றுகொண்டிருக்கிற இந்தச் சிறிய தாயார் அநேகருக்கு ஒரு தாயைப் போன்று இருந்து வருகிறாள். இப்பொழுது கர்த்தாவே, அவள் தன்னுடைய அன்பார்ந்தவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். அவள் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள், நாம்…எல்லாரும் ஒன்று சேர்ந்து, நாங்கள் இதை விசுவாசிக்கும்படியாக, ஒரு குழுவாக, நம்முடைய கரங்களை அவள்மீது வைக்கிறோம். எங்களுடைய இருதயங்கள் உம்முடைய பீடத்திற்கு முன்பாக, அவள் கேட்கும் இந்த வேண்டுகோளை, இயேசுவின் நாமத்தில் அருளும்படியாக நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

85 தேவனே, இந்த நேரத்தில் அவருடைய இருதயத்தில் உள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்காகவும் அவர் நின்று கொண்டிருக்கிறதை நீர் அறிவீர். கர்த்தாவே, நாங்கள் எங்களை அவரோடு வைத்துள்ளோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவருடைய விண்ணப்பம் அருளப்படுவதாக. ஆமென்.

86 ஓ தேவனே, நாங்கள் சகோதரி ஹாட்டியை அறிவோம். தேவனே, நாங்கள் எங்களுடைய கரங்களை அவள்மீது வைக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அவளோடு இருந்து,

அவளுடைய இருதயத்திற்கு திரும்ப வெளிப்படுத்தும்படி அருள் புரியும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் அவளுடைய விலையேறப்பெற்ற பையன்களை, அவர்கள் இருவரையும் குறித்து நினைத்துப் பார்க்கிறோம். அந்த நாளில் அந்த அறையில், ஒரு சிறிய, தாழ்மையான வீட்டில் அமர்ந்திருந்ததைக் குறித்து நான் நினைக்கிறேன். நீர், "அவளிடம் அவளுக்கு என்ன கேட்க வேண்டுமோ கேட்கச் சொல், பிறகு வார்த்தையைச் சொல்." என்று கூறினீர். அவள் கேட்டாள். தேவனே, நீர் இந்த ஜனங்களுக்காக அக்கறை கொண்டிருக்கிறீர் என்பதை நான் அறிவேன். எனவே நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவள்மீது கரங்களை வைக்கையில், அவளுடைய வேண்டுகோள் அருளப்படுவதாக.

87 தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் எங்களுடைய சிறிய சகோதரியின் மேல் கரங்களை வைக்கையில், இந்த வழவழப்பான சாலைகள் மற்றும் காரியங்களினூடாகக் காரோட்டி, இங்கு வர முயற்சிக்கின்றனர். நீர் அதைக் குறித்த எல்லாவற்றையும் அறிவீர். கர்த்தாவே, நான் என்னுடைய கரங்களை அவள்மீது வைக்கையில், நான் அவளுக்காக ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவள் கேட்டுக்கொண்டதைப் பெற்றுக்கொள்வாளாக. ஆமென்.

88 எங்கள் பரலோகப் பிதாவே, இந்தச் சகோதரனைப்... கர்த்தாவே, ஒருமுறை அவர் எவ்வளவு உறுதியாக இருந்தார், அந்தப் பழைய சிகரெட்டுகளும் மற்றவைகளும் அவரைக் கட்டிப் போட்டிருந்தன. அவருக்கு ஒரே ஒரு நேர்காணல் கிடைப்பதற்கு அவர் காத்துக்கொண்டே இருப்பார். நீர் எங்களுக்கு ஒன்றையும் கூறமாட்டீர். அவர் மற்றொன்றைப் பெற்றுக் கொள்வார். நீர் காத்துக் கொண்டே இருப்பீர், நீர் எங்களுக்கு எதையும் கூறமாட்டீர். முடிவிலே, ஒரு காலையில், அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், இதோ அது வந்தது. அப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது. கர்த்தாவே, நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் உண்மையாய் இருக்கிறீர். உம்முடைய வார்த்தைகள் ஒருபோதும் தவறுவதில்லை. அவர், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைவார்கள்" என்றார். இப்பொழுது, கர்த்தாவே, அவர் இந்தக் காலையில் மூன்று வேண்டுகோள்களோடு வருகிறார். ஒரே தேவனில் செய்யப்பட்ட ஒரு—ஒரு திரித்துவ உத்தியோகத்தின் வாக்குத்தத்தத்தோடு, நாங்கள் மூன்றாக நிற்கிறோம். அந்த ஒரே உண்மையான ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவருடைய விண்ணப்பம் அவருக்கு அளிக்கப்படுவதாக. ஆமென்.

சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தர்...

ஓ, என்னே! [ஒரு சகோதரி சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்—ஆசி.]

89 கர்த்தாவே, நீர் அந்த விண்ணப்பங்களுக்குச் செவிகொடும். கர்த்தாவே, அவர்களுக்கு எப்படி பதில் சொல்ல வேண்டும் என்பதை நீர் அறிந்திருக்கிறீர். எனவே நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் சகோதரி பேக்கர் மீது கைகளை வைத்து, சுகமளித்தலுக்காக நாங்கள் எங்களுடைய விண்ணப்பங்களை அவளுடைய விண்ணப்பங்களோடு சமர்ப்பிக்கிறோம். ஆமென்.

என் சகோதரியே, உன்னை ஆசீர்வதிப்பாராக.

90 [சகோதரன் நெவில், "எவரேனும் உள்ளே வர வேண்டுமானால், இப்போதே உள்ளே வாருங்கள்" என்கிறார்.—ஆசி.]

91 பரலோகப் பிதாவே, இந்த அருமையான சகோதரன் மீது நான் கரங்களை வைக்கையில், இன்றைக்கு ஆரோக்கியத்தின் காட்சியைப் போன்றே காணப்படுகின்றன, ஆனால் சில சமயங்களில் அது வஞ்சிக்கத்தக்கதாக இருக்கிறது. ஆகையால் அவருடைய இருதயத்தில் என்னவாயிருந்தாலும், அவருடைய வேண்டுகோளை நீர் அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவர் கேட்டதை அவருக்குக் கொடும். ஆமென்.

92 பரலோகப் பிதாவே, நாங்கள் எங்களுடைய சகோதரியின் மேல் கரங்களை வைத்து, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நீர் உம்முடைய மகிமைக்காக அவளுடைய வேண்டுகோளை அவளுக்குத் தருவீர். ஆமென்.

93 கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் எங்களுடைய சகோதரன்மேல் கரங்களை வைத்து, அவருடைய வேண்டுகோளுக்காக வேண்டிக்கொள்கிறோம். கர்த்தாவே, நாங்கள் அவர் மீது கரங்களை வைக்கையில், நாங்கள் இதை அடையாளங்காட்டுகிறோம். நாம் நம்மை இணைத்துக் கொள்கிறோம், இந்த ஐக்கியத்தில் நாங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

94 பிதாவாகிய தேவனே, எங்களுடைய சகோதரியோடும் கூட, நாங்கள் அவ்விதமாகவே செய்தோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவளுடைய வேண்டுகோளை அவள் பெற்றுக்கொள்வாளாக.

என் சகோதரியே, உன்னை ஆசீர்வதிப்பாராக.

95 தேவனே, எங்கள் விலையேறப்பெற்ற சகோதரன் அன்றொரு நாள் கொல்லப்பட்டிருக்கலாம், ஆனால் நீர் அவருக்காக ஆயத்தமாக வைத்திருக்கவில்லை. எனவே தேவனே, நீர் அவருடைய வேண்டுகோளை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவருக்குத் தர வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

அதை எப்படி விசுவாசிக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

96 எங்கள் பரலோகப் பிதாவே, எங்களுடைய சிறிய, பதட்டமான சகோதரி முன்னோக்கி வரும்போது, கர்த்தாவே, அவளுடைய துன்பங்கள் அநேகமாயிருந்து வருகின்றன என்பதை அறிந்திருக்கிறேன். ஆனால் நீர், “நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், ஆனால் அவைகள் எல்லாவற்றிலும் தேவன் அவனை விடுவிப்பார்” என்று வாக்குரைத்திருக்கிறீர். கர்த்தாவே, அவளுக்கு இந்த விடுதலை மிகவும் தேவைப்படுகிறது. நாங்கள் அவள்மீது கரங்களை வைத்து, இந்தத் பொல்லாங்கைக் கண்டிக்கிறோம். கர்த்தாவே, உம்முடைய பொன் பலிபீடத்தின் மேல், தேவனுடைய வல்லமை அவளை எழுச்சியடையச் செய்து, அவளைச் சுகமாக்குவதாக...?...

97 சரி. நீங்கள் எல்லோரும் தங்கியிருக்கப் போகிறீர்கள். நீங்கள் இவ்வளவு நேரமும் அங்கே பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தீர்களா? ஆம். நான் உங்களைக் காணவில்லை. ஓ, நீங்கள், *இங்கே* இருக்கிறீர்கள். வியப்பொன்றுமில்லை. இது அழைக்கப்பட்ட ஒரு மனிதன், அவர்கள் அவரை, “மைனர்” என்று அழைக்கிறார்கள். அதுதான் அவனுடைய பெயர். ஆனால் இந்த ஒரு முறை மட்டும் மைனர் ஒரு பெரியவராக இருக்கிறார். [சகோதரர் மைனர் ஆர்கன்பிரைட், “என்ன சொன்னாய்?” என்கிறார்—ஆசி.] நீங்கள் எதை வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் கூறலாம்.

98 சகோதரன் மைனர் ஆர்கன்பிரைட் முழு சுவிசேஷ வர்த்தக புருஷர்களில்—ஒருவர்...இந்த மாபெரும் இயக்கத்தை உதவிக் கண்டறிந்தவர்களில் ஒருவர், எல்லா மனிதரையும் அடையாளங்கண்டு கொள்ளும்படியாக நாம் ஒன்று சேர்ந்து கிரியை செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறோம், அவர்கள் எந்த ஸ்தாபனத்தில் இணைந்திருந்தாலும், ஸ்தாபனமாயிருந்தாலும், நாம் யாவரும் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாய் இருக்கிறோம்.

99 அன்றொரு நாள் அவர் ஒரு சிறு காரியத்தைக் கூறினார். அவர் அங்குள்ள ஒரு சட்டமன்ற மேலவை உறுப்பினருக்கு அல்லது அது போன்ற ஒருவருக்கோ எழுதினார். அது முற்றிலும் அற்புதமாக இருந்தது. மேலும் நான், “நீங்கள் அதை எழுதி வைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் சபைக்கு வந்து இதைக் கூற வேண்டும் என்று விரும்புகிறேன்” என்றேன்.

அவர், “நான் அதை ஏற்கனவே கூறிவிட்டேன்” என்றார்.

எனவே நாம் அதை இங்கே ஒலிநாடாவில் பதிவு செய்துள்ளோம். சகோதரர்களே, நான் அதை ஒலிநாடாவில் பதிவு செய்ய விரும்புகிறேன். சகோதரன் ஜிம், நீங்கள் அங்குள்ள அறையில், நான் பேசுவதைக் கேட்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். எனக்கு அது வேண்டும். அது ஒரு உண்மையான இராஜதந்திர துணுக்கு, அதனோடு சேர்க்கப்பட்டது. பார்த்தீர்களா? சரி.

100 சகோதரன் ஆர்கன்பிரைட், நீங்கள் விரும்புவதைக் கூறுங்கள். [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] ஆமென். ஆமென்.

101 [சகோதரன் ஆர்கன்பிரைட், "நான் அங்கே உட்காரட்டும். அதெல்லாம் சரிதான், சரியாக அங்கேதான்."—ஆசி.]

102 எவ்வளவு உண்மை! ஆமென். எவ்வளவு உண்மை! சமாதானம் உண்டாகிறது, போகிறது, இன்பங்கள் மறைந்து போகின்றன, ஆனால் சந்தோஷம் நிலைத்திருக்கிறது.

103 பாருங்கள், வெளியே இது ஒரு—இது ஒரு—ஒரு மோசமான நாள், உள்ளே ஒரு நல்ல நாள். மேலும், உங்களுக்குத் தெரியும், நான் ஒரு மனிதனை சந்தித்தேன், இல்லை சமீபத்தில் ஒரு மனிதனை சந்தித்ததாக என்னிடம் கூறின ஒரு மனிதனை, அவர் குறை கூறிக்கொண்டிருந்ததாகக் கூறினார். "ஓ," "இது ஒரு பயங்கரமான நாள்" என்றார். மழை பெய்து கொண்டிருந்தது என்றும், தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

அவர், "இது ஒரு அற்புதமான நாள்" என்றார்.

104 அந்த நபர், "பாருங்கள், நீங்கள் எப்படி இதை ஒரு அற்புதமான நாள் என்று அழைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

105 அதற்கு அவர், "நான் உங்களுக்குக் கூறுவேன். நான் உயிர் வாழ ஒரு வாரம் மாத்திரமே உள்ளதாக மருத்துவர் ஒரு வருடத்திற்கு முன்னர் என்னிடம் கூறினார்" என்றார். மேலும், "ஒவ்வொரு நாளும், பாருங்கள், அது ஒரு அற்புதமான நாளாக இருக்கிறது" என்றார். ஆம்.

106 எனவே அது உண்மை, இது—இது ஒரு அற்புதமான நாள், எனவே நாம் யாவரும்…என்ன…அந்தச் சகோதரன் கூறினது போலவே, "நாம் யாவரும் மரணத்திற்கேதுவாக ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டோம்." அது உண்மை, மரித்து, வேதனைக்குச் செல்லுதல். ஆனால் இப்பொழுது இது ஒரு அற்புதமான நாளாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் உயிரோடிருக்கிறோம், இனி ஒருபோதும் மரிக்க முடியாது. நீங்கள் பாருங்கள், எல்லாம் முடிந்துவிட்டது. நாம் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். இப்பொழுது நாம்…

107 இப்பொழுது, கூடாரத்தில், சகோதரன் ஆர்கன்பிரைட், நான் வழக்கமாக என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்வேன். ஆகையால் இரவு உணவின்போது உங்களுக்குப் பசி எடுத்தால், நீங்கள் நழுவிச் செல்லலாம்…இன்று காலை மிகவும் சோர்வாக உணர்கிறேன், என்னால் பேச முடியும் வரை, என்னைச் சற்றே உற்சாகமாக வைத்திருக்க, இன்னொன்றைச் சொல்ல வேண்டியிருந்தது…கர்த்தருடைய ஆவி என்மேல் வருகிறது.

108 எனவே நாம் வார்த்தையை வாசிப்பதற்கு முன்பு இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்கி ஜெபிப்போமாக. ஒருவேளை

உங்களுக்காக ஜெபிக்கப்படாத வேறு எத்தனை காரியங்களுக்கான கோரிக்கைகள் உங்களிடம் உள்ளன, நீங்கள் உங்களுடைய கரங்களை உயர்த்தும்போது அதைத் தெரியப்படுத்துங்கள். இப்பொழுது இந்தக் காலையில் நாம்—நாம் ஜெபிக்கையில், எழுந்து நிற்போமாக. அது உங்களுடைய தோரணையை மாற்றிக் கொள்ளச் செய்ய, ஒருகால் சற்று உதவியாக இருக்கும். அதன்பின்னர் ஜெபத்திற்குப் பிறகு, நான் வார்த்தையை வாசிக்கும் வரை நீங்கள் ஒரு சில நிமிடங்கள் நின்றுகொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கையில் பயபக்தியோடு நிற்பது மகத்தானதாயுள்ளது என்று நான் நினைக்கிறேன்.

109 எங்களுடைய பரலோகப் பிதாவே, உலக ஆசைகள் மற்றும் அதன் இன்பங்கள் அனைத்திலிருந்தும் வெறுமையான இதயங்களுடன், எங்களுக்குத் தெரிந்த மிகத் தாழ்மையான முறையில் நாங்கள் வருகிறோம். எங்களுடைய சகோதரன், “சந்தோஷம், சந்தோஷம், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே எங்களுடைய பெலன் என்றார்” என்று எங்களுக்குக் கூறியுள்ளதை மேற்கோள் காட்டியுள்ளார். நாங்கள் உம்முடைய பிரசன்னத்திற்குள்ளாக வரும் இந்தச் சிலாக்கியத்தை உடையவர்களாயிருக்கிறபடியால், நாங்கள் வாஞ்சிக்கிற எந்த விண்ணப்பத்தையும் கேட்பதற்காக, மகிழ்ச்சியான இருதயங்களுடன் வருகிறோம். மேலும் நாங்கள் திருவசனத்தில் நோக்கும்போது அந்த மகிழ்ச்சி உண்டாகிறது. நாங்கள் அதை விசுவாசிப்போமானால், அது நமக்கு அருளப்படும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. அழியாத, நித்திய தேவன் அப்படிப்பட்ட ஒரு வாக்குத்தத்தத்தை அளித்தார் என்பதை அறிந்துகொள்வதைக் காட்டிலும், துடிக்கும் மனித இதயத்தை வேறு எது சிலிர்க்க வைக்க முடியும்?

110 இப்பொழுது கர்த்தாவே, எங்களை மன்னியும். நாங்கள் பாவம் செய்திருந்தாலும் அல்லது உமக்குப் பிரியமில்லாத எந்தக் காரியத்தையாவது செய்திருந்தாலும், இந்த விஷயங்களைக் கேட்பதற்கு முன்பு…ஏனென்றால், “நம்முடைய இருதயங்கள் நம்மை ஆக்கினைக்குட்படுத்தவில்லையென்றால், நம்முடைய விண்ணப்பத்தை நாம் பெற்றிருக்கிறோம்” என்று எழுதியிருக்கிறதை நாங்கள் அறிவோம். ஆனால் இப்பொழுது நாங்கள் செய்திருக்கிற எல்லாவற்றையும் எங்களுக்கு மன்னியும். கர்த்தாவே, இரக்கத்தோடும், பரிதாபத்தோடும் எங்களை நோக்கிப் பாரும். கர்த்தாவே, நாங்கள் என்ன ஒரு பரிதாபமான கூட்டமாயிருக்கிறோம் என்பதைப் பாரும். சிறு மனிதர்களாகிய நாம், இப்பூமியில் ஊர்ந்து திரிந்து, இந்தப் பாவமான இடத்தில் மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறோம், ஆனால் நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் என்றோ ஒரு நாள் யாரோ ஒருவர் வரப்போகிறார் என்பதை நாம் அறிவோம் அது நம்மை இந்த இடத்திலிருந்து ஒரு மேலான

இடத்திற்கு உயர்த்தப் போகிறது, நாங்கள் இதில் களிகூருகிறோம்.

111 தேவனே, ஒவ்வொரு வேண்டுகோளுக்காகவும் நான் ஜெபிக்கிறேன். உயர்த்தின கரங்களுக்குப் பின்னால் இருந்ததை நீர் அறிந்திருக்கிறீர். கர்த்தாவே, இதை அவர்களுக்கு அருளும். நான் இந்தக் காலையில் எனக்காகவும், பெலனுக்காகவும், சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் உதவி செய்யும்படியான சத்தத்திற்காகவும் ஜெபிக்கிறேன். நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிற, இந்தக் கிறிஸ்துமஸ் காலத்தில், நீர் எங்களை ஒன்றுசேர்ந்து ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். கர்த்தாவே, கிறிஸ்துமஸின் உண்மையான ஆவியை நாங்கள் கண்டறிந்து கொள்வோமாக, அது என்றென்றும் எங்களோடு நிலைத்திருப்பதாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் அவருடைய நிமித்தமாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

112 இப்பொழுது, நீங்கள் சற்று நேரம் நிற்கும்போது, நான் இந்தக் காலையில் மீகாவின் புத்தகத்திலிருந்து ஓரிடத்தில் வாசிக்க விரும்புகிறேன்; மற்றொன்று, எபிரெயரிலிருந்து, எபிரெயர் 12-ம் அதிகாரம்,…நம்முடைய கிறிஸ்துமஸ் செய்திக்காக இந்தக் காலையில் நான் பேச விரும்புகிற ஒரு சிறு சூழலைத் திரட்டுவதற்காகவே. அது எபிரெயர் 12:25-ல் உள்ளது. இன்று காலை எழுந்தபோது நான் கொஞ்சம் அவசரப்பட வேண்டியிருந்தது, நான் பெற்றுக்கொள்ள விரும்பின, சரியாகக் கூறினால், நான் பெற்றுக்கொள்ள விரும்பிய எல்லா காரியங்களையும் நான் பெற்றிருக்கவில்லை. நான் மீகா 1-ம் அதிகாரத்தில் 2-ம் வசனத்திலிருந்து துவங்குகிறேன்.

> *…ஜனங்களே, கேளுங்கள், பூமியே, அதிலுள்ளவைகளே, செவிகொடுங்கள்;* ***கர்த்தராகிய*** *ஆண்டவர், தம்முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே, உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருப்பார்.*
>
> *இதோ,* ***கர்த்தர்*** *தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கி பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.*
>
> *மெழுகு அக்கினிக்கு முன்பாக உருகுகிறதுபோலவும், மலைகளிலிருந்து பாயுந்தண்ணீர் தரையைப் பிளக்கிறதுபோலவும், பர்வதங்கள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்.*

113 எபிரெயர் 12-ம் அதிகாரம் 25-ம் வசனத்தில் நாம் இதை வாசிக்கிறோம்.

> *பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க…*

*தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?*

114 இப்பொழுது, தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய வார்த்தையின் வாசிப்பில் உமது ஆசீர்வாதங்களை கூட்டுவீராக, மேலும், இன்று எங்கள் ஒவ்வொருவருக்கும், நீர் நாங்கள் அறிய வேண்டும் என விரும்பும் அந்தக் காரியத்தைத் தந்தருளும், நாங்கள் இங்கிருந்து புறப்பட்டபோது, நாங்கள் உம்முடைய பிரசன்னத்திலிருந்து வருகிறோம் என்பதை உணரும்படியாகவும், ஒரு—ஒரு புதிய தோற்றத்தோடும், ஒரு மேலான புரிந்துகொள்ளுதலோடும் முன்னோக்கி செல்லலாம், நாங்கள் இந்தக் கட்டிடத்திற்குள் வந்தபோது, நாங்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் அதிக தீர்மானத்தோடு நாங்கள் இருப்போமாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

அமரலாம்.

115 இப்பொழுது, ஒரு கிறிஸ்துமஸ் செய்திக்காக வாசிக்கப்பட்ட அந்த உரையை நான் கேட்டிருந்தால், சந்தேகத்திற்கு இடமின்றி, "இப்பொழுது அது ஒரு விநோதமான கிறிஸ்துமஸ் வாசிப்பு அல்லவா?" என்று நான் கூறியிருப்பேன்....சபைக்கு ஒரு வேளை சற்று வித்தியாசமான ஒன்றைக் கொண்டு வருவதே, இதைச் செய்வதில் என்னுடைய நோக்கம், ஏனென்றால் கிறிஸ்துமஸின் மூலம் வானொலியில் நீங்கள் நன்கு அறிந்திருந்த பழைய கதையைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருப்பீர்கள், கிழக்கிலிருந்து வான சாஸ்திரிகள் வந்து கிறிஸ்து பிள்ளையைக் கண்டறிதல், மேய்ப்பர்கள் வணங்குதல், நட்சத்திரம் தோன்றுதல், மற்றும் இந்தக் கிறிஸ்துமஸ் கதைகள் அனைத்தும் நம்முடைய இன்றைய மத நம்பிக்கையை உருவாக்குகின்றன. அவைகள் எல்லாம் மிக நன்றாக இருக்கிறது, அதற்காக நான்—நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். ஆனால் இன்று காலைச் சபையில் நான் நினைத்தேன்...அநேகமாக நம்முடைய போதகர், ஒருக்கால் இன்றிரவு அல்லது அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதன் பேரில் ஏதாவது ஒரு செய்தியைக் கொண்டு வரலாம். அப்பொழுது நான் ஜனங்களுக்குக் கிறிஸ்துமஸ் பற்றிய ஒரு—ஒரு மாற்றுக் கண்ணோட்டத்தை...வழங்க வேண்டும் என்று நினைத்தேன், நான்...நான் இந்தப் பாடப் பொருளைத் தெரிந்துகொண்டேன். இப்பொழுது ஒரு சில வார்த்தைகள்.

116 இப்பொழுது நீங்கள் இடங்களை மாற்றிக்கொண்டிருப்பதையும், சிலர் நின்று கொண்டிருப்பதையும், சிலர் உட்கார்ந்து கொண்டிருப்பதையும் நான் காண்கிறேன். அது—அது அருமையானது. சீக்கிரத்தில் நமக்கு இடம் கிடைக்கும், எனவே நாம்...முடியவில்லை, மன்னிக்கவும், தீயணைப்பு அதிகாரி எங்களை அனுமதிக்காததால் இந்த இடைவழிகளை நிரப்ப எங்களால் அனுமதிக்க முடியாது. ஆனால் கர்த்தருக்கு சித்தமானால், நாம் மிக

விரைவில் ஒரு சிறு கூட்டம் சேர்ப்போம். அவர்கள் ஏற்கனவே அதன் பேரில் துவங்கிவிட்டனர், மேலும்—மேலும் நம்மால் முடிந்தளவு சீக்கிரத்தில் நாம் அதைச் செய்வோம், அது அந்த இடத்தின் பொருள் பாகத்திற்கு வரும்போது, அது முற்றிலும் ஒரு வித்தியாசமான இடமாக இருக்கும். அங்கே உண்மையாகவே காண்பிக்கப்படும் பழைய கூடாரத்தில் ஒன்றுமே இருக்காது. அது…அங்கே கறை படிந்த கண்ணாடி ஜன்னல்கள் இருக்கும், அதைச் சுற்றிலும் செங்கல் மேலோடு இருக்கும். அங்கே…அது முற்றிலும் வித்தியாசமாக இருக்கும். ஆனால் அந்தப் பழைய கட்டிடம் இங்கேயே இருக்கும், ஏனென்றால் நாம் அதற்கான ஒரு நோக்கத்தை உடையவர்களாயிருக்கிறோம், பாருங்கள். "பழைய சுவர்கள் நிலைத்திருக்கட்டும்," பாருங்கள். நாங்கள் அதை மூடி, சுற்றிலும் கற்களை அடுக்கி, அதுபோலவே செய்வோம், ஆனால் அது அப்படியேதான் இருக்கும்.

117 இப்பொழுது, கிறிஸ்துமஸ். கிறிஸ்மஸ் என்றால் என்ன என்பதை இந்த உலகத்தில் உள்ள ஜனங்கள் உண்மையாகவே புரிந்து கொள்ள வேண்டும் என்று நான்—நான் விரும்புகிறேன். இப்பொழுது, *கிறிஸ்துமஸ்* என்ற முதல் வார்த்தை ஒரு—ஒரு விதமான கத்தோலிக்க வெளிப்பாடு. அதன் பொருள் "கிறிஸ்துவின்…" *கி-றி-ஸ்-து-ம-ஸ்,* பாருங்கள், "கிறிஸ்துவின் பூசை" பாருங்கள். அது ரோம சபையில் நியமிக்கப்பட்டது அல்லது துவக்கப்பட்டது. நான் டிசம்பர் இருபத்தைந்தாம் நாளில் பிறக்காதது போலவே, கிறிஸ்துவும் அன்று பிறக்கவில்லை. ஹூ-ஹூ. அது ஒரு முழுமையான கோட்பாட்டின் கூட்டமாகவே உள்ளது. அதற்குரியதெல்லாம் அவ்வளவுதான். தீர்க்கதரிசி கூறினது போல, "முழு உலகமும் ஒரு அழுகிப்போன புண்ணாகிவிட்டது." அது உண்மை. அது சுத்தமான காரியம் என்று எங்குமே இல்லை. ஒவ்வொரு விடுமுறை நாட்களும் ஒரு…ஏன், சாண்டா கிளாஸ் கிறிஸ்துமஸின் ஸ்தானத்தை, அதாவது முன்னணையில் பிறத்தலை எடுத்துக் கொண்டது. முயலும் கோழியும் புதிய தொப்பிகளும் உயிர்த்தெழுதலை எடுத்துக் கொண்டன. இவை எல்லாவற்றிலும் தேவன் எங்கே தோன்றுகிறார்? பார்த்தீர்களா? இதற்கான காரணம், மனிதன், வர்த்தகத்தில் உள்ளதேயாகும்.

118 ஏன், அவர்கள் அநேக மாதங்களுக்கு முன்பே கிறிஸ்துமஸ் அன்பளிப்பை வாங்கத் தொடங்கினர், அது ஒரு அஞ்ஞான குணாதிசயமேயன்றி வேறென்ன! அதைக் குறித்து தேவபக்தி என்று ஒன்றுமில்லை. ஓ, அவர்கள், "ஞானிகளுக்கு, வெகுமதிகளைக் கொடுங்கள்" என்று கூற முயற்சிக்கின்றனர். அது ஒரு—ஒரு பிசாசின் சாக்குபோக்கான ஒரு சோலையாய் உள்ளது. நீங்கள் ஒன்றைக் கொடுக்க வேண்டும், அது கிறிஸ்துவுக்கு உங்களுடைய ஜீவியமாயுள்ளது. ஒருவருக்கொருவர் கொடுக்காமல், அதை அவருக்குக் கொடுங்கள். அதற்காகத்தான் அவர் மரித்தார். அதுவே அவருடைய வருகையின் நோக்கம். பார்த்தீர்களா?

119 ஆனால் அது—அது—அது சிறு பிள்ளைகளுக்கு ஒரு சாபமாய் விளங்கும் இடமாகி விட்டது. தெருவில் உள்ள ஒரு சிறு அண்டை வீட்டாரிடம் ஏராளமாக இருக்க முடியும், மற்ற குட்டி நபருக்கு ஒன்றுமே இல்லை, அவர்கள் பார்க்கிறார்கள். அது—அது முற்றிலும் தவறாயுள்ளது. அவ்வளவுதான். இந்த இடங்களில் வியாபாரிகள் தங்களுடைய வர்த்தகப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அவர்கள்…ஏனென்றால், என்னுடைய மனைவி சில சிறு நபர்களுக்காக ஏதோ ஒன்றை வாங்குவதற்காக உள்ளே சென்றிருந்தாள், சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர், “ஓ, நாங்கள் விற்றுத் தீர்ந்துவிட்டோம். எல்லா இருப்பையுமே. இந்த வருடம் நாங்கள் இருமடங்கு விண்ணப்பித்து வரவழைத் திருந்தோம், அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டது,” என்று கூறினார். மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன்னர் கடைக்குச் செல்ல வேண்டும். ஓ, அது என்ன ஒரு பெரிய வர்த்தக அமைப்பு!

120 எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் கிறிஸ்துமஸ் என்று அழைக்கும் இந்த “கிறிஸ்துவின் பூசை” எப்படித் துவங்கினது என்று உங்களுக்குத் தெரியுமா? இதோ அதைக் குறித்த கதை, ஒரு சிறு குறிப்பை நான் இங்கே ஒரு பக்கத்தில் எழுதி வைத்துள்ளேன். நான் கடந்த ஆண்டில்தான் இதை முடித்தேன், நான் *ஏழு சபைக் காலங்களைப்* பற்றி இங்குப் போதிக்கும் முன்னர், அவற்றை இங்கே கற்பித்தேன், நான் *நிசாயா ஆலோசனை சங்கம், நிசாயா ஆலோசனை சங்கத்திற்கு முன்பிருந்த ஆலோசனை சங்கம், நிசாயா ஆலோசனை சங்கத்திற்குப் பிந்தைய ஆலோசனை சங்கம், நிசாயா பிதாக்கள்* ஆகியவற்றை எடுத்துக்கொண்டேன், ஹிஸ்லாப் என்பவரின் *இரு பாபிலோன்கள், ஃபாக்ஸின் இரத்த சாட்சிகள் புத்தகம்,* மற்றும் மற்றவை, ஏனென்றால் ஊழியக்காரர்கள் அதை மேற்கோள் காட்டுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதை நானே படித்துப் பார்க்க விரும்பினேன், அப்போதுதான், நான்—நான் அதைப் படிக்கும்போதோ அல்லது என் மக்களிடம் சொல்லும்போதோ, எனக்குத் தெரியும், ஏனென்றால் நான் ஜனங்களுக்குக் கூறுகிறதற்கு தேவன் நியாயத்தீர்ப்பின் நாளிலே பதில் சொல்லும்படிச் செய்யப்போகிறார். எனவே, அவர்கள் படித்ததாக வேறு யாராவது கூறினதை நான் கூற வேண்டியதில்லை, நானே அதை வாசித்து, பாருங்கள், அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

121 இப்பொழுது, உண்மையாகவே, கிறிஸ்துமஸ், கிறிஸ்து, கிட்டத்தட்ட நிரூபிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்… சிருஷ்டிகரை நோக்கிப் பார்ப்பதன் மூலம் உயிர்த்தெழுதல் நிரூபணமாகிறது, அவர் எப்படி இந்தத் தாவரவியல் ஜீவன்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்றும், அவருடைய நோக்கத்திற்கு சேவை செய்கிற ஒவ்வொரு காரியமும் எப்படி மரிக்க வேண்டும் என்றும், அது மரித்தாலும், அது மீண்டும் ஜீவிக்க வேண்டும் என்றும், ஏனெனில் அதற்கு நித்திய ஜீவன் உண்டு. ஆனால்,

அது மீண்டும் உயிர் பெறுவதற்கான ஒரே வழி, முளைவிட்ட விதைதான். புரிகிறதா? இப்பொழுது, அந்தச் சிருஷ்டிப்பில் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார், அது இந்த எல்லா அஞ்ஞான தெய்வங்களும் மற்றும் நாம் பெற்றுள்ள காரியங்களும் சரியல்ல என்பதையே காண்பிக்கிறது. பாருங்கள், அவைகள் வெறும் தத்துவமும், கற்பனைகளுமாயிருக்கின்றன. ஆனால் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த அந்த—அவர் தம்முடைய திட்டத்தில் என்னவாயிருக்கிறார் என்பதை அவருடைய சிருஷ்டிப்பின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார். அதன்பின்னர்…

122 கிறிஸ்து பிறந்தபோது, தேவனுடைய குமாரன் ஏன் ஒரு முன்னணையில், ஒரு மாட்டுக்கொட்டகையில் பிறந்து, அங்கே கிடத்தப்பட்டார் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? ஏனென்றால் அவர் ஒரு ஆட்டுக்குட்டியாக இருந்தார். வீடுகளில் பிறக்க முடியாது, ஆட்டுக்குட்டிகள் வீடுகளில் பிறப்பதில்லை. அதன்பின்னர் அவர்கள் அவரைக் கல்வாரிக்கு கொண்டு சென்றபோது, எப்படி அவரால் ஓடமுடியவில்லை என்பதை நீங்கள் கவனித்தீர்களா. இந்தச் சிலுவை அவர்மேல் வைக்கப்பட்டிருந்தது. அவருடைய முதுகில் இரத்தம் கசியும் அளவிற்கு அவர் அடிக்கப்பட்டார். ஆனால் அவர்கள் அவரை வழி நடத்திச் சென்றனர், அவர்கள் ஆட்டுக்குட்டியை அடிக்கப்படுவதற்கு வழிநடத்தினர். பார்த்தீர்களா? அவர் ஒரு ஆட்டுக்குட்டியாக இருந்தார். பாருங்கள், இந்த இயற்கையின் சாட்சிகளெல்லாம், அவர் என்னவாயிருந்தார்…ஆட்டுக்குட்டிகள் எப்போது பிறக்கின்றன, டிசம்பரிலா அல்லது ஏப்ரல் மாதத்திலா? நிச்சயமாக. பாருங்கள், அப்படிப்பட்ட ஒரு காரியத்தை நினைப்பது அர்த்தமற்றது, பாருங்கள்.

123 இது ரோமாபுரியிலுள்ள கத்தோலிக்க சபையாக மாறுவதற்கு முன்னர் ரோமன் கத்தோலிக்க சபையால் செய்யப்பட்டது. சுமார் கி.பி. 606, இல்லை அதற்கு இடைப்பட்ட காலத்தில், அல்லது 306 என்று கூடச் சொல்லலாம். இப்பொழுது, ரோம அஞ்ஞானிகள் ஜூபிடரை வழிபட்டனர் என்பதை நாம் கண்டறிகிறோம், அது சூரியக் கடவுள்; மேலும் அவர்கள் சந்திரக் கடவுளான அஸ்தரோத்தேத்தை வழிபட்டனர்; அது தாய்…பரலோகத்தின் தாய். பாருங்கள், இதைக் கீழே கொண்டு வர, அவர்கள் அஸ்தரோத் அல்லது தேவன், பரலோகத்தின் தாய் அதற்குப் பிறகு இல்லை, அவள் தன்னை மரியாளில் பிரதிபலித்தாள். எனவே அது இன்னமும் விக்கிரகாராதனையாகவே இருந்துகொண்டு, கிறிஸ்தவத்தை விக்கிரகாராதனையோடு இணைக்கிறது.

124 அதன்பிறகும் கூட, அவர்கள் பாடுபட்டனர், அல்லது தங்களுடைய சூரிய தேவனான ஜூபிடரின் பிறந்த நாளை வணங்கி மரியாதை செய்தனர். அது டிசம்பர் முதல் தேதியிலிருந்து டிசம்பர் இருபத்தைந்து வரையிலான சூரியன், அது மாறுவதில்லை,

அது தன்னுடைய மகர ராசியைக் கடந்து கொண்டிருக்கிறது. மேலும், சொல்லப்போனால், நான் எப்பொழுதாவது உங்களுக்கு வாசிக்க வேண்டுமென்று விரும்புகிற ஒரு செய்தித்தாளிலிருந்து ஒரு துண்டை நான் பெற்றுக்கொண்டேன், அது உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும். அந்த நாளில் இங்கே ஆற்றில் நடந்ததைக் குறித்து நீங்கள் பேசுகிறீர்கள், ஒரு சில வாரங்களுக்கு முன்னர், ஒரு செய்தித்தாளில், அதை உறுதிப்படுத்தும்படியாக எருசலேமில் கண்டறிதலை நான் உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன். ஒரு சில வாரங்களுக்கு முன்பு அவர்கள் எருசலேமில் ஏதோ ஒரு காரியத்தைக் கண்டனர், அதே நேரத்தில் தூதன் இங்கே தோன்றி ஊழியத்தை அனுப்பியதை சாதகமாக உறுதிப்படுத்தும். ஆம். பார்த்தீர்களா? இப்பொழுது, ஒரு சில வாரங்களுக்கு முன்பு வரை அதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை, இதோ அது இங்கே செய்தித்தாளில் வெளிவந்துள்ளது.

125 இப்பொழுது அதைக் கடந்தபோது கவனியுங்கள், அது—அது அதில் உள்ளது, பாருங்கள். இப்பொழுது, டிசம்பர் இருபத்தியொன்றிற்குப் பிறகு, நாட்கள் ஒவ்வொன்றும் சிறிது குறையத் துவங்கும், அல்லது ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கூடுதலாக, அது ஜூலை மாதம் வரும் வரையிலும் இருக்கும். அதன்பின்னர் அது மீண்டும் சுருங்கி அது சரியாகிவிடுகிறது… அதுவே இளைப்பாறும் நேரமாயுள்ளது. ரோம அஞ்ஞானிகள் அதை சூரிய தேவனின் பிறந்த நாள் என்று கூறினர். டிசம்பர் முதல் தேதி, அல்லது டிசம்பர் இருபத்தி ஒன்றாம் தேதி முதல் டிசம்பர் இருபத்தி ஐந்தாம் தேதி வரை, அந்தக் காலகட்டத்தில் ரோமானிய வட்டரங்கில் வித்தை விளையாட்டு, தேரோட்டப் பந்தயங்கள் மற்றும் பல நடைபெற்றன. சரி, அப்படியானால், கிறிஸ்தவர்கள் அல்லது ரோமானிய கிறிஸ்தவர்கள், புறச்சமயத்தினர் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகிய இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையில் தங்கள் கோட்பாடுகளை ஒன்றிணைத்து, “இது சூரியக் கடவுளின் பிறந்தநாள் என்றால், இதை நாம் அனைவரும் சேர்ந்து தேவகுமாரனின் பிறந்தநாளாகவே ஆக்கிவிடுவோம்” என்று கூறினார்கள். அங்கே டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதியைக் கிறிஸ்து பூசையாக ஆசரிக்க வேண்டும். ஓ, என்னே ஒரு பயங்கரமான காரியம்! பார்த்தீர்களா?

126 இப்போது, இணைப்பதற்கு…“வேறு எந்த நாளும் போதுமானதாக இல்லையா?” என்று நீங்கள் கேட்கிறீர்கள். ஆம், ஆனால் கிறிஸ்துவைப் புறச்சமயத்துடன் இணைக்கிறீர்கள்! அவர் அழித்துப் போட வந்த காரியத்தை, அவர்கள் அவரை மீண்டும் அதனோடு இணைக்கின்றன. பார்த்தீர்களா? அதுதான் தவறான காரியம். சாண்டா கிளாஸ், ஜெர்மனியில் கிரிஸ் கிரிங்கில் என்ற பெயர் கொண்ட ஒரு வயோதிகர், அவர் ஒரு கத்தோலிக்கராயிருந்தபடியால், கிறிஸ்து பூசை நடக்கும்

தினத்தில் சுற்றி சென்று பிள்ளைகளுக்குப் பரிசுகளை அளிப்பார் அவர்கள் அவரை ஒரு பரிசுத்தவானாக்கினர், இப்பொழுது பரிசுத்த நிக்கோலஸ் என்று அழைக்கப்படுகிறார். பார்த்தீர்களா? நான் நன்றாக…அவர்கள்…அதாவது, நீங்கள் அதை எப்படியும் அறிவீர்கள். பாருங்கள், நாம் அவைகளை *சபைக் காலங்களில்* பெற்றுள்ளோம்.

127 ஆனால் இன்று காலை, நான் சொல்ல விரும்புவது இதுதான், வரவிருக்கும் இந்தக் கிறிஸ்துமஸ் நாளில், கிறிஸ்து வந்த ஆயிரத்துத் தொள்ளாயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இந்த உலகம் எந்த விதத்திலும் சிறந்த நிலையில் இல்லை. இதில் எந்த வித்தியாசமும் இல்லை. அப்பொழுது அது இருந்த அதே நிலைமை, இப்பொழுதும் அவ்வண்ணமே உள்ளது. அவர்கள்…நான் சொல்லப்போவதிலிருந்து ஒரு முடிவுக்கு வருவேனானால்…அல்லது ஒரு செய்தியாக எடுத்துக் கொள்வேனானால், அது இதுதான்: *உலகம் சீரழிந்து போதல்* என்பதாகும்.

128 ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்து கிறிஸ்துமஸில் வந்தபோது, உலகம் சீரழிந்து கொண்டிருந்தது, எல்லாமே மாசுபட்டுவிட்டது. மதசம்பந்தமான உலகம் மாசுபடுத்தப்பட்டிருந்தது. ரோம உலகம் ஒழுக்க ரீதியில் அதனுடைய மிகக் கீழ்த்தரமான நிலையில் இருந்தது. ஓ, உலகத்தின் ஒழுக்கக்கேடு! யூதர்கள் தங்களுடைய தேவனை விட்டுவிட்டு, தங்களுடைய புனிதமான பயபக்தியான விருந்தை ஆசரித்து, அதை ஒரு சடங்காச்சார பாரம்பரியமாக்கியிருந்தனர். தேவன் அவர்களை விட்டு அகன்றிருந்தார். ஏதோ ஒன்று சம்பவிக்க வேண்டியதாயிருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், முழு உலகமும் செய்தது, ஏனென்றால் அதை ஒன்று சேர்த்து வைத்திருக்க வேண்டியதாயிருந்தது. அது சீரழிந்து கொண்டிருந்தது. அதை ஒன்றாக வைத்திருக்க வேண்டிய *ஏதோ ஒன்று,* ஒவ்வொரு தேசமும் தங்களுடைய சொந்த வழியில் ஏதோ ஒரு காரியத்தை அல்லது அதை ஒன்று சேர்த்து நடத்த யாராவது வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

129 அந்தக் காட்சி இன்றைக்கு இல்லையென்றால், உலகத்தை நான் அறியேன். அதை ஒன்று சேர்த்துப் பிடித்து வைக்க ஏதோ ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறதே! அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போன்றே உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகம் இந்தக் காரியத்தை ஒன்று சேர்த்து வைத்திருக்க ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தேவன் உலகத்திற்கு ஒரு மேசியாவை அளித்தார். ஏனென்றால் நாம் ஏதோ ஒரு காரியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், ஏதோ ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருந்தால், தேவன் அதை நமக்கு

அனுப்புவார். இப்பொழுது உலகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நிலைமைக்குத் திரும்பியுள்ளது. அது தேசங்கள் சிதறுண்டு கொண்டிருக்கிறது, எங்கும்—எங்கும் எந்த அஸ்திபாரமும் இல்லை. கம்யூனிசம், கத்தோலிக்கம், பிராடெஸ்டெண்டுகள், அரசியல், ஒழுக்கம், எல்லாமே சீர்குலைந்துவிட்டது.

130 அவர்கள் ஒரு மேசியாவுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே நான் கூற விரும்புவது இதுதான்! அவர் வருவாரானால், நாம் அவரை ஏற்றுக்கொள்வோமா அல்லது அவர்கள் செய்ததுபோல நாம் செய்வோமா? நாம் அவரை மறுப்போமா? நமக்கு உண்மையாகவே தேவை என்னவென்று நமக்குத் தெரியுமா? சில சமயங்களில் நாம் விரும்புகிறோம், நாம் நம்முடைய வாஞ்சைகளுக்காக ஜெபிக்கிறோம், சில சமயங்களில் நம்முடைய வாஞ்சைகள் நம்முடைய தேவையாயிருப்பதில்லை. நமக்குத் தேவை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை என்பதை நாம் உணர வேண்டும்; நாம் புரிந்துகொள்வதாக நினைக்கிறோம். ஆனால் தேவன் நம்முடைய தேவைகளை நிரப்புவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார், அவர் அதைச் செய்வார்.

131 இப்போது, என் ஏழு வயதுச் சிறுவன் ஜோசப், என்னுடன் வேட்டைக்கு வர விரும்பி, என் தானியங்கித் துப்பாக்கியை எடுத்து, அதில் தோட்டாக்களை நிரப்பி, "அப்பா, என்னால் ஒரு முயலைக் கொல்ல முடியும்" என்று அழுது கத்தினால் என்ன செய்வது? சரி, அவன் அதைச் செய்ய நான்—நான் அனுமதிக்க முடியாது, அதே சமயத்தில் அது அவனுக்குத் தேவை என்று அவன்—அவன் கருதுகிறான், ஆனால் அவனைக் காட்டிலும் அதைக் குறித்து எனக்கு அதிகம் தெரியும். ஒன்றரை வயதுடைய உங்களுடைய சிறு குழந்தை நீங்கள் நேரான சவரக்கத்தியால் சவரம் செய்வதைக் கண்டு, அந்தச் சவரக்கருவிக்காகக் கதறி அழுதால் என்ன செய்வீர்கள்? அதே சமயத்தில் நீங்கள் சவரம் செய்வதை அவன் கண்டபோது, அவன் அதேக் காரியத்தைச் செய்ய விரும்புகிறான். ஏன், அவனுக்கு எது சிறந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியிருந்தும் நீங்கள்—நீங்கள் அவனை அதைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கமாட்டீர்கள், ஏனென்றால், நீங்கள் ஒரு விவேகமான சிந்தனையுள்ள தகப்பனாயிருந்தால், அதைப் போன்ற ஒரு காரியத்தை நீங்கள் செய்யமாட்டீர்கள், ஆனால் நீங்கள் அதை அவனிடமிருந்து விலக்கிவிடுவீர்கள். மேலும் பல சமயங்களில், நமக்குத் தேவையானது என்னவென்று தேவன் அறிந்திருப்பதற்கு முரணான ஒன்றை நாம் விரும்புகிறோம், அதனால் அவர் அதை நமக்குத் தரமாட்டார்.

132 அவர்கள் ஒரு மேசியாவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு மேசியாவை விரும்பினர். ஆனால் இங்கே தான் அது உள்ளது, அவர்கள் விரும்பிய விதத்தில் அவர்கள்

அவரை விரும்பினர். தேவன் அவர் விரும்பின வழியில் அவரை அனுப்பினார், அவர்கள் அவரைப் புறக்கணித்தனர்.

133 அவர்கள் அதை மீண்டும் இன்றைக்கு செய்கிறார்கள், இன்றைக்கு அதேக் காரியத்தைச் செய்கிறார்கள், அவர்கள் அதை மறுபடியும் மறுப்பார்கள். அப்பொழுது அவர்கள் செய்த அதேக் காரியத்தையே இப்பொழுதும் செய்கின்றனர். ஏன்? அதே காரணத்திற்காக, அதே காரணத்திற்காக. அப்பொழுது அவர் வந்தார், அவர் வந்தார் என்பதை நாம் அறிவோம். அவர் அவர்களிடத்திற்கு வந்தார், ஆனால் அவர் வரவேண்டுமென்று அவர்கள் வாஞ்சித்த மாதிரியிலும், விதத்திலும் அவர் வரவில்லை. இன்றைக்கு தேவன் நமக்கு ஏதாவதொன்றை அனுப்புவாரானால், நாம் அதற்காகக் கூக்குரலிட்டு, சபையும் சேர்ந்து, தேவன் அதை அனுப்பும்போது நாம் அதை விரும்புவதில்லை. அது நம்முடைய ஸ்தாபன ரசனைக்கு ஏற்றதாக வரவில்லை. அது சில சமயங்களில் அதைக் குறித்த நம்முடைய—நம்முடைய வேத சாஸ்திர கருத்தாக்கத்திற்கு பொருந்துகிறதில்லை. ஆனால் அந்தக் காரியத்திற்காகவே நாம் ஜெபித்தோம். நாம் தேவனுக்கு முன்பாகக் கேட்டுக்கொண்ட அதே வேண்டுகோளை, தேவன் அதை நமக்கு அனுப்பினார், நாம் அதை மறுக்கிறோம்.

134 நாம் தேவனிடத்திலிருந்து ஒரு கிறிஸ்துமஸ் வெகுமதியை விரும்புகிறோம், ஆனால் நாம் அதை விரும்புகிற விதமாகவே வேண்டும். தேவன் அதை நமக்குத் தேவைப்படுகிற வழியில் அனுப்புகிறார். தேசத்திற்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார், சபைக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆனால் நமக்குத் தெரியும் என்று நாம் நினைக்கிறோம், ஆனால் அது என்னவென்பதை அவர் உண்மையாகவே அறிந்திருக்கிறார்.

135 இப்பொழுது, ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு நான் கூறினது போல, உலகம் சீரழிந்து போகும் நிலையில் நாம் மீண்டும் இந்தக் கிறிஸ்துமஸிற்கு வருகிறோம். நான் இங்கே குறிப்பிட்டுள்ள ஒரு சில காரியங்களை மாத்திரம் குறிப்பிடுவோம்.

136 உலகத்தின் ஒழுக்கக்கேட்டைப் பாருங்கள், அது ஒருபோதும் தாழ்வான நிலையில் இருந்ததில்லை. நான்—நான் இங்கே ஒரு கட்டுரையை வைத்திருக்கிறேன், அதைக் குறித்த இரண்டு வசனங்களை நான் படிக்க விரும்புகிறேன். இது ஆப்பிரிக்காவிலிருந்து வெளிவரும் ஒரு—ஒரு ஸ்டேன்டட் பிரேரர் பத்திரிக்கையில், “அடக்கத்தின் மரணம். மனித குலத்தின் ஒழுக்க நெறியைப் பாதுகாப்பதற்காகத் தேவன் அதில் அருளியுள்ள அழகிய பண்பான பெண்மையின் அடக்கம், இன்று மரித்துக்கொண்டிருக்கிறது, ஏனெனில், அப்பாவிப் பெண்களும் சிறுமிகளும் நாகரிக தேவிக்கு அடிபணிந்து, அடக்கமான நவீனப் பாணிகளின் உச்சகட்ட வெட்கக்கேட்டிற்கு

இணங்கத் தயங்குவதில்லை” என்று கூறப்பட்டுள்ளது. அதைக் குறித்த ஒரு பக்கத்தை நான் இங்கே வைத்துள்ளேன். “அப்படிப்பட்ட ஒரு காரியத்தை நான் எப்படி ஒருபோதும் கேள்விப்பட்டதேயில்லை! பாலியல் கவர்ச்சியானது கிறிஸ்தவர்கள் மத்தியிலும், கிறிஸ்தவரல்லாதவர் மத்தியிலும் நியாயமானதாகவே கருதப்படுகிறது” என்றுள்ளது.

137 இந்த நம்முடைய விலையேறப்பெற்ற சகோதரன் ஆர்கன்பிரைட்டும் நானும் இந்தக் காலையில் சாலையில் வரும்போது, அந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம், வெட்கப்படும் அளவுக்கு நாணம் உள்ள ஒரு பெண்ணைக் கண்டுபிடிப்பது கடினம். அவர்கள் எத்தனையோ ஆபாசமான நகைச்சுவைகளையும் அசிங்கமான விஷயங்களையும் கேட்டிருக்கிறார்கள், அதனால், ஏன், அவர்களை வெட்கப்பட வைக்க உங்களால் ஒன்றும் சொல்ல முடியாது. சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் சிறுவனாக இருந்தபோது நடந்ததைப் போலவே, ஒரு சின்னத் தவறு நடந்தாலும், அவர்களின் முகம் சிவந்துவிடும், பள்ளியில் யாரோ ஒருவர் கடந்து செல்லும்போது, மற்றொரு சிறுமியின் உள்ளிருக்கும் பாவாடை வெளியே தெரிந்தது, நான் நின்று பேசிக்கொண்டிருந்தேன், அவள் திரும்பிப் பார்த்தபோது, அந்தச் சிறுமியின் உள்ளிருக்கும் பாவாடை தெரிவதைக் கண்டு, அவளுடைய சின்ன முகம் சிவந்து, என்னை விட்டு அவள் நடந்து சென்று விட்டாள், ஒரு பதினாறு வயதான பெண். ஏன், என்னே ஒரு…நம்முடைய ஒழுக்க நெறிமுறைகளைப் பாதுகாக்க தேவனால் அளிக்கப்பட்ட பண்பாகும்.

138 அப்படியென்றால், இன்று நாம் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொண்டு, பெண்கள் உடை அணிந்து நடந்துகொள்வதையும், ஆண்கள் சிகரெட் பிடிப்பதையும், இன்னும் பலவற்றையும், இப்படி நடந்து கொண்டிருக்கிற இது போன்ற அபத்தங்களுக்கு எதிராக நான் ஏன் குரல் கொடுக்கிறேன் என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா. பிரசங்க பீடத்திலுள்ள போதகர்களும் ஒப்புரவாகி, நீங்கள் பிரசங்க பீடத்திற்கு வந்து இப்படிப்பட்ட காரியங்களுக்கு எதிராகப் பிரசங்கிக்கக் கூட அனுமதிக்கமாட்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் செய்தது போல, நாம் இன்றைக்கு முழுவதுமாகச் செய்து கொண்டிருக்கவில்லையா என்று வியப்புறுகிறேன்! நினைவிருக்கட்டும், இஸ்ரவேலர் அதைச் செய்ய ஆரம்பித்தபோது, தேவன் ஒரு ஏசாயாவை எழுப்பினார். அந்தக் காலம் முடிந்து அவர்கள் மீண்டும் தொடங்கியபோது, அவர் ஒரு எரேமியாவை எழுப்பினார் அதன்பிறகு தொடர்ச்சியாக மற்றவர்களையும் எழுப்பினார். தேவன் தம்முடைய காரியங்களைச் செய்யும் முறையை மாற்றுகிறதில்லை, அவர் நித்திய தேவனாயிருக்கிறார். அவர் மாற முடியாது. அதைச் செய்ய வேண்டும் என்ற அவருடைய

முதல் எண்ணம் மாறாமல் இருக்க வேண்டும்.

139 இன்றைக்கு நமக்குத் தேவை என்னவென்றால் கிறிஸ்துவின் மேசியாத்துவத்தினால் அபிஷேகிக்கப்பட்ட ஒரு செய்தியேயாகும். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் அதற்காக ஜெபிக்கிறார்கள், ஆனால் அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்களா? இல்லை, ஐயா, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் முதலில் செய்தது போலவே அதைச் சிலுவையில் அறைகின்றனர். மானிட இருதயம் வஞ்சித்துக் கொண்டிருக்கிறது.

140 ஒழுக்கம், தேச சண்டைகள்: இன்றைக்கு இருப்பதைக் காட்டிலும் ஒழுக்கங்களில் வீழ்ச்சியடைய உலகம் எப்போது தயாராக இருந்தது? மேலும் யார் அந்த—யார் அந்த வேகத்தை அமைத்தது? நாங்கள் அமெரிக்கர்கள். இங்கே அண்மையில் நான் ரோமாபுரியில் உள்ள சான்ட் ஏஞ்சலோவில் இருந்தபோது—இருந்தபோது, சான்ட்’ ஏஞ்சலோ நிலத்தடி கல்லறைக்கு அருகில், அமெரிக்கப் பெண்களுக்காக அங்கே ஒரு அறிவிப்புப் பலகை இருந்தது, “கல்லறைகளுக்குள் நுழைவதற்கு முன், இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, தயவுசெய்து ஆடை அணிந்துகொள்ளுங்கள்” என்று கூறப்பட்டுள்ளது. ஒரு மதசம்பந்தமான தேசம், தேவபக்தியுள்ள ஒரு தேசமாகக் கருதப்படுகிறதே! நாம் மற்றவர்களின், அதாவது கிறிஸ்தவர்களாக இருந்த நமது முன்னோர்களின் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

141 தேசியப் பூசல். இந்த உலகம் இப்போது இருப்பதைப் போல, ஒரு—ஒரு—ஒரு தேசியப் பிளவிலும் சீரழிவிலும் இவ்வாறு இருந்த ஒரு காலம் வரலாற்றிலேயே இருந்ததில்லை. ஏன், நீங்கள் தலையங்கங்களையும், செய்தி ஒளிபரப்புகளையும், விளக்கவுரையாளர்களையும், முன்னறிவிப்பாளர்களையும், மற்றும் பலரையும் பார்க்கிறீர்கள் வெடிகுண்டுகளைக் குறித்தும், அவை என்ன செய்ய முடியும் என்பது பற்றியும், எந்த ஒரு சிறு தேசமும் முழு உலகத்தையும் அழிக்க முடியும். அவர்களுக்கு மத்தியில் சமாதானம் இல்லை. அந்தவிதமாக நீங்கள் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது. சமாதானமும் ஐக்கியமும்—அரசியலினால் வர முடியாது, அது கிறிஸ்துவினால் உண்டாகிறது. அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறதில்லை.

142 நான் எப்படி சில காரியங்களை இங்கே பேச முடியும்! நம்முடைய சொந்த அரசியலில் உள்ள ஊழல், ஏன், அரசியல் மிகவும் அழுகிப் போய்விட்டதே! நீங்கள் கடந்த இரவு *மானிட்டர்* நிகழ்ச்சியைக் கேட்டீர்கள் என்று கருதுகிறேன் அல்லது நினைக்கிறேன், இங்கிருந்து லூயிஸ்வில்லில் இருந்து ஓரிரு மணிநேரம் ஒலிபரப்பான அந்த நிகழ்ச்சி, அதன் மூலம் அவர்கள் நாடு முழுவதும் உள்ளவர்களுடன் இணைகிறார்கள்,

அவர்கள் அவ்வப்போது பல்வேறு தலைப்புகளில் வழங்குவார்கள்; லாஸ் ஏஞ்சல்ஸ் அல்லது கலிபோர்னியாவில் நடந்த அரசியல் தேர்தலில் தோற்றபோது, திரு. நிக்சன் அரசியலிலிருந்து விலகியது குறித்தும், “அவர் எப்போதாவது மீண்டும் அரசியலுக்கு வருவாரா?” என்பது குறித்தும் அந்த நிகழ்ச்சியில் பேசினார்கள். இரண்டு அல்லது மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு, அந்த ஒலிபரப்பு இங்கே சகோதரன் சார்லியின் வீட்டிலிருந்து வரும்போது நான் கேட்டிருந்தேன், சகோதரன் உட் அவர்களும் நானும் வானொலியில் வந்து கொண்டிருந்தபோது கேட்டோம். மேலும் தெரியவந்தது என்னவென்றால், நிக்ஸன், இங்குள்ள அனைத்து கிழக்கு நாடுகளிலும், அந்த ஒளிபரப்பு மிசிசிப்பி முதல் பென்சில்வேனியா வரை சென்றடைந்தது, அவர் திரு. கென்னடியை முறியடித்தார் என்பதையும், ஜனங்கள் கூப்பிட்டு, கிட்டத்தட்ட நான்குக்கு ஒன்று வாக்குகளை அளித்தனர். அப்பொழுது ஒரு மனிதன் நின்று, “உங்களுக்குத் தாறுமாறாக்கப்பட்ட இயந்திரங்கள் இல்லையென்றால்—அவர் ஜனாதிபதியாகியிருப்பார்” என்றார். அங்குதான் காரியம். அரசியல், ஏமாற்றுதல், இருபுறமும் அழுகிப் போயுள்ளது. நான் அவரைக் குற்றப்படுத்தவில்லை, நானும் என்னுடைய கரங்களை உயர்த்தி, மோசமான காரியத்தைக் கெடுக்க விட்டுவிடுவேன், அது எப்படியும் உலகத்தோடு போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவை நோக்கி உங்களுடைய கரங்களை உயர்த்தி, “இதோ நான் வருகிறேன் ஆண்டவரே” என்று கூறுங்கள்.

143 தேசியப் பூசல். இப்போது அவர்கள் ஒன்றுசேர்ந்து இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டிய இடத்தில், அவர்கள் மிகவும் பிரிந்து கிடக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வருகையின் நேரத்தில், உலகம் சீரழிந்து கொண்டிருந்தபோது அந்தவிதமாகவே அது இருந்தது. இன்றைக்கும் அதே நிலைமைகளின் கீழ் அது சீரழிந்து கொண்டிருக்கிறது.

144 அதன்பின்னர் சபையின் சீர்கேடு! ஓ, என்னே! மதரீதியான சீர்கேடு! ஓ, இரண்டாயிரம் ஆண்டுகளாக வேதாகமமும் பரிசுத்த ஆவியானவரும் பூமியில் இருந்தபின், இன்று இந்த உலகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போலவே மோசமாகச் சீரழிந்து போவதைப் பார்ப்பது அபத்தமாக இருக்கிறது. மதச் சீர்கேடு. அரசியல் மதத்திற்குள் நுழைந்தது, மதம் அரசியலில் நுழைந்தது. அந்த நிலைமையைக் காண்பது அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான காரியமாயிற்றே! நான் அதை அறிவேன். நீங்களோ, “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் இங்கே கிறிஸ்மஸ் நேரத்தில் இதைப் போன்ற ஒரு காட்சியை எங்களுக்கு வர்ணித்துக் கொண்டிருக்கக் கூடாது” என்று கூறலாம். நீங்கள் உண்மையை அறிந்திருக்க வேண்டும், நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியதை! இப்பொழுது, எப்படி…

145 தேவன் ஆசீர்வதிப்பார், ஆனால் அந்த ஆசீர்வாதமானது குறிப்பிட்ட சூழ்நிலையில் வர வேண்டும், சில தேவைகளை நீங்கள் சந்திக்க வேண்டும். நீங்கள் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லையென்றால், அப்பொழுது தேவனுடைய ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை. இஸ்ரவேலர் அந்தப் புனிதமான விருந்துகளையும் மற்றக் காரியங்களையும், பரிசுத்தத்தோடும், உத்தமத்தோடும்—ஆசரிக்கும் வரைக்கும் தேவன் அவர்களைச் சந்திப்பதாக வாக்குப்பண்ணினார். தேவன் அவர்களைச் சந்தித்தார். ஆனால் அவன், அவர்கள் அதை ஒரு குடும்ப சடங்காச்சாரமாக ஆக்கிவிட்டபோது, தேவன் அதை இனிமேல் செய்ய மறுத்துவிட்டார். அவர்கள் அவருடைய முகத்தில் நாற்றமெடுத்ததாக அவர் கூறினார். எனவே இன்றைக்கும் அதேக் காரியம்தான் உள்ளது, அதாவது அந்தக் காரியத்தின் உண்மைக்குத் நாம்—நாம்—நாம் திரும்ப வேண்டும்.

146 சபைகளில் அரசியல் பூசல்! நாம் இன்றைக்கு ஏறக்குறைய தொள்ளாயிரம் வெவ்வேறு கிறிஸ்தவ ஸ்தாபனங்களோடு நிற்கிறோம், ஒவ்வொன்றும் மற்றொன்று சண்டையிடுகின்றன. பாருங்கள், அவர் வந்தபோது, அது அவ்வளவு மோசமாக இருக்கவில்லை, அங்கே நான்கு அல்லது ஐந்து பிரிவுகள் மாத்திரமே இருந்தன, பரிசேயர்கள், சதுசேயர்கள் போன்றவர்கள். ஆனால் இப்பொழுது நாம் தொள்ளாயிரத்துக்கும் மேலே பெற்றுள்ளோம். ஏன், ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துமஸ் சமயத்தில் இருந்ததை விட, இந்தக் கிறிஸ்துமஸ் சமயத்தில் சபையானது இன்னும் மோசமான நிலையில் இருக்கிறது. இப்பொழுதே மோசமான நிலையில் இருந்தது. ஸ்தாபன சண்டை! நண்பரே, இதற்கெல்லாம் காரணம், பரிசுத்த ஆவியானவரின் இடத்தை அரசியல் எடுத்துக்கொண்டதுதான். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை எடுத்து, சபையை வெற்றிக்கு வழி நடத்த விரும்புகிறார், ஆனால் கல்வித் திட்டங்கள் மற்றும் அரசியல் சார்ந்த திட்டங்கள், கோட்பாடுகளும், ஸ்தாபனங்களும் அதைத் தொள்ளாயிரம் வித்தியாசமான திசைகளில் வழி நடத்திச் சென்றிருக்கின்றன. எனவே சபையானது… “சபை” என்று அழைக்கப்படுகிறது. நான் உண்மையான சபையைக் குறிப்பிடவில்லை; அவள் இன்னமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள், ஓ, ஆம், அவள் இன்னமும் மாறாமல் இருக்கிறாள். ஆனால் உலகத்தில் “சபை” என்று அழைக்கப்படுகிற, அதுவே…அதை நிலைநிறுத்தும் கட்டமைப்பாகத் தெரிகிறது, உலகத்தை ஒன்றிணைத்து, இன்று நாம் அறநெறிகள் மற்றும் உலகியல் விஷயங்கள் என்று அழைப்பவற்றைப் பிணைக்கும் அது மாசுபட்டுள்ளது. அதின்—அதன் இழைகள் அழுகிப் போய், அது… சுயநலத்தின் கரையான்கள், அடியில் உள்ள அஸ்திபாரங்களைப் தின்றுவிட்டது. அது நிச்சயமாகவே உண்மை. இப்பொழுது

அது அடையும் என்றிருந்த அதே நிலையில், இரண்டாம் தீமோத்தேயு 3, “துணிகரமுள்ளவர்களும், இறுமாப்புள்ளவர்களும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்,” முதலானவை.

147 அப்படியானால் நாம் அரசியலை அவர்கள் தேசங்களில் இருக்கிறார்கள் என்ற நிலையில் பார்த்தால், சபைகள் அதனுடைய ஸ்தாபனங்களில் சீர்குலைந்திருப்பதை நாம் காண்கிறோம், அதே சமயத்தில் தேவன் அந்தக் காரியங்களில் நம்மிடம் வர வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். தேவன் வரவேண்டுமென்று நாம் விரும்புகிற காரியங்களின் கீழ், அவர் நம்மோடு அந்தச் சாக்கடையில் இறங்கி வரமாட்டார். அவர் அதைச் செய்யமாட்டார். அவர் பரிசுத்தமானவராயிருக்கிறார், அவர்—அவர்—அவர் மிகச் சிறந்ததை அறிந்திருக்கிறார். நாம் கூப்பிட்டால், அவர் நமக்குப் பதிலளிக்கிறார். அவர் பதிலை அனுப்பும்போது, நாம் அதை மறுக்கிறோம். நாம் விரும்புகிற விதமாகவே அது நமக்கு வேண்டும். நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ள அதேக் காரியத்தின் மூலம் நாம் தேவனைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம், நம்மை இரட்சித்துக்கொள்ள முயற்சிக்கிறோம். சபையே, தயவு கூர்ந்து இதைக் கேளுங்கள்! தேவபக்தியாக நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ள அதேக் காரியம், அது நம்மைக் கறைப்படுத்தியுள்ளது, அதே சமயத்தில் நாம் நம்மை இரட்சிக்க அந்த முறைமையையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். வார்த்தைக்குத் திரும்பு! அதைத்தான் மேசியா கூறுவார். இப்பொழுது, ஆனால் நாம் அரசியலை நோக்கிப் பார்க்கிறோம். நாம் தேசிய உலகத்திற்காக முயற்சிக்கிறோம், நாம் அரசியலின் மூலம் அதைக் காப்பாற்ற முயற்சிக்கிறோம். நம்முடைய உலகம் (சபை உலகம்) அரசியலின் மூலமாக இரட்சிக்கப்பட வேண்டும் என்று சபை விரும்புகிறது. இந்தச் சம்பவமானது மோசேயின் காலம் முதற்கொண்டே உலகத்தை மீண்டும் மீண்டும் தாக்கி வருகிறது. அதே காரியம், அரசியல் ஆளுகை செய்ய முயற்சிக்கிறது. அது சீர்கேடானது. ஒரு மனிதனால் அதைச் செய்ய வழியேக் கிடையாது, துவக்கத்திலேயே ஒரு மனிதனில் எந்த நன்மையும் இல்லை. அந்தக் காரணத்தினால்தான் அவன் மரிக்க வேண்டியதாயிருக்கிறது.

148 நாம்—நாம்—நாம் இந்த உலகத்தை இந்த நிலையில் காணும்போது, ஒவ்வொரு காலத்திலும் சீரழிந்து வருவது போன்று தென்படும்போது, உலகம் அந்த நிலையை அடையும்போது, ஜனங்கள் ஜெபிக்கிறார்கள். ஓ, ஜனாதிபதியும் கூட (அது என்னவாயிருந்தது?) பத்து நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரம் அல்லது ஏதோ ஒரு ஜெபத்திற்காக அழைக்கிறார். அது எந்த நன்மையையும் செய்யாது. நமக்குத் தேவை ஒரு ஜெபம் அல்ல, ஆனால் ஒரு மனந்திரும்புதல், பின்வாங்குதல், அதிலிருந்து விலகுதல், விட்டுவிடுதல். தேவனண்டை திரும்பி வாருங்கள்! அரசியலோ அல்லது சபைகளோ உங்களுக்கு அளிக்கக்கூடிய

எல்லாப் பாதுகாப்பையும் விட, தேவனுடைய வார்த்தை, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், கிறிஸ்துவின் பிரசன்னம் ஆகியவற்றின் மீது என் ஆறுதல் அமைந்திருப்பதையே நான் விரும்புவேன். நிச்சயமாகவே, அது நிலைத்திருக்கும் என்று நான் அறிவேன்.

149 நமக்கு ஒரு தேசம் கூடக் இல்லாமல் நாம் தேவனுடைய தேசத்தை, தேவனுடைய இராஜ்ஜியத்தை பெற்றிருந்தால் நலமாயிருக்கும். தேவன் எப்பொழுதுமே அவர்களுக்குப் பதில் அளித்து, அவர்களுக்கு நிவாரணத்தை அனுப்புகிறார், ஆனால் அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறதில்லை. அதாவது ஒவ்வொரு முறையும், இந்தவிதமான நிலைமைகளுக்குள்ளாகத் தேசம் வரும்போது, தேவன் பதிலளிக்கிறார். சரியாகக் கூறினால், உலகம் இந்த நிலையில், சீரழியும்போது, அப்பொழுது தேவன் எப்பொழுதுமே அவர்களுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கிறார், ஒரு தீர்க்கதரிசியை அல்லது ஏதோ ஒரு காரியத்தை, ஏதோ ஒரு வல்லமையான தீர்க்கதரிசியை அதை முழங்கச் செய்ய அனுப்புகிறான். ஆனால் அவர்கள் அவனுக்குச் செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவனைக் கல்லறையில் வையுங்கள். இயேசு, “உங்களில் யார், உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளை அங்கே கல்லறையில் வைத்து, பின்பு அவற்றை வெள்ளையடித்து, அவர்களுடைய கல்லறைகளைக் கட்டாமல் இருந்தார்கள்? நீங்களோதான் அவர்களை அங்கே வைத்தீர்கள்” என்றார். அது உண்மை. “எந்த…?” அவர்கள் உதவிக்காகக் கூக்குரலிட்டனர், தேவன் அதை அவர்களுக்கு அனுப்பினார், அவர்கள் அதைப் புறக்கணித்தனர். அப்படியானால், தேவனைக் குறை சொல்வதா அல்லது மக்களைக் குறை சொல்வதா? மக்களைத்தான் குறை சொல்ல வேண்டும். நிச்சயமாக.

150 இயேசு பிறந்தபோது, அந்த உலகம், நான் கூறினது போல, சீரழிந்து கொண்டிருக்கிறது. அது அரசியலால் கட்டுப்படுத்தப்பட்டது, அந்த நாட்களில் அரசியல் கறைபடுத்தப்பட்டிருந்தது. தேசிய சபையானது கறைபடுத்தப்பட்டிருந்தது. ரோமர்களும் கிரேக்கர்களும் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அநேகமாக உலகின் மிகச் சிறந்த பகுதியைக் கொண்டிருந்த கிரேக்கர்களும் ரோமர்களும், ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர், எனவே அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா வருவார் என்று அவர்கள்—அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். யூதர்கள், ஒரு மேசியா வர வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ரோமர்கள் ரோமாபுரியில் எழும்பி நிற்கக்கூடிய ஒரு பெரிய அரசியல்வாதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர், கிரீஸ் தேசத்தைக் கைப்பற்றி, அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குக் கூறி, ரோமாபுரி உலகை ஆளுகை செய்யும். கிரீஸ் ஒரு மாபெரும் அரசியல்வாதியை,

அபிஷேகம் பெற்ற அரசியல்வாதியை, ஒரு மேசியாவை, எழுந்து நின்று, “நாங்கள்—நாங்கள் அந்த ரோமானியர்களையும் யூதர்களையும், மற்றவர்களையும் பிடித்துக்கொள்வோம்” என்று சொல்ல வைக்க விரும்பியது. பாருங்கள், அதைத்தான் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் காட்சி இன்றைக்கு இல்லையென்றால், அது என்னவென்று எனக்குத் தெரியாது. சரியே!

151 அரசியல் ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவையே விரும்பினது. மேலும் யூதர்கள் ஒரு மேசியாவைத் தேடிக்கொண்டிருந்தார்கள், மேலும் அவர்கள் தங்களுக்குக் கிடைத்ததைப் போலல்லாமல் வரக்கூடிய ஒருவரை விரும்பினார்கள், அவர்களுக்குள் நுழைந்து, ரோமாபுரியையும், கிரீஸையும் பூமியிலிருந்து அதம்பண்ணிப்போடும் ஒரு தளபதியை அவர்கள் விரும்பினர். அந்தவிதமான மேசியாவைத்தான் அவர்கள் விரும்பினர். அவர்கள் அந்த விதமான மேசியாவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். ரோமர்கள், “எங்களுக்கு ஒன்றை அனுப்புங்கள். அபிஷேகம் பெற்ற, புரிதலுள்ள, அரசியலில் கைதேர்ந்த ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுப்போம், கிரேக்க தேசத்தையும் உலகின் மற்ற எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றுவதற்கான வியூகம் அவருக்குத் துல்லியமாகத் தெரிந்திருக்கும்” என்றனர். உலகின் மற்ற பகுதிகளை எவ்வாறு “தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்று அறியுமளவுக்கு மேதைமையுடனும் அவ்விதமாய் அபிஷேகம் பெற்ற ஒருவரை எங்களுக்கு அனுப்பும்,” என்று உலகின் மற்ற பகுதிகள் கதறிக் கொண்டிருந்தன.

இப்பொழுது, அது இன்றைய உலகத்தின் காட்சியாயிருக்கவில்லையென்றால், அது எனக்குத் தெரியாது.

152 மேலும் சபை, “எங்களுக்கு ஒரு தளபதியை அனுப்பும், அவர் எங்கள் ஒவ்வொருவருக்கும் கவசம் அணிவித்து, வாள் பயன்படுத்தத் தெரிந்து, வியூகத்தையும் எங்களுக்குச் சொல்ல வேண்டும், நாங்கள் ரோமையும், கிரேக்கத்தையும், மற்ற அனைவரையும் பூமியிலிருந்து மிதித்துவிடுவோம்,” என்று கதறியது. அந்தவிதமாகத்தான் அவர்கள் ஆட்சி செய்ய விரும்புகிறார்கள்! அதுதான் வல்லமை.

153 இன்றைக்கும் அதே காரியத்தையே நாம் சபைகளில் காண்கிறோம். மெத்தோடிஸ்டுகலான நீங்கள், நீங்கள் ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எப்படிப்பட்ட ஒரு மேசியா? தேவன் அனுப்பும் ஒருவரை அல்ல. பாப்டிஸ்டுகளே, நீங்கள் ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபையினரே, நீங்கள் ஒருவரையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஒருத்துவக்காரராகிய நீங்கள், நீங்கள் ஒருவரையே தேடிக்கொண்டிருக்கிறீர்கள். அது

உண்மை. ஆனால் நீங்கள் எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்? அதே காரியத்தைத்தான் அரசியல் உலகமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. சில மகத்தான கணித மேதைகள், டி.டி., பிஎச்.டி. பட்டம் பெற்ற ஒரு பெரிய மேதை உங்கள் சபையில் வர, அது இந்த மற்ற ஸ்தாபனங்களைத் தள்ளிவிட்டு, எல்லாரையும் உம்முடைய சபையில் சேரச் செய்யும். மதமாற்றம் செய்வதில் மிகவும் திறமையான ஒரு நபரால் முழு காரியத்தையும் கைப்பற்ற முடியும்.

154 நீங்கள் இங்கே கிறிஸ்துமஸ் நேரத்தில் ஒரு மேசியாவுக்காக அழுது கொண்டிருக்கிறீர்கள். ஹூ-ஹூ. அவர்கள் என்ன பெற்றனர்? அவர்கள்—அவர்கள் அதை விரும்பினர். அவர்கள் அதைக் கைப்பற்ற விரும்புகிறார்கள். இன்றைய உலகம் கைப்பற்ற விரும்புகிறது. சபையானது ஒவ்வொரு ஸ்தாபனத்தையும் கைப்பற்ற விரும்புகிறது. ஆனால் தேவன் அவர்களுக்கு என்ன கொடுத்தார் என்பதைப் பாருங்கள்! அவர்கள் ஒரு இராணுவ மேதையை விரும்பினர். அவர்கள் ஒரு—ஒரு விஞ்ஞான மேதையை விரும்பினர், ஆனால் தேவன் அவர்களுக்கு ஒரு ஆட்டுக்குட்டியை, ஒரு குழந்தையைத் தந்தார். என்னே ஒரு வித்தியாசம்! அழுகிற பிள்ளையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஆனால் அதுதான் அவர்களுக்குத் தேவையாயிருந்தது. தேவன் உங்களுடைய தேவைகளின்படியே உங்களுக்கு அளிக்கிறார். நிச்சயமாக. அவர்கள்…அவர் பெற்றுக் கொண்டார்…அவர்களுக்கு ஒரு தளபதி தேவையாயிருந்தபோது, அவர்களுக்கு ஒரு குழந்தையைப் பெற்றார்கள்; ஆனால் அவர்கள் சாந்தமான, தாழ்மையான ஒரு குழந்தையைப் பெற்றுள்ளனர். தேவன் அவர்களுடைய தேவைகளை அறிந்திருந்தார்.

155 அவர் ஒரு தேசத்திலோ அல்லது ஒரு சபை அரசியல்வாதியாகவோ ஒருபோதும் வரவில்லை. மேசியா இன்றைக்கு வருவாரானால், அவர் ஒரு தேசத்தில் அல்லது ஒரு சபை அரசியல்வாதியாக இருக்க மாட்டார். அப்படிப்பட்ட ஒரு நபருக்காக நாம் அழுதால், தேவன் நமக்கு விடுதலையை அனுப்புவார், ஆனால் அவர் அதை அனுப்புகிற விதமாகவே நாம் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் அதைச் செய்யவில்லை, அவர்கள் அதை அந்தவிதமாக விரும்பவில்லை. இன்றைக்கு சபையானது, “ஓ பரலோகப் பிதாவே, நீர் தயவு கூர்ந்து இயேசுவை எங்களண்டை அனுப்புவீரா? நீர் தயவு செய்வீரா?” என்று கதறுகிறது. பரிசுத்த ஆவியானவர் உள்ளே செல்லத் துவங்கும்போது, “ஓ, அது…நமக்கு அது வேண்டாம்.” பார்த்தீர்களா? சரி, நீங்கள், “ஓ, ஓ, இந்த மனிதன் நம்மை ஆள்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஓ, அதை நான் கேட்க விரும்பவில்லை. இல்லை. என்னே…என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, என்னுடைய ஸ்தாபனம் அதை விசுவாசிக்காது” என்று சொல்வீர்கள்.

அப்படியானால் உங்களுக்கு ஒரு மேசியா தேவையில்லை, நீங்கள் அபிஷேகத்தையே விரும்புகிறதில்லை. தேவன் ஒரு மேசியாவை அனுப்பினால், அவர் வேதாகமத்தில் உள்ள வார்த்தைக்கு வார்த்தை, அதாவது அவர் முதன்முறை எப்படி இருந்தாரோ அப்படியே இருப்பார். அரசியல்வாதிகளும் மற்ற அனைத்தும் சபையின் ஜீவனையே நசுக்குவதைக் காணும்போது, உலகின் கதறல் இதுதான், நாம் அழுது, தேவன் அதை நமக்கு அனுப்பினார், அப்பொழுது நாம் அதை மறுத்துவிடுவோம். அது உண்மை, நாம் அதை விரும்பமாட்டோம். இல்லை, அது நம்முடைய—நம்முடைய ஸ்தாபன நம்பிக்கைகளோடு ஒத்துப்போகவில்லையென்றால், நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பார்த்தீர்களா? ஓ, உண்மையான கிறிஸ்துமஸை நீங்கள் காணவில்லையா…ஜனங்கள் அதை விரும்புகிறதில்லை. தேவன் அதை அனுப்புகிற வழியை அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் ஏதோ ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அதை விரும்புகிறதில்லை.

156 இப்பொழுது, அவர்கள் கதறிக்கொண்டிருந்த அந்த நாளில், தேவன் அவர்களை அனுப்பியது, ஒரு போர் மேதையையோ, கவசமும் கேடயமும் அணிந்து, ரோமர்களையும் கிரேக்கர்களையும் மற்றவர்களையும் கடலுக்குள் விரட்டி, அவர்களை மீண்டும் மூழ்கடிக்கக்கூடிய ஒரு இயற்கைக்கு மேம்பட்ட வாளையோ அல்லது ஈட்டியையோ ஏந்தி இறங்கி வந்த ஒரு மாபெரும் தளபதியையோ அல்ல. அவர் அதைப் போன்ற ஏதோ ஒரு காரியத்தை அவர்களுக்கு அனுப்பவில்லை, அவர் அதை ஒரு முறை மோசேயில் செய்ததாக அவர் கூறினார், ஆனால் அப்பொழுது அவர்களுக்கு அது தேவைப்பட்டது. ஆனால் அவர் அவர்களுக்கு ஒரு இரட்சகரை அனுப்பினார், அவர்கள் அதை விரும்பவில்லை. அவர்கள் இரட்சிக்கப்பட்டதாக நினைத்தார்கள்… பார்த்தீர்களா? அந்தவிதமாகத்தான் இன்றைக்கும் சபைகள் உள்ளன. இந்தக் கிறிஸ்துமஸ் நேரத்தில் கிறிஸ்துமஸின் எல்லா மிடுக்குகளும், சாண்டா கிளாஸ் விளக்குகளும், கத்தோலிக்க மற்றும் ப்ராடெஸ்டெண்ட் சபைகளுக்குள்ளும் அஞ்ஞான குணாதிசயங்களும் மற்ற காரியங்களும் நுழைந்து, அது எவ்வளவு சீர்கேடாய் இருக்க முடியுமோ அவ்வளவு சீர்கேடாய் உள்ளது. தேவன் அவர்களுக்கு ஒரு இரட்சகரை அனுப்புகிறார். என்ன? வார்த்தைக்குத் திரும்பு. பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய மேசியா, அவருடைய அபிஷேகிக்கப்பட்டவர், தம்முடைய சபையை அபிஷேகித்து, அதை வார்த்தைக்குத் திருப்பி அனுப்புகிறார். அவர்களுக்கு அது வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை ஐயா. அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் செய்வது போலவே அவளைப் புறக்கணிப்பார்கள்.

157 அவர் ஒரு இரட்சகரை அனுப்புகிறார், ஆனால் அவர்

எதற்காக ஒரு இரட்சகரை அனுப்புகிறார்? உங்களுக்கு உதவும் ஒரு சிறு காரியத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு முன்குறிக்கப்பட்ட ஜனங்கள் அதைப் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள். அவர் முதல் முறை வந்தபோது இருந்தார், அவர் இரண்டாம் முறை வரும்போதும் இருக்கும். சபை உலகம் அதைக் குறித்து என்ன நினைத்தாலும் சரி, சில...அவர் அதை வீணாக அனுப்புகிறதில்லை. யாராவது ஒருவர் அதைப் பெற்றுக் கொள்வார். யாரோ ஒருவர் அதைப் பெற்றுக் கொள்ளப் போகிறார், அவ்வளவுதான்; ஆனால் அரசியல் உலகமோ அல்லது அரசியல் சபையோ அல்லது அது என்னவாயிருந்தாலும் சரி. ஆனால் நீங்கள் கதறும்போது, தேவன் அதை அனுப்பும்போது, யாராவது ஒருவர் அதைப் பெற்றுக் கொள்ளப் போகிறார். அது உண்மை.

158 அவர் ஒரு இரட்சகரை அனுப்பினார், தேசங்களை நிர்மூலமாக்க அல்ல. இன்றைக்கு நாம் நினைப்பது போல, எழும்பி நிற்கக்கூடிய ஒரு மனிதன் நமக்குத் தேவை. ரஷ்யாவைத் வீழ்த்த ஒரு மனிதனை அமெரிக்கா விரும்புகிறது, கண்டிப்பாக இருக்க விரும்புகிற ஒருவனையே. உலகத்தின் மற்ற பாகங்களைத் வீழ்த்த அவர்களை நிலவுக்குக் கொண்டு செல்லும் ஒரு மனிதனை ரஷ்யா விரும்புகிறது. ஆனால் தேவன் நமக்குச் சமாதானத்தை அனுப்புகிறார். தேவன் நமக்கு நம்பிக்கையை அனுப்புகிறார். நமக்கு அது வேண்டாம். ஓ, “நாம்—நாம் சமாதானத்தை உடையவர்களாயிருக்க முடியும், தேசங்கள் சமாதானத்தையே விரும்புகின்றன” என்று கூறலாம். உண்மையாகவே. அவர்கள் ஐநா சபை ஒன்று கூடும்போது, அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். பாருங்கள், ஐ.நா. அதிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. இன்றைக்கு பெற்றுள்ள இந்த உலகத்தின் சமாதானம், ஆகாயத்தில் மிதக்கும் ஒரு ரப்பர் பலூனைப் போன்றுள்ளது, ஒவ்வொரு சிறு காற்றும் அதை எப்படி வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும். நிச்சயமாக. அரசியலின் எந்த ஒரு சிறு மாற்றமும் அதை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாற்றுகிறது. மற்ற ஜனங்களின் பெயர், உணர்வுகள் கெடலாம் என்ற காரணத்தினால் ஐ.நா.வில் ஒரு ஜெபத்தை கூற முடியாது, தேவனை விசுவாசிக்காதவர்கள். அது நிலைப்படுத்துதல், இல்லையா? எந்த வழியிலும் வாழ்தல். மற்றொரு காரியம், ஒரு பலூன் கூட, எந்தக் காரியத்திலும் வெடித்துவிடும். ஆமென். இந்த உலகத்தின் சமாதானம் என்று *அழைக்கப்படுபவை*, ஐ.நா. போன்றவற்றால் வெடித்துவிடும். சரி. அதில் சமாதானமே இல்லை. மனிதனால் உண்டாக்கப்பட்ட சாதனையினால் சமாதானத்தைக் கண்டறிய முடியாது. அது அங்கே இல்லை. ஒவ்வொரு காற்றிலும் அது அடித்துச் செல்லப்படுகிறது!

159 சபையும் ஒன்றை விரும்புகிறது. அவர்கள் விரும்புகிற... அவர்களுடைய சமாதானம் ஏறக்குறைய...ஒவ்வொரு உபதேசக் காற்றினாலும் அலைக்கழிக்கப்படுகிறது. எல்லாம் சுழன்று வர,

அவர்களில் ஒருவர், “ஓ, நாம் செய்ய வேண்டியதெல்லாம்…” என்கிறார்.

160 நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் வரப்போவதைக் குறித்து எந்த எண்ணமும் கிடையாது. தேவன் தம்முடைய சிந்தனைகளை வெளிப்படுத்திவிட்டார். நீங்கள் சிந்திக்க உரிமையேக் கிடையாது. “கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தையே உங்களுக்குள்ளும் இருக்கட்டும்.” அவர் தேவனுடைய சித்தத்தை தீர்மானித்து நிறைவேற்றினார். அவர், “நான் தேவனுடைய கிரியைகளைச் செய்யாதிருந்தால், அப்பொழுது என்னை விசுவாசிக்காதீர்கள்” என்றார். பார்த்தீர்களா? நீங்கள் வரப்போவதைக் குறித்து எந்த எண்ணமும் கிடையாது. அவர் ஒருவரே சிந்திக்கிறார். அவருடைய சிந்தை உங்களுக்குள் இருக்கட்டும், நீங்களும் அதேவிதமாகவே சிந்தியுங்கள், அது அவருடைய வார்த்தையாயுள்ளது. நீங்கள் எப்படி வித்தியாசமாகச் சிந்திக்கப் போகிறீர்கள்? அவர் தம்முடைய சிந்தனைகளை நமக்கு வெளிப்படுத்திவிட்டார். ஆனால் நாம் நம்முடைய சிந்தையை செய்ய விரும்புகிறோம், “அவர்கள் இதைச் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.”

161 நேற்று நான் ஒரு அன்பான முதியவருடன், நோய்வாய்ப்பட்ட குழந்தைக்காகப் பிரார்த்தனை செய்யச் சென்றுகொண்டிருந்தேன். நாங்கள் அந்தச் சுகவீனமான பிள்ளையிடம் சென்றபோது, நாங்கள் அதற்காக ஜெபிப்பதை குடும்பத்தினர் விரும்பவில்லை என்பது, இந்த மனிதனுடைய கருத்தாயிருந்தது. இருப்பினும், மேலே செல்லும் பாதையில், இந்தப் பெண்மணி, சுமார் எண்பத்தியொரு வயது பெண்மணி, புத்திசாலி, புத்திசாலியான பெண்மணி, மிகவும் நல்லது, ஆனால் அவள், “என்ன நடக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்,” என்று சொன்னாள் (பாருங்கள், “நான் நினைக்கிறேன்”) “எல்லா சபைகளும் ஒன்று சேர்ந்து ஒன்றாக இருக்க வேண்டும்” என்று கூறினாள். அதைத்தான் பிசாசும் நினைக்கிறான். ஆனால் தேவன் தம்முடைய சபையை உலகத்தின் காரியங்களிலிருந்து பிரிக்க விரும்புகிறார். அது சபை அரசியலில் கலக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. பார்த்தீர்களா? தேவன் உலகத்திற்கு ஒரு மேசியாவை அனுப்பினால் என்னவாகும்? அது…அந்தப் பெண்மணி முழு உலகத்தின் சிந்தனைகளை மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருந்தாள். சபைக் கூட்டமைப்பு என்பது அதே சிந்தனையைத் தவிர வேறென்ன? உலக சபைகளின் ஆலோசனை சங்கம் அந்த எண்ணத்தை அடைவதற்காகத்தானே தவிர வேறென்ன? அது சரிதானே? பாருங்கள், அப்படியானால் பெண்மணியே, அந்தப் பெண்மணி உலகத்தின் சிந்தனைகளை மாத்திரமே வெளிப்படுத்தினாள்.

162 ஆனால் இங்கே தேவனுடைய சிந்தனைகள் வேதாகமத்தில் உள்ளன. அதிலிருந்து வித்தியாசமாக எடுத்துக்கொள்ள நமக்கு எந்த உரிமையும் கிடையாது. அதுவே நமக்கு வெளிப்படுத்தப்பட்ட

தேவனுடைய சிந்தனைகளாகும். நாம் காண்கிறோம், உலகம் சீரழிந்து கொண்டிருக்கிறதையும், நாம் ஏதோ ஒன்றிற்காக அழுது கொண்டிருப்பதையும் காண்கிறோம். நாம் அதைப் பெற்றுக் கொள்வோம். இப்பொழுது, அது ஏற்றுக்கொண்டு, நம்மை அரசியலுக்கு வழி நடத்த முயற்சித்தால், அதுவே நம்மைக் கறைபடுத்தியிருக்கிற அதே காரியமாய் உள்ளது.

163 இந்தக் கிறிஸ்தவ வர்த்தகர்களின் தேசியத் தலைவரிடம் நான் ஒரு சிறு காரியத்தைக் கூற வேண்டும். அது ஒரு அருமையான கூட்ட ஜனங்கள், ஆனால் அவர்கள் தவறான வழியில் துவங்கினால், அவர்கள் மற்றவர்களைப் போலத் தூள் தூளாகி, ஒரு ஸ்தாபனமாகிவிடுவார்கள். நீங்கள் எனக்காகவும், இந்த மனிதனுக்காகவும் நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் அவருக்காகக் கர்த்தரிடத்திலிருந்து ஒரு தரிசனத்தை பெற்றிருக்கிறேன், நான் செல்ல வேண்டும். பார்த்தீர்களா? அவர்கள் திருப்பத்தை ஏற்படுத்தவில்லையென்றால், அவர்கள் தொடர்ந்து சென்றால், அவர்கள் ஒரு ஸ்தாபனத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைச் செய்யும்போது, தேவன் அதை முடித்துவிடுகிறார். அது உண்மை.

164 பாருங்கள், புருஷர்கள் தங்களுடைய சொந்த கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள முயன்றாலொழிய ஒன்று சேர முடியாது. அந்தக் காரணத்தினால்தான் தேவன் தனிப்பட்ட நபர்களை எடுத்துக் கொள்கிறார். பார்த்தீர்களா? தேவன் ஒரு ஸ்தாபனத்தோடு இடைபடுகிறதில்லை, ஒருபோதும் இடைபடவேயில்லை. அவர் அவ்வாறு செய்ததாகச் சரித்திரத்தில் எங்குமே இல்லை. அவர் தனிப்பட்ட நபர்களோடு, ஒரு மனிதனோடு தொடர்பு கொள்கிறார். அது உண்மை. ஆனால் நாம் ஒரு குழுவாக ஆண்களை ஒன்று திரட்டி, "இது *இப்படித்தான்,* அது *இப்படித்தான்*" என்றெல்லாம் சொல்ல முயற்சிப்போம். முதலாவதாக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய காரியம், மகத்தான, புத்திசாலித்தனமான, அறிவு நுட்பமான சிந்தையுள்ளவர்கள், பிசாசு அனுப்பியிருக்கிற இந்த இராட்சதர்கள், உள்ளே வந்து, "சரி, அது *இப்படித்தான்* இருக்க வேண்டும். என்னால் அதை உங்களுக்கு நிரூபிக்க முடியும்" என்றனர். நீங்கள் எதை நிரூபிக்க முடிந்தாலும், அது அந்த வார்த்தைக்கு முரணாக இருக்குமானால், அதிலிருந்து விலகியிருங்கள். அது உண்மை. ஒவ்வொரு உபதேசக் காற்றோடும் கொண்டு செல்லப்பட்டது. எங்கும் வேண்டுமானாலும் பரவும், எப்போது வேண்டுமானாலும் அது பாதிப்பை உண்டாக்கும். அது உண்மைதான்

165 ரஷ்யா இன்றைக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் எதைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்? தேவன் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவை, ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பியது போன்ற ஒரு ஆட்டுக்குட்டியை அவர்களுக்கு

அனுப்பினால் என்னவாகும்? அவர்கள் அதை நீக்கிவிடுவார்கள், ஏரோது செய்தது போலத் தங்களால் இயன்றவரை அதைப் நீக்க முயற்சிப்பார்கள். ஒரு மேசியாவைக் குறித்து ரஷியாவின் கருத்து என்ன? அவர்களுக்கு ஒரு விஞ்ஞானம் வேண்டும். அவர்களுக்காக உலகை வெல்லக்கூடிய, அவர்களை முந்திக்கொண்டு நிலவுக்கு வரக்கூடிய, விண்வெளியை வெல்லக்கூடிய, நட்சத்திரங்களுக்கு அப்பால் அவர்களை அழைத்துச் செல்லக்கூடிய, ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட விஞ்ஞானியை, ஒரு மேதையை அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விதமான ஒரு மேசியாவைத்தான் ரஷ்யா எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.

166 ஓ தேவனே! இப்பொழுது கவனியுங்கள், நாம் மீண்டும் கிறிஸ்துமஸ் நேரத்தில் இருக்கிறோம். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டால் என்னவாகும்? அதன்பின்னர் அதற்கு முரணான ஒன்றை நோக்கிப் பாருங்கள். தேவன் சிருஷ்டித்த மற்ற ஜனங்களுக்கு என்ன நேரிடும்? பார்த்தீர்களா? பாருங்கள், தேவன் நமக்கு என்ன தேவை என்பதை அறிந்திருக்கிறார், நாம் விரும்புவது அல்ல. இப்பொழுது அதன் பேரில் ஆராய்ந்து பாருங்கள். ரஷ்யாவுக்கு அதன் அபிஷேகம் செய்யப்பட்டவர் கிடைத்தால் என்ன ஆகும்? இப்பொழுது, அவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இல்லை, இல்லை, அவர்கள் எதையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இல்லை, ஐயா, அவர்கள் அதை விரும்பவில்லை. அவ்வளவுதான். அவர்கள் அதை விரும்புகிறதில்லை. அவர்கள் அதைப் போன்ற எதையும் விரும்புகிறதில்லை. அவர்களுக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா தேவை. நல்லது, *மேசியா* என்றால் “அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்” என்று பொருள். அப்படியானால், அவர்களுக்கு ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட விஞ்ஞானிதான் வேண்டும் என்றால், அணுக்களைப் பிளக்கக்கூடிய, விண்வெளியை வெல்லக்கூடிய, ரஷ்யாவை நிலவுக்கு அழைத்துச் சென்றுவிட்டுத் திரும்பிப் பார்த்துத் தன் மார்பில் தட்டிக்கொண்டு, “உலகமே, நீங்கள் எல்லோரும் நாய்கள், எங்களுக்குச் சேவை செய்யுங்கள்” என்று சொல்லக்கூடிய ஒரு மேதைதான் வேண்டும். அவ்வளவுதான், அதைத்தான் ரஷ்யா விரும்புகிறது. ஓ, ஆம், ஐயா. உங்களுக்குத் தெரியும், முழு உலகமும் கதறுகிறது…

167 அண்மையில் ஜெர்மனி அவர்களில் ஒருவருக்காக அழுதது. அவர்கள் ஒன்றைப் பெற்றனர். அவர்களுக்கு அதனோடு என்ன வந்துள்ளது என்பதையும் கூடப் பாருங்கள். பார்த்தீர்களா? உங்களுக்குப் புரிகிறது அல்லவா? அவர்கள் ஒரு ஹிட்லரைப் பெற்றார்கள். அவர்கள் தங்களுக்கு என்ன பெற்றுக்கொண்டனர்? குழப்பம். நீங்கள் தேவனுடைய மேசியாவை புறக்கணித்தால், அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாக்கள் அதைத்தான் எண்ணுகின்றனர். அவர்கள் என்ன பெற்றனர்? பெந்தேகோஸ்தே

ஆசீர்வாதங்கள் ரஷ்யா அல்லது ஜெர்மனியைத் தாக்கினபோது, அவர்கள் செய்தியைப் புறக்கணித்தனர். அவர்கள் அவர்களைப் பரிகசித்து, அவர்களைச் சிறையில் அடைத்தனர். அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் சிலுவையை புறக்கணித்தனர், அவர்கள் ஸ்வஸ்திகா என்ற இரட்டை சிலுவையை பெற்றார்கள். நீங்கள் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவில்லையென்றால், அப்பொழுது நியாயத்தீர்ப்பைத் தவிர வேறொன்றும் விடப்பட்டிருக்காது. நண்பனே, அது உண்மை. இப்பொழுது அவர்கள் இன்றைக்கு எங்கேயிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பார்த்தீர்களா? கவனியுங்கள், அவர்களுக்கு எந்த ஒரு அங்கத்தினரும் கிடையாது, அவர்கள் ஒரு நொறுங்குண்ட ஜனங்கள். அவர்கள் தவறான மேசியாவை ஏற்றுக் கொண்டனர். ருஷ்யாவும் அதைப் போன்ற ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமானால், அவர்கள் தங்களுடைய மேதையை எவ்வளவுதான் ஏற்றுக்கொண்டாலும், அது அதேக் காரியத்திற்குத்தான் வரும். அது முழு தேசத்தையும் அழித்துவிடும். பார்த்தீர்களா?

168 இந்தியா இன்றைக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரையே விரும்புகிறது. அவர்கள் ஒரு மேசியாவையே விரும்புகின்றனர். இப்பொழுது நினைவிருக்கட்டும், *மேசியா* என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். அவர்கள் அபிஷேகம் பெற்ற ஒருவரை விரும்புகிறார்கள். அவர்களுக்கு என்ன வேண்டும்? உழைக்காமல், தெருக்களில் மேலும் கீழும் நடந்து; ஒரு முனையிலிருந்து மறு முனைக்குப் பொருட்களை வீசி எறிந்து, தங்களுக்கு உணவளித்து, உண்ண உணவு கொடுத்து, உடை அணிவிக்கும் ஒருவரையே அவர்கள் விரும்புகிறார்கள். அங்குதான் காரியம். அவர்கள் வேலை செய்யமாட்டார்கள், அவர்கள் பிச்சை எடுக்க விரும்புகிறார்கள். எனவே, மரங்களின் உச்சியை எட்டி, ரொட்டி, இறைச்சி மற்றும்—மற்றும் பிற பொருட்களை உலுக்கி அவர்கள் மேல் போடக்கூடிய ஒரு புனித மனிதர் தோன்ற வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள், அவர்கள் அங்கே அமர்ந்து உண்டு, மீதி நாள் முழுவதும் உறங்கி, காலையில் சிறந்த ஆடைகளை அணிந்து எழ வேண்டும், அது—அது போன்ற ஒரு மீட்பரைத்தான் இந்தியா விரும்புகிறது.

169 ரஷ்யா இந்தக் கிறிஸ்துமஸில் தங்களுடைய அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக ஒரு விஞ்ஞான மேதையை விரும்புகிறது. அதுதான் அவர்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். வேலை செய்யாமலேயே, அவர்களைப் போஷித்து, அவர்களுக்கு உடை உடுத்தக்கூடிய ஒரு மேசியாவையே இந்தியா விரும்புகிறது.

170 அமெரிக்காவே, உங்களுக்கு என்ன வேண்டும்? அமெரிக்கா, உங்களுடைய கருத்து என்ன? நீங்கள் ஒரு மேசியாவுக்காக அழுது கொண்டிருக்கிறீர்கள். இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது

என்பதை நான் அறிவேன். நீங்கள் ஒரு மேசியாவுக்காக அழுது கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் விரும்பினதைப் பெற்றுக் கொண்டீர்கள். நீங்கள் ஒரு அரசியல்வாதியை விரும்பினீர்கள், நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள். இப்பொழுது அதைக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களைத் தோலுரிக்கப் போகிறது, அது சரியாக அதைத்தான் செய்யப் போகிறது, அது உங்களை உங்களுடைய கல்லறைக்கு அனுப்பப் போகிறது. நீங்கள் அதை விரும்பினீர்கள், நீங்கள் உங்களுடைய வாஞ்சையைப் பெற்றுக்கொண்டீர்கள். இப்பொழுது அதைக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நவீன ஆகாப் மற்றும் யேசபேல், அது இப்பொழுது உங்களுடைய கரங்களில் உள்ளது. நீங்கள் விடுதலைக்காக இங்கு ஓடிக்கொண்டிருக்கிற அதே காரியம், நீங்கள் உங்களை மீண்டும் அதற்குள் இழுத்துக் கொண்டீர்கள், ஆனால் அதைத்தான் நீங்கள் விரும்பினீர்கள். அன்றைய நவீன எல்விஸ் போன்ற தட்டையான மேல்பகுதி கொண்ட ரிக்கியை நீங்கள் விரும்பினீர்கள், நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள். நீங்கள் ஒரு புத்திசாலித்தனமான, கல்வியறிவு கொண்ட ஒரு மேதை மூளையைக் கொண்ட ஒரு அரசியல்வாதியை விரும்பினீர்கள், நீங்கள் அதைப் பெற்றுவிட்டீர்கள். நீங்கள் அதை எப்படி செய்தீர்கள்? நேர்மையற்ற, அதைக் கொண்டு வருவதற்கான அரசியலின் ஒரு இயந்திரம், அதை நல்ல மக்களின் கண்களுக்கு மறைத்தது. இப்பொழுது, நான் ஒரு ஜனநாயகக் கட்சிக்காரனோ அல்லது குடியரசுக் கட்சிக்காரனோ அல்ல, நான் ஒரு கிறிஸ்தவன். பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இருபக்கங்களும் அழுகிப் போயுள்ளன. ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்தின் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் குறைந்த பட்சம் வெளிப்படுத்தின ஒரு மனிதன், அதன்பின்னர் நீங்கள் திரும்பி, நீங்கள் விரும்பும் மேதையைத் தேர்ந்தெடுக்க இயந்திரங்களை (என்ன செய்ய?) அமைக்கிறீர்கள். நீங்கள் அதை எப்படி செய்தீர்கள்? நீங்கள் அவரைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினீர்கள், அதை நாடு முழுவதும் பரப்பி, ஓ, என்னே, தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு ஜனாதிபதிகளுக்கு இடையே உள்ள மனோதத்துவ சக்திகளைச் சோதிக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர். இருக்க வேண்டும் என்றால்...புத்திசாலித்தனமான மூளையுடையவர் என்று நீங்கள் கருதும் ஒருவரை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள், அதற்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று பார்க்கவில்லை.

171 உங்களுடைய பேரத்தில் நீங்கள் பெற்றுள்ளதை நீங்கள் பார்த்தீர்களா? ஹூ-ஹூ. ஹூ-ஹூ. ஓ, இது மீண்டும் கிறிஸ்துமஸ். ஆம், அமெரிக்கா தன்னுடைய மேசியாவைப் பெற்றுள்ளது, நீங்கள் அவரோடு என்ன செய்யப் போகிறீர்கள்? அவன் உங்களுக்கு என்ன செய்கிறான் என்பதைக் கவனியுங்கள். ஹிட்லர் ஜெர்மனிக்கு செய்தது போன்றே, உங்களுக்கு நினைவிருக்கும்.

அதை உங்களுடைய சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். இது ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. ஆமாம். நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டீர்கள். ஆனாலும், நாடு முழுவதும் பரவிய இந்த எழுப்புதல் கூட்டங்களிலிருந்து, தேவனுக்குப் பயப்படும் மனங்களைக் கொண்ட போதுமான நல்ல மனிதர்கள் மீதமிருந்தனர், அவர்கள் அந்த நிகழ்வை நடத்தி, இன்னும் சிறிது காலம் அதைத் தக்கவைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் நீங்களே, உங்கள் வழிமுறைகளைக் கொண்டு, வாக்குகளில் மோசடி செய்யக்கூடிய ஒரு இயந்திரத்தை உருவாக்கினீர்கள், உங்கள் சொந்த செய்தித்தாள்களே அதை நாடு முழுவதும் பரப்பின, அதைச் சரிசெய்ய நீங்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால் நீங்கள் அதைப் பெற்றுவிட்டீர்கள். அப்படியான ஒரு மேசியாவையே அவர்கள் விரும்பினார்கள், அதனால் அவர்கள் இப்போது நிம்மதியாக இருக்கலாம் என்று நினைக்கிறேன், அவர்களுக்கு ஒரு மேதை, மூளைத்திறன் மிக்கவர், ஆம், புத்திசாலி, உயர் கல்வி கற்றவர் கிடைத்துவிட்டார்.

172 உங்கள் கர்த்தரின் போதனையை நீங்கள் நன்கு அறிவீர்கள், அன்றைய மற்றும் அன்றாட தீயவர்கள் எப்போதுமே புத்திசாலிகளாகவே இருந்திருக்கிறார்கள். காயீனின் மக்கள் விஞ்ஞானிகளாகவும் மேதைகளாகவும் ஆனார்கள், அதே சமயம் தேவனுடைய மக்கள் மேய்ப்பர்களாகவும் அதுபோலவும் இருந்து, இறுதியில் அழிவை நோக்கிச் சென்றார்கள் என்பது உனக்குத் தெரியாதா? மேலும், அந்தப் பேழையில் எளிய விவசாயிகளும் அதுபோன்றோரும் காப்பாற்றப்பட்டனர், அந்த மேதை அழிக்கப்பட்டான். “இன்றைய உலகத்தின் பிள்ளைகள், தேவராஜ்யத்தின் பிள்ளைகளைவிட ஞானமும் புத்திசாலித்தனமும் மிக்கவர்கள்” என்று இயேசு கூறினார் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஏன்? அவர்கள் ஆட்டுக்குட்டிகள், அவர்களுக்கு ஒரு தலைவர் தேவை. அவர்கள் தங்களுடைய தலைவனை அறிவுக் கூர்மையின் மூலம் தெரிந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் தாழ்மையுள்ளவர்கள் பரிசுத்த ஆவியாகிய தங்களுடைய தலைவராகத் தெரிந்துகொள்கிறார்கள். அதைத்தான் சபையும் செய்திருக்கிறது, சபை தெரிந்துகொண்ட ஸ்தாபன இராட்சதர்கள்; கிறிஸ்துவின் உண்மையான சரீரம் பரிசுத்த ஆவியையும் அவருடைய வார்த்தையையும் தெரிந்துகொண்டது. நீங்கள் எதை வழி நடத்த அனுமதிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஒரு ஆட்டுக்குட்டி வழி நடத்தப்பட வேண்டும், அங்குதான் நாம் வழிநடத்தப்பட வேண்டும்.

173 இப்பொழுது அவர்கள் தங்களுடைய மேசியாவை, தங்களுடைய அபிஷேகம் பண்ணப்பட்ட கல்வியறிவை உடையவர்களாயும், மதிநுட்பமுள்ளவர்களாயும், புத்திசாலித்தனமாயுமிருக்கிறார்கள். ஓ, என்னே! அந்த மனிதனைப்

போலப் புத்திசாலியாக நிற்கும் ஜனாதிபதி ஒருபோதும் இருந்ததேயில்லை. ஏன், அவர் நேராக எழுந்து நின்று…சரி, இன்று அல்லது இன்றிரவு, அல்லது அடுத்த ஓரிரு நாட்களில், உங்களுக்கு விருப்பமான எந்தக் கேள்வியையும் அவரிடம் கேளுங்கள் என்று, சில நாட்களுக்கு முன்பு வானொலி ஒளிபரப்பில் கேட்டேன். நிச்சயமாக, வெறும்—ஒரு கற்றறிந்த இயந்திரம், அதைத்தான் அமெரிக்கா நம்பியிருந்தது. இப்போது இதை வைத்து நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்பதை நாம் பார்ப்போம். ஹூ-ஹூ.

174 நீங்கள் புறக்கணித்தீர்கள், அமெரிக்கா, நீங்கள் கிறிஸ்துவின் செய்தியைப் புறக்கணித்தீர்கள், உங்களுக்கு முன்பாக உறுதிப்படுத்தப்பட்ட பரிசுத்த ஆவியை நீங்கள் புறக்கணித்தீர்கள், உங்களுடைய சொந்த அரசு சட்டமன்ற கட்டிடங்களில் கூட, மனிதனுடைய சிந்தனைகளை அறிந்த கிறிஸ்துவின் வல்லமை தம்மை வெளிப்படுத்தினது, அவரால் வியாதியஸ்தரை சுகப்படுத்த முடிந்தது, இருதயத்தின் இரகசியங்களை கண்டறிய முடிந்தது, கடைசி நாட்களில் என்ன சம்பவிக்கும் என்று தேவன் கூறினதை அப்படியே செய்ய, நீங்கள் அதைப் புறக்கணிக்கிறீர்கள். போதிய மெருகேற்றப்படவில்லை. அது ஒரு முன்னணையில் பிறந்தது. அது தேசத்திற்கு நாற்றமடித்தது. உங்களுடைய அரசியலும், சபைக் குணமும் கூடத் தேவனுக்கு முன்பாக நாற்றமெடுக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் இனிய மணம் கமழும் தாழ்மையை நேசிக்கிறார். சபையானது அதை, ஒரு போலியான தாழ்மையை விரும்புகிறதில்லை. தேவன் உண்மையான தாழ்மையை விரும்புகிறார். அதைத்தான் அவர் நேசிக்கிறார். இப்பொழுது அவர்கள் தங்களுடைய படித்த இராட்சதனை உடையவர்களாயிருக்கிறார்கள்.

175 சபை, அது ஒரு மேசியாவையே விரும்புகிறது. பாருங்கள், அதற்கு என்ன தேவை? அது ஒரு மேதையான, ஸ்தாபன முறைமைகளை விரும்பி, அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரை ஒரு இடத்திற்கு கொண்டு வர அனுமதிக்கின்றது. நான் இங்கே என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளட்டும், அப்பொழுது அது இங்கேயும், வெளிநாட்டிலும் உள்ளதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்வீர்கள். இன்றைய சபை, உலகில் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் சரியாகச் செய்துகொண்டு, அபிஷேகம் பெற்ற ஒரு மேதையை விரும்புகிறது, பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டிக்கொள்ளலாம், முகத்தில் வண்ணம் பூசலாம், ஆண்கள் நான்கு அல்லது ஐந்து முறை திருமணம் செய்துகொண்டாலும் உதவிக்காரர்களாகத் தொடரலாம், ஓ, அவர்கள் விரும்பியதை எல்லாம் செய்தாலும், தாங்கள் “கிறிஸ்தவர்கள்” என்ற தங்கள் விசுவாச அறிக்கையைத் தக்கவைத்துக்கொள்ளலாம். நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள்!

176 தேவனுடைய மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை,

வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை, வார்த்தை தானே முன்னோக்கி கொண்டு வரப்படுவதை நீங்கள் விரும்புகிறதில்லை. உங்களுக்கு அது வேண்டாம். தேவன் அதை உங்களுக்கு அனுப்பினார். ஆனால் சபையோ அதை விரும்புகிறதில்லை. அவர்கள் தங்களுடைய கோட்பாடுகளை விரும்புகின்றனர், எல்லாமே அதற்குப் பணிந்திட கோட்பாடுகளைப் பொருத்தக்கூடிய ஒரு மேதையையே அவர்கள் விரும்புகிறார்கள். நீங்கள் அவனைப் பெற்றுக் கொள்வீர்கள், ஹு-ஹூ, அது அதனுடைய பாதையில் உள்ளது. நீங்கள் அதற்கு நிறைய பிள்ளைகளை உடையவர்களாயிருக்கிறீர்கள், ஆனால் என்றாவது ஒரு நாள், யோசேப்பை அறியாத ஒரு பார்வோனைப் போன்ற, ஒரு தாத்தா எழுப்புவார். அதைத்தான் நீங்கள் விரும்பினீர்கள், அதைத்தான் சபையும்...அவர்கள் செய்து கொண்டிருக்கிற வழியை உங்களால் காண முடியும், ஆம் ஐயா, அதே வழியில்.

177 வெளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரம் அந்த வேசியையும் அவளுடைய குமாரத்திகளையும் குறித்து தெளிவாக விளக்குகிறது. சரியாக. அவை யாவும் தாய்வீட்டிற்கு திரும்பிச் செல்லும், அது இப்பொழுது ஒரு உலகளாவிய சபையை உருவாக்கும் அதனுடைய பாதையில் உள்ளது. ஸ்தாபனங்கள், நீங்கள் விரும்புவதை சரியாகப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள். எனக்குச் செவிகொடுங்கள்! அப்பொழுது அது நிறைவேறும்! அந்த நேரத்தில் நான் போய்விட்டிருக்கலாம். ஆனால் சாயங்கால வெளிச்சம் மங்க துவங்கி அணைந்து போகும்போது, அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், அவர்கள் சுற்றும் முற்றும் பார்த்து, அவர்கள் தங்களுடைய ஸ்தாபனத்தினால் ஏதோ ஒரு காரியத்திற்கு பலவந்தம்பண்ணப்படுவதை அவர்கள் காண்கிறார்கள், அவர்களுடைய ஸ்தாபனம் அவர்களுடைய நன்மதிப்பை காப்பாற்றிக்கொள்ளவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் யாவரும் அதைச் செய்வார்கள். ஆனால் அந்த முறைமையை விரும்பாத அந்த ஜனங்கள், தேவனுடைய முறைமையை, பரிசுத்த ஆவியையும் வார்த்தையையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள், “அந்த மனிதன் சரியாக இருந்திருக்க வேண்டும்” என்கின்றனர். அப்பொழுது மிகவும் தாமதமாகலாம்.

178 எபிஸ்கோபலியன்கள், பிரஸ்பிடேரியன்கள், பாப்டிஸ்டுகள், யாவரும் முழு சுவிசேஷ வர்த்தக புருஷர்க்குள் வருவதையும், எல்லாம் பரிசுத்த ஆவியைத் தேட முயற்சிப்பதையும் நாம் காண்கிறோம். உறங்கிக்கொண்டிருந்த கன்னி எண்ணெய் வாங்க வர முயன்ற அந்தச் சரியான நேரத்தில்தான் மணவாளன் வருவார் என்பதை மக்கள் உணரவில்லையா? அப்பொழுதுதான் இயேசு மணவாளன் உள்ளே வந்தார் என்றும், உள்ளே சென்றார் என்றும் கூறினார், ஆனால் அவர்கள் உள்ளே வரவில்லை. இந்த மனிதர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் உள்ளே நுழையவில்லை என்று வேதம் நிரூபிக்கும்போது, அதைப்

பற்றி ஏன் கூச்சலிட வேண்டும்? அவர்கள் இதைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கையில், மணவாளன் வந்தார், அவர்கள் புறம்பான இருளில் தள்ளப்பட்டனர். அது என்னவாயிருந்தது? அவர்கள் எல்லாவிதமான அசைவுகளையும், எல்லாவிதமான ஒப்பனைகளையும் கொண்டிருந்திருக்கலாம், எல்லாவிதமான உணர்ச்சிகளும் அதற்கு அத்தாட்சியாகக் காணப்பட்டிருக்கக்கூடும், ஆனால் சபையோ முத்திரையிடப்பட்டுவிட்டது, அவள் போய்விட்டாள். ஹூ-ஹூ. அது தீர்க்கதரிசனமாக இருக்கலாம்.

179 அவர்கள் ஏதோ ஒன்றை விரும்புகிறார்கள், அவர்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ முடியும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள், அதைத்தான் சபை உலகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. யாராவது ஒருவர் அந்த—அந்த நகரத்தின் மிகப் பெரிய சபைக்கு அவர்கள் செல்ல முடியும் என்று, அதாவது நகரத்தின் எல்லாப் பிரபலங்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்களால் கட்டிடத்தின் மேல் மிக உயரமான கூர்முனை அமைக்க முடியும். அவர்கள் மிகச் சிறந்த இசைப்பேழையை உடையவர்களாயிருக்க முடியும். அவர்கள் அமர முடியும். அவர்கள் வாழும் முறையைக் குறித்து அவர்களிடத்தில் ஒரு வார்த்தையும் கூறாத ஒரு ஊழியக்காரரை அவர்கள் வைத்திருக்க முடியும், அவர்கள் நடனமாட விரும்பினால், அவர்கள் ஒருவிதமான நிகழ்ச்சியை நடத்த விரும்பினால், அவர்கள் குட்டை கால் சட்டைகளை அணிய விரும்பினால், அவர்கள் தங்களுடைய தலைமுடியை குட்டையாக வெட்டிக் கொள்ள விரும்பினால், அல்லது அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள், அவர்கள் சிகரெட்டுகளைப் புகைக்கலாம், அல்லது வெறுமனே சமூகக் மது அருந்துதல் போன்ற பழக்க வழக்கங்களைச் செய்யலாம். அதுவே சபைகளில் உள்ள நடைமுறைகளாகும். நவீன மது அருந்துதல், அப்படியே உங்கள் பிள்ளைகளுக்குக் குடிக்கக் கற்றுக் கொடுங்கள், ஆனால் அளவுக்கு மீறிய மது அருந்த வேண்டாம். புகைப்பிடி, ஆனால் மிகையாக இல்லை—இல்லை. நீங்கள் விரும்புகிற எதையும் அணிந்துகொள்ளுங்கள், ஆனால் எப்படி என்று உங்களுக்குத் தெரிந்தவரை அல்லது உங்களால் முடிந்தளவு உங்களை ஒழுக்கமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். பார்த்தீர்களா? ஓ, அந்த மாய்மாலம்! அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட பிசாசு! அது ஸ்தாபனம் என்று அழைக்கப்படுகின்ற காரியமே! அது மார்க்கம் என்று அழைக்கப்படுகின்ற காரியமே! அது பிசாசினால் உண்டானது. கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் திரும்புங்கள்! "இந்த மோசமான சந்ததியினரிடத்திலிருந்து உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்." நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்ப மிகவும் காலதாமதமானதற்கு முன்னர் மனந்திரும்புங்கள், அது எந்த நேரத்திலும் நிகழலாம்.

180 நித்திரை செய்யும் கன்னிகைகள் அவள் செய்கிற விதமாகச் செயல்படுவதை நாம் காணும்போது, அது ஜனங்களைப் பைத்தியமாக்கும் அளவுக்குப் பயமுறுத்துவது போலத் தோன்றுகிறது. ஆனால் அதற்குப் பதிலாக, அவர்கள், "ஓ, மகிமை, இது அற்புதமானதல்லவா! அல்லேலூயா!" ஓ, என்னே! ஜனங்கள் எவ்வளவு தூரம் செல்ல முடியும்? ஹூ-ஹூ. ஆப்பிரிக்காவில் ஒரு கால்நடை மேய்ப்பவனுக்கு எகிப்திய இரவைப் பற்றி அறியாததைப் போல, தேவனின் வார்த்தையைப் பற்றி அதிகம் அறியாமல், தங்கள் அரசியல் மனப்பான்மையுடனும் நவீன கருத்தாக்கத்துடனும் அவர்கள் என்ன மாதிரியான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவார்கள். சரிதானே! அதைக் குறித்த ஒரு—ஒரு வேத சாஸ்திர கருத்து, அல்லது அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஏதோ ஒரு உளவியல் சார்ந்த காரியம் ஒரு கோட்பாட்டின் வழியில் அல்லது ஏதோ ஒரு விதமான காரியத்தில், பெந்தெகொஸ்தேயினர் அதனோடு மோசமாக இருக்கிறார்கள். அந்த வெளிப்படுத்திக் கூறும் சொற்றொடருக்காக மன்னிக்கவும். பெண் பிரசங்கிமார்கள் போன்றவர்களின் இந்த ஏராளமான காரியங்கள் அதற்கு அடிப்படையாகவே உள்ளன. சரியே! அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. நடனம், ராக் அண்ட் ரோல், கல்வி, அந்தவிதமான ஒரு—ஒரு சபையையே உலகம் விரும்புகிறது. அந்தவிதமான ஒரு மேசியாவையே அவர்கள் விரும்புகிறார்கள், அது அவர்களை ஒன்றாக இணைக்கக்கூடிய ஒருவரையேயாகும். நீங்கள் ஒன்றைப் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள். ஹூ-ஹூ. அதனுடைய ஆவி ஏற்கனவே மனுபுத்திரர் மத்தியில் கிரியை செய்து கொண்டிருக்கிறது. அது உண்மை. இன்னும் கிறிஸ்தவ மார்க்கத்தையே அறிக்கையிடுகிறார்கள், அவர்கள் அதைப் பெற்றுக் கொள்வார்கள்.

181 தேவன் அவர்களை அனுப்பினார், 1963-ல் நம்மேல்... அனுப்பினார், தேவன் 1963-ல் நம்மேல் அனுப்புவாரானால், ஆதியில் அவர் செய்த அதே அபிஷேகத்தை, அப்பொழுது அவர்கள் செய்தது போலவே நாமும் அதை மறுப்போம். ஏனென்றால், அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர், மேசியா, சபைக்கு வந்திருந்தால், அவர் இருந்தார் என்று வேதம் கூறினது போன்றே அவர் இருப்பார். எபிரெயர் 13:8-ல், "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் நாம் ஒரு மேசியாவுக்காக, அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவருக்காக ஜெபிப்போமானால், என்ன, நமக்கு ஒரு மத சம்பந்தமான அரசியல்வாதி தேவையா? [சபையோர், "இல்லை" என்கின்றனர்.—ஆசி.] நமக்கு ஒரு இராணுவ மேதை வேண்டுமா? ["இல்லை."] நமக்கு ஒரு படித்த விஞ்ஞானி வேண்டுமா? ["இல்லை."] உங்களுக்கு ஒரு ஆட்டுக்குட்டி தேவை. ["ஆமென்."] உங்களைத் திரும்பக் கொண்டு வரும் ஒரு ஆட்டுக்குட்டியே வேண்டும், தங்களுக்கு

மகிமையல்ல, ஆனால் வார்த்தைக்குத் திரும்புதல். மீண்டும்! சத்தியம் என்னவாயிருந்தாலும் பொருட்படுத்தாமல் அதை உங்களுக்குக் கூறும் ஒன்று, பாருங்கள், அதனோடு சரியாக நிலைத்திருங்கள், அதனோடு ஒழுங்கில் இருங்கள். அவர்கள் அதை விரும்பவில்லை. அவர் இன்றைக்கு வருவாரானால், அப்பொழுது அவர் இருந்தது போன்று அவர் இருப்பார், அவர் சரியாகப் பிதாவின் வார்த்தையோடு தரித்திருப்பார். வேதாகமத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஒவ்வொரு வார்த்தையும் மனுஷ புத்திரருக்கு வெளிப்படுத்தப்பட்டது என்று அவர் நிச்சயமுடையவனாயிருப்பார். அது சரியாகத்தான் உள்ளது.

182 இயேசு, "என்னிடத்தில் பாவத்தை நிரூபிப்பவன் யார்? பாவத்தையும் அவிசுவாசத்தையும் என்னிடத்தில் குற்றப்படுத்தக் கூடியவன் யார்? நான் செய்வேன் என்று பிதாவானவர் கூறியிராத ஒவ்வொரு காரியத்தையும் நான் செய்திருக்கவில்லையென்றால், அப்பொழுது நான் அதை எங்கே தவறவிட்டேன் என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றார். ஆமென். "நான் எதில் குறைவாக இருக்கிறேன் என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றார். ஆமென். பாவம் என்பது அவிசுவாசம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது உண்மை. நாம் அதை அறிவோம். "பிதாவானவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நான் நிறைவேற்றாததை யார் எனக்குக் காண்பிக்க முடியும்? நான் அதைச் செய்யவில்லை என்று யார் தங்களுடைய விரலைக் கொண்டு என்னைச் சுட்டிக் காட்ட முடியும்? உங்களில் யார்?" என்று கேட்டார். அப்படியென்றால், அவர்கள் ஏன் அவரை நிம்மதியாக இருக்க விடவில்லை? ஏனென்றால் அவர்கள் அதைச் செய்வார்கள் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் முதலில் செய்தது போலவே பிதாவின் வார்த்தையைக் காத்துக்கொள்வார். தேவன் வார்த்தையாயிருக்கிறபடியால், அவரால் மாற்ற முடியாது, ஏனென்றால் அவர் அதை அப்படியே காத்துக் கொள்வார். ஏனென்றால் அவர் சரியாக அந்த விதமாகவே இருக்கிறார், அவர் வார்த்தையாயிருக்கிறார். அவர் என்ன வார்த்தையாயிருக்கிறார்? அவர் தேவனுடைய வார்த்தையை எடுத்து அதை வெளிப்படுத்துகிற பரிசுத்த ஆவியானவராயிருக்கிறார். அதைத்தான் இயேசு கிறிஸ்து…ஆவியாகிய தேவன், பிதா, தம்முடைய குமாரனின் ரூபத்தில் நமக்கு மத்தியில் மாம்சமானார், அவர் தேவனுடைய வார்த்தையை எடுத்து அதை வெளிப்படுத்தி, அதை ஜனங்களுக்குக் காண்பித்தார், அவர்கள் அந்தவிதமானதை விரும்பவில்லை. அவர்கள் தங்களுடைய சொந்த கோட்பாடுகளை உடையவர்களாயிருந்தனர், அவர்கள் தங்களுடைய சொந்த ஸ்தாபனங்களை உடையவர்களாயிருந்தனர், அது அவர்களுடைய எல்லா ஸ்தாபனங்களுக்கும் முரணாயிருந்தது, ஆகையால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

183 இன்றைக்கும் அதேவிதமாகத்தான் இருக்கும். மேசியா

வருவாரானால், அவர் இங்கே தேவனுடைய வாக்குத்தத்தம் செய்துள்ள காரியங்களையும், வேதத்தில் உள்ள இவைகளையும், அவைகளை மனுபுத்திரருக்கு முன்பாக வெளிப்படுத்த, ஒவ்வொரு ஸ்தாபனமும் அவரைப் புறக்கணிக்கும். அவர்கள் அதை விரும்புகிறதில்லை. அவர்களுக்கு அதனோடு எந்தச் சம்மந்தமும் கிடையாது. ஆனால் அந்தவிதமாகத்தான்—அப்படித்தான் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். அவர் அவர்களுக்கு எதையாகிலும் அனுப்பினால், அது அப்படித்தான் இருக்கும். பிறகு அவர்கள் அதைக் கண்டிப்பார்கள், அதன் மூலம், அக்காலத்தில் யூதர்களும் மற்றவர்களும் செய்தது போலவே, இந்த இன மக்கள்மீது தங்களுக்குத் தாங்களே கண்டனத்தைத் தேடிக்கொள்வார்கள். ஆம், ஐயா. மேசியா 1963-ல் வருவாரானால், அவர் என்ன செய்வார் என்று உங்களுக்குத் தெரியுமா, அவர் என்ன செய்வார் என்று உங்களுக்குத் தெரியுமா? நாம் பெற்றுள்ள ஒவ்வொரு ஸ்தாபனத்தையும் அவர் அழித்துப்போடுவார். அவர் அதை அடியோடு பிரித்துவிடுவார்.

184 பாருங்கள், அவர்கள், "அவர் எதை அசைப்பார், வேத பண்டிதர் *இன்னார்-இன்னாரா* அல்லது வேத பண்டிதர் *இன்னார்-இன்னாரா*? என்று கேட்பார்கள்.

185 அவர், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள், அவனுடைய கிரியைகளை நீங்களும் செய்கிறீர்கள்" என்று கூறுவார். அவர் சரியாகக் கூறுவது இதுதான். அவர் அவர்களை எந்த விதத்திலும் தயவு தாட்சண்யம் பார்க்கமாட்டார். அவர் ஆதியில் அதைச் செய்யவில்லை, அவர் அன்று இருந்தவிதமாகவே இன்றைக்கும் இருக்கிறார். வார்த்தைக்கு முரணாக எது இருந்தாலும், அதை அவர் அவ்வாறே அழைப்பார். அவர், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள், அவனுடைய கிரியைகளை நீங்களும் செய்கிறீர்கள். அவருடைய வார்த்தைக்கு முரணான காரியங்களைச் செய்கிறீர்கள்" என்று கூறுவார். அது உண்மை. மேசியாவின் அடையாளம் அவரைப் பின்தொடரும். அது உண்மை. அவர் அவர்களுக்கு முன்பாக எழும்பி நின்று, "இது சம்பவித்ததை நான் நிறைவேற்றவில்லையா? உங்களில் எவன் என்னை அவிசுவாசத்தினால் ஆக்கினைக்குட்படுத்த முடியும்?" என்று சொல்லட்டும். பார்த்தீர்களா?

186 ஆனால் அவர்கள் அவரை ஒரு கைப்பொம்மையாக்கி, அந்தப் பரிசேயர் செய்ததுபோல, அவரை இடம் விட்டு இடம் சுற்றிக் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள். ஒரு பெரிய கூட்டமான விருந்தாளிகளைச் சுற்றி வளைத்து, சிறிது பொழுதுபோக்கிற்காக அவரை அங்கே கொண்டு வந்து, அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்பதை நிரூபிக்கப் போகிறார்கள். அதன் பேரில் நான் போதிக்கின்ற கதையை நீங்கள் அறிவீர்கள். பாருங்கள், அவர்களுடைய

பொழுதுபோக்குக்காக அவன் எதையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு வருகிறானோ, அதற்காக அவர்கள் இன்றும் அதே காரியத்தைச் செய்வார்கள், அதற்காக அவர்கள் இன்றும் அதே காரியத்தைச் செய்வார்கள். அவர் செல்வார். அல்லேலூயா! அவர் போவார், ஏனென்றால் அவர் அழைக்கப்பட்ட இடத்திற்கு அவர் எப்பொழுதும் செல்கிறார். அப்பொழுது அந்தப் பரிசேயன் என்ன செய்யப் போகிறான் என்பதை அவர் அறிந்திருந்தார். பரிசேயன் அவருக்காக எந்த உபயோகமும் கொண்டிருக்கவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். எங்கேயோ ஒரு சூழ்ச்சி ஒளிந்திருக்கிறது என்று அவருக்குத் தெரியும். அந்தப் பரிசேயர்களுக்கும் அவருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, அவர்கள் அவரை வெறுத்தார்கள். மேலும் இந்த வயதான சீமோன், தம்முடைய இடத்தைச் சுற்றி ஒரு கூட்டத்தைக் கூட்டுவதற்காக, அவர் கீழே இறங்கி வர வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அவர் அதை அறிந்திருந்தார். அவர் உள்ளே நடந்து சென்றார். அவன் அவருக்கு அதிக கவனம் செலுத்தினானா? அவன் அந்த உயரிய பிரமுகர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவர் கழுவப்படாத கால்களோடு அமர்ந்திருந்தார். இன்றைக்கும் அதேவிதமாகத்தான் இருக்கும். அவர்கள் கிறிஸ்துவை விரும்புகிறதில்லை. அவர்கள் தேவனுடைய வழியை விரும்புகிறதில்லை, நீங்கள் பாருங்கள்.

187 ஆம், இயேசு, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று கூறுவார். அந்த மனிதர்கள் அந்த நியாயப்பிரமாணங்களையும் மற்ற காரியங்களையும், தங்களுடைய ஸ்தாபனங்களிலும், கோட்பாடுகளிலுமுள்ள ஒவ்வொரு காரியத்திலும், சரியாகப் பின்பற்றினார்கள்; அவர்கள் பாத்திரங்களைக் கழுவுவார்கள். இயேசு, "நீங்கள் உங்களுடைய கோட்பாடுகளை எடுத்துக்கொண்டு, உங்களுடைய பாரம்பரியங்களினால் தேவனுடைய வார்த்தையை அவமாக்கியுள்ளீர்கள்" என்றார். அங்கே எபிரெயர் 9:12 கூறுகிறது, நான் நினைக்கிறேன், இல்லை, அது எபிரெயர் 12…இல்லை, 9:12-ல் அவர் அதைக் ஏதோ அந்த இடத்திற்கு அருகில் கூறினார் என்று நான் நினைக்கிறேன், "நாம் சுத்திகரிக்கப்பட்டு, மன்னிக்கப்படும்போது, நாம் செத்த மாம்சபிரகாரமான கிரியைகளிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறோம்." நாம் உண்மையாகவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளாக வருகிறபோது, நாம் மாம்சபிரகாரமான கிரியைகளில் மரித்திருக்கிறோம். ஓ, பெந்தேகோஸ்தே சபையே, நீங்கள் ஏன் அப்படிப்பட்ட ஒரு தவறைச் செய்தீர்கள்? குருடனுக்கு வழிகாட்டும் குருடனே! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நீங்கள் அதிலிருந்து வெளியே வந்து, இந்தக் கூட்ட ஜனங்களை மீண்டும் அதற்குள் இழுத்துக்கொண்டீர்கள் என்பதை நீங்கள் அறியவில்லையா?

உங்களால் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க முடியவில்லையா? உலர்ந்த எலும்புகளே, உங்களுக்கு என்ன நேர்ந்தது? உங்களுக்கு அனுப்பப்பட்டதை நீங்கள் பெற்றுக்கொள்ளமாட்டீர்கள். அவர்கள் அப்போதும் செய்யவில்லை, இப்போதும் செய்யமாட்டார்கள்.

188 இப்பொழுது, உங்களுக்கு என்ன தெரியும்? மீண்டும், அவனுடைய திட்டங்களும், ஸ்தாபனங்கள் மற்றும் கோட்பாட்டின் உலகத்தின் திட்டங்களும் மீண்டும் சீரழிந்து கொண்டிருக்கின்றன. மனிதனுடைய திட்டங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. தேவன் நமக்கு ஒரு கோட்பாட்டை ஒருபோதும் அளிக்கவில்லை. அவர் எங்களுக்கு ஒரு ஸ்தாபனத்தை அளிக்கவில்லை. அவர் எங்கே செய்தார் என்பதை வேதாகமத்தில் யாராவது எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் அதைச் செய்யக் கூடாது என்று அவர் எங்கே கூறினார் என்பதை என்னால் உங்களுக்குக் காண்பிக்க முடியும். அதைச் செய்யும்படி அவர் எங்கே கூறினார் என்பதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள். நீங்கள், “அப்படியானால், சகோதரன் பிரான்ஹாம், இயேசு மனிதனுக்கு என்ன அளித்தார்?” என்று கேட்கலாம். ஒரு இராஜ்யம். அல்லேலூயா! அவர் ராஜா, பரிசுத்தவான்களின் ராஜா, கர்த்தாதி கர்த்தர். அவர் நமக்கு ஒரு இராஜ்ஜியத்தை அளித்தார். ஒரு அரசியல்வாதியல்ல, ஸ்தாபன முறைமை; ஆனால் ஒரு இராஜ்ஜியம். அவர் பிலாத்துவிடம் கூறினார்…பிலாத்து, “நீர் யூதரின் ராஜாவா?” என்று கேட்டான்.

189 அதற்கு அவர், “நீர் அதைக் கூறினீர்” என்றார். அவர், “என்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாயிருந்தால், என் மனுஷர் எனக்காகப் போராடியிருப்பார்களே, ஆனால் என்னுடைய ராஜ்யம் உன்னதமானது” என்றார்.

190 நாம் உன்னதமான இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாயிருக்கும்போது, நாம் ஏன் இந்த உலகத்தின் காரியங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும்? பார்த்தீர்களா? எங்கோ ஏதோ தவறு உள்ளது. ஆனால் நமக்கு ஒரு முறைமை அளிக்கப்படவில்லை. நமக்கு ஒரு ஸ்தாபனம் அளிக்கப்படவில்லை, உலகத்தின் ஒரு—ஒரு அரசியல் ஆளுகை நமக்கு அளிக்கப்படவில்லை. ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவன் நமக்குள் இருக்கிறபடியால், நமக்கு ஒரு சாந்தமான ராஜ்ஜியம் கொடுக்கப்பட்டது. நீங்கள் உலகத்திற்குரியவர்களல்ல, நீங்கள் இனிமேல் உலகப்பிரகாரமானவர்களல்ல. “பிள்ளைகளே, நீங்கள் உலகப்பிரகாரமானவர்கள் அல்ல. பிதாவே, நான் உலகத்தைச் சேர்ந்தவன் அல்லாததுபோல, அவர்களும் உலகத்தைச் சேர்ந்தவர்களாக இராதிருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன்.” பார்த்தீர்களா? அந்தவிதமாகத்தான் இயேசு நமக்காக ஜெபித்தார். அதே சமயத்தில் எல்லாவிதமான ஜனங்களும் உள்ளே அழைத்துச் செல்லப்படுகின்ற உலகப்பிரகாரமான இணைப்பில் நம்மை

ஈடுபடுத்திக்கொள்கிறோம். இப்பொழுது, மாய்மாலக்காரர்களால் நிரம்பாத ஒரு சபை கூட உலகத்தில் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இயேசு, “அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக” என்றார்.

191 அப்படியென்றால் நீங்கள் பிறக்கும்போதே தேவனுடைய ராஜ்யம் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும்போது, ஏன் ஒரு அமைப்புடன் உங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்? அதில் ஒரு மாய்மாலக்காரனும் இல்லை! ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள அவருடைய வார்த்தையை விசுவாசித்து, அதனோடு தரித்திருக்கிற எல்லா தூய்மையான, கலப்படமற்ற தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமே. உங்களுடைய ஜீவியம் அதை நிரூபிக்கிறது, தேவன் தம்முடைய வார்த்தையை அதற்கு உறுதிப்படுத்துகிறார். அதுதான் மேசியா. அதுதான் மேசியாவின் மனைவி. மேலும், அந்த அமைப்பில் தமது மேசியாத்துவத்தை ஸ்தாபனக் கோட்பாடுகளுடன் கலக்காமல் நேராக நிலைநிறுத்துவதற்காகவும், ஆனால், களைகளை நீக்கி, சபையைத் தூய்மையாகவும், கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கலப்படமற்றதாக வைத்திருப்பதற்காகவும், தேவன் போதகர்கள், மேய்ப்பர்கள், தீர்க்கதரிசிகள் போன்ற பலரை அதில் நியமிக்கிறார்.

192 சபை அதை ஏற்றுக்கொள்ளும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் அதை உதைத்துத் தள்ளிவிடுவார்கள். அதனோடு எந்தச் சம்மந்தமும் வைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த அரசியல் முறையை வைத்துள்ளனர். அமெரிக்கா தன்னுடைய மேதைகளைப் பெற்றுள்ளதுபோல, சபையும் அதனுடைய மேதைகளைப் பெற்றுக்கொள்ளப்போகிறது. அது அதைப் பெற்றுக் கொள்ளும், நீங்கள் கவனியுங்கள். அது இப்பொழுது அதனுடைய பாதையில் உள்ளது. அவர்கள் தங்களை அதற்குள் திரித்துக் கொண்டுள்ளனர்.

193 ஆனால் நாம் ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுள்ளோம், இந்த இராஜ்ஜியத்தில் அதற்கு நித்திய ஜீவன் உண்டு. அங்கத்துவம் அல்ல, ஆனால் நித்திய ஜீவன். அது ஒரு நித்திய இராஜாவால் ஆளப்படுகிறது. உலகம் தோற்றத்திற்கு முன்னரே முன் குறிக்கப்பட்ட ஒரு நித்திய ஜனங்களுக்கு, ஒரு நித்திய ராஜாவால் ஆளப்படும், நித்திய ஜீவன் நிறைந்த ஒரு நித்திய ராஜ்யம். “ஏனென்றால், எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களை அழைத்தார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்,” எபிரெயர் 11. அது உண்மை.

194 இப்பொழுது, நீங்கள் எதைத் தேடுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே அது உள்ளது. நீங்கள் ஆபிரகாமாயிருந்தால், நீங்கள்

அந்த இராஜ்ஜியத்திற்காக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள். என்னால் அதை இந்தக் காலையில் உங்களுக்குக் காண்பிக்க முடியும். ஆம், ஐயா. இப்பொழுது, முன்குறிக்கப்பட்ட நித்திய ஜனங்களுக்காக, ஒரு நித்திய ராஜாவினால் தமது நித்திய வார்த்தையால் ஆளப்படும், நித்திய ஜீவன் நிறைந்த ஒரு நித்திய ராஜ்யம். இதோ அது உள்ளது. ஏன்? அது எப்பொழுதுமே இருந்தது, எப்பொழுதும் அவ்வாறே இருக்கும், ஒருபோதும் ஒரு துவக்கமோ அல்லது முடிவோ இல்லாதிருந்தது. தேவனுடைய சிந்தையில் அது மிகத் தன்னிலேயே இருந்தது…அது நித்தியமாகத் தேவனுடன் இருந்தபோது. தேவனுடைய நோக்கம் நிறைவேற்றப்படும்.

195 எனவே, இந்த உலகம் சீரழிந்துகொண்டிருக்கிறது. அவள் நிலைகுலைந்து போகட்டும், பரவாயில்லை, அது எப்படியும் சீரழிந்துதான் போகும். மீகா இங்கே என்னக் கூறினான், மீகா இங்கே எதைக் குறித்துப் பேசினான்? மலைகள் உருகும், அது மெழுகு போல உருகி, ஒரு—ஒரு பனிப்பாறையைப் போல ஊற்றப்படும், அல்லது சரியாகக் கூறினால், ஏதோ ஒருவிதமான ஒரு வெந்நீர் ஊற்றைப் போல. அது உருகி விழுந்து போகும், ஆனால் யேகோவா என்றென்றைக்குமாய் நிலைத்திருப்பார். "மாம்சமெல்லாம் புல், தேவனுடைய சுவாசம் அது பூ, புல், எவ்வளவு அழகாயிருந்தாலும், அது உதிர்ந்துபோகிறது, நம்முடைய தேவனுடைய வார்த்தையோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று கூறியுள்ளது, ஏசாயா 40-ல் மேசியாவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. நம்முடைய எல்லா கோட்பாடுகளும், ஸ்தாபன முறைமைகளும், கல்வியாளர்களும், மேதைகளும், மற்ற யாவும் அழிந்துபோம், ஆனால் தேவனுடைய வார்த்தையோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."

196 நாம் கிறிஸ்துமஸ் நேரத்தில் இருக்கிறோம். நாமும் கூட இந்த நாளின் நேரத்தில் இருக்கிறோம் என்பதை நான் அறியவில்லை. இந்த நேரத்தின் தேவையைக் குறித்து நான் நினைக்கும்போது நான் மெய்மறந்து போகிறேன். நான் துரிதமாக முடிக்கிறேன். ஆம். மேலும் நாம் இந்த ராஜ்யத்தில் பிறக்கிறோம், மேலும்… விசுவாசிக்கிற கிறிஸ்தவர்களாகிய நாம்—நாம் இந்த இராஜ்ஜியத்தில் இருக்கிறோம். இப்பொழுது, எபிரெயப் புத்தகத்தில், நாம் சற்று முன்னர், "நாம் ஒரு இராஜ்ஜியத்தைப் பெறுகிறோம்" என்று வாசித்தோம். ஒரு கோட்பாட்டைப் பெற்றுக் கொள்வதில்லை, ஒரு முறைமையைப் பெற்றுக் கொள்வதில்லை. "நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொள்கிறோம்." உலகம் சீரழிந்து கொண்டிருக்கிறது. அது உண்மை. ஒவ்வொரு அரசியல்வாதியும், ஒவ்வொரு ஸ்தாபனமும், ஒவ்வொரு சபையும் துண்டு துண்டாக விழும், ஆனால் நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்யத்தைப் பெற்றுக் கொள்கிறோம். "ஏனென்றால்,

சீனாய் மலையிலிருந்து பேசின அவரைப் புறக்கணித்தவர்கள், அவருடைய சத்தத்தினால் பூமி அசைந்தது, நீங்கள் நிராகரிக்காததை இன்னும் எவ்வளவு அதிகமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்" (யார்?) "அவருடைய வார்த்தை, வானத்திலிருந்து, அவருடைய இராஜ்ஜியத்திலிருந்து பேசுகிறது, ஏனென்றால் நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்யத்தில் இருக்கிறோம்." ஆமென். அதற்குப் புறம்பேயுள்ள ஒவ்வொரு காரியமும்...தேவன் ஒவ்வொரு காரியத்தையும் அனுப்பினார், அவர் அதை உடையும்படிக்கு உடையக்கூடியதாக அதை உண்டாக்கினார். அது இந்தவிதமான உடையக்கூடிய நிலையில், அது உடையத்தான் செய்யும். அது உடையக்கூடியது. ஆனால், மற்றவை அனைத்தும் விழுந்து வழிவிடும்போது, நமக்கு இப்போது ஒரு உறுதியான ராஜ்யம் கிடைத்துள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எடி பெரோனெட், "நான் அந்தத் திடமான கன்மலையின் மேல் நிற்கிறேன், மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து கொண்டிருக்கும் மணலாயிருக்கிறது" என்று கூறினதில் வியப்பொன்றுமில்லை. ஒரு இராஜ்யம்! ஒரு அரசியல்வாதி முறைமையல்ல, ஒரு அரசியல் முறைமையல்ல, ஒரு சபை முறைமையல்ல, ஒரு ஸ்தாபன முறைமையல்ல; அவர்கள் யாவரும் பரிசேயர்களாகவும், பிசாசின் பாண்டித்துவம் பெற்றவர்களாக மாறிவிட்டனர். ஆனால் நாம் ஒரு இராஜ்யத்தை, ஒரு நித்திய ராஜாவைப் பெற்றுக் கொள்கிறோம், அவர் நித்திய வார்த்தையாயிருக்கிறார், நித்திய ஜீவனை உடையவர்; அவருடைய நித்திய வார்த்தையினால் நித்திய ஜீவனை உடைய தம்முடைய நித்திய ஜனங்களுக்கு, நாம் இதில் பங்காளிகளாயிருக்கிறோம். ஓ, என்னே! அதுதான் காரியம்.

197 இப்பொழுது, அதிலிருந்து உங்களை இழுக்கிற எந்தக் காரியமும் தவறானது, அது ஒரு கள்ள மேசியா, ஒரு கள்ள அபிஷேகம். ஓ, அவன், "அந்தச் சகோதரனுக்கு அப்பேர்ப்பட்ட அபிஷேகம் இருந்தது!" என்றான். என்ன விதமான அபிஷேகம்? அதுதான். ஹிட்லருக்கும் கூட ஒரு அபிஷேகம் இருந்தது. குருஷ்சேவுக்கும் கூட ஒன்று உண்டு. போப் பயஸ் அவர்களுக்கும் கூட. நீங்கள் எந்தவிதமான அபிஷேகத்தைப் பெற்றுள்ளீர்கள்? அது இந்த வார்த்தையினால் அபிஷேகிக்கப்பட்டு, ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம் என்று ரூபகாரப்படுத்தப்படாமலிருந்தால், அதை அப்படியே விட்டுவிடுங்கள். தவறு. அது தன்னைத் தானே உற்பத்தி செய்யவில்லையென்றால், அப்பொழுது அது முளைப்பிக்கப்படுவதில்லை. அது தன்னுடைய நிறத்தைக் காண்பிக்கும். ஓ, "ஆனால் அது மற்றொரு காலத்திற்கானதாயிருந்தது. நாங்கள்..." அந்தக் காரியத்தை அப்படியே விட்டுவிடுங்கள். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆம், ஐயா.

198 எனவே இந்த உலகம் சீரழியும்போது, நாம் சீரழிய

முடியாத ஒரு இராஜ்ஜியத்திற்குள் பிறக்கிறோம். உலகம் சீரழிந்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அதனுடைய முறைமைகள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? பொருளாதார முறைமை சீரழிந்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அரசியல் அமைப்பு முறைமை சீரழிந்து கொண்டிருக்கிறது. தேசிய, ஐ.நா. முறைமை சீரழிந்து கொண்டிருக்கிறது. சபையானது சீரழிந்து கொண்டிருக்கிறது. ஸ்தாபனங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. எல்லாமே சீரழிந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுள்ளோம், அது நித்திய தேவனுடைய இராஜ்ஜியமாகும், அது அசைக்கப்பட முடியாது.

199 இந்த ஸ்தாபனத்தின் புதிய முறைமை, இந்த உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தை இங்கே கொண்டு வருவது, பூமியில் சமாதானத்தை கொண்டு வரும் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன ஒரு—என்ன ஒரு புறக்கணிப்பு, என்ன ஒரு—ஒரு கிறிஸ்துவின் முகத்தில் அறைந்தது போன்ற ஒரு அருவருப்பான தாக்குதல்! அது என்ன ஒரு பயபக்தியற்ற, இழிவான காரியமாய் உள்ளது! அது பிசாசினால் உண்டானது. தேவன் அவர்களுக்கு அனுப்பக் கூடியதைக் காட்டிலும் மேலான ஒன்றை ஒரு மனிதனால் ஸ்தாபனமாக்க முடியுமா? பாபேல் கோபுரம்! அது விழ வேண்டிய மற்றொரு பாபிலோன். பூமியில் சமாதானம் உண்டா? ஒரு கள்ள மேசியா! அதன் போதனையில் ஒரு அந்திக்கிறிஸ்து. அவைகளே செய்ய முடியாதபோது, நீங்கள் எப்படி இந்த ஸ்தாபனங்களை ஒன்று சேர்க்கப் போகிறீர்கள்... இப்படிச் சிறுசிறு அமைப்புகளாகப் பிரிந்ததால், அவர்களால் இப்போது ஒருவருக்கொருவர் உடன்படக்கூட முடியவில்லை, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து அங்கே செல்வது எப்படி? ஆம். பாருங்கள், அது ஒரு தவறான அமைப்பு. இவையனைத்தும் புராட்டஸ்டென்டை ரோமானியக் கொள்கைக்குள் நுழைக்கவே செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு போலியான, அந்திக்கிறிஸ்துவின் போதனை.

200 தேவனுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. இயேசு அவ்வண்ணமாய்க் கூறினார். “என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல.”

201 எனவே அந்த இராஜ்ஜியம் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், அது ஒரு கள்ள மேசியா, இந்த மேசியா மிக விரைவில் புராட்டஸ்டென்ட் சபைக்கு அளிக்கப்படப் போகிறார், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள், ஏனென்றால் அவர்கள் அதற்காக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், “சரி, இப்பொழுது, மெதடிஸ்டுகளாகிய நாங்களும் பாப்டிஸ்டுகளும், நிச்சயமாக, நாங்கள்—நாங்கள் ஒருவகையில் உடன்படுகிறோம்” என்று சொல்லக்கூடிய ஒரு அமைப்பைத் தேடிக்

கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாங்கள்—நாங்கள் பிரஸ்பிடேரியன்கள், நாங்கள் பெந்தேகோஸ்துக்கள், ஓ, சகோதரனே, அவர்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்கின்றனர். ஒரு வித்தியாசம் உண்டு! தேவன் உங்களை வித்தியாசமாக்குகிறார். "ஆனால், பாருங்கள், நாங்கள் இதைத் தியாகம் செய்கிறோம்." உங்களுடைய மகத்தான சுவிசேஷ போதகத்தை நீங்கள் விட்டுவிடுகிறீர்கள். எதையுமே விசுவாசிக்காத ஒரு கூட்ட ஜனங்களோடு, நாத்திகர்களில் சிலரோடு நீங்கள் எப்படி அங்குச் செல்லப் போகிறீர்கள்? கள்ள மேசியா தான் அது. அது உண்மை. ஆம், ஐயா.

202 இப்பொழுது, தேவனுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. கிறிஸ்து இங்கிருந்தபோது, அவர் இந்த இராஜ்ஜியத்தின் திட்டத்தை நமக்கு அளித்தார். அவர் நமக்குத் தேவனுடைய இராஜ்ஜியத்தின் திட்டத்தை, பிதாவின் இராஜ்ஜியமாகிய அவருடைய வார்த்தையை அளித்தார். இப்பொழுது, நீங்கள் எப்படி அந்த இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கலாம் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால், இந்த வார்த்தை அதைப் பெற்றுள்ளது. நீங்கள் வேறெந்த வாசல்வழியாக வந்தாலும்...மற்றவர்கள் உள்ளே வந்த அதே வாசலில்தான் நீங்கள் வர வேண்டும். நீங்கள் வேறு ஏதாவதொரு வழியில் பிரவேசிக்க முயற்சித்தால், ஏன், நீங்கள் ஒரு திருடனைப் போலவும், ஒரு கொள்ளைக்காரனைப் போலவும் இருக்கிறீர்கள். மேலும் அவர், "இதனோடு ஒரு வார்த்தையைக் கூட்டினால் அல்லது இதிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்து (அவனுடைய பங்கு) எடுத்துப் போடப்படும்" என்றார். ஆகையால் ஜீவ புஸ்தகத்தில் உங்களுடைய பெயர் இடம் பெற்றிருப்பதாக நீங்கள் உரிமை கோரினால், நீங்கள் அப்படி செய்திருந்தால், அதை நீக்கிவிடாதீர்கள்.

203 பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு இராஜ்ஜியத்திற்கான கதவைத் திறந்தான். அவன் அதைச் செய்தான். அப்பொழுதுதான் எருசலேமில் இராஜ்ஜியம் நிறுவப்பட்டது. ரோமாபுரியில் சபையானது துவங்கினது என்று ஒரு மனிதன் என்னிடம் கூற விரும்புகிறேன். யாராவது ஒருவர் அதை எனக்கு நிரூபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சபையானது ஒருபோதும் ரோமாபுரியில் துவங்கவில்லை, சபையானது எருசலேமில் துவங்கியது. பெந்தெகொஸ்தே நாளில் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது. ஜனங்கள் இந்த இராஜ்ஜியத்திற்குள் எப்படி பிரவேசிக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள விரும்பினபோது, பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான். ஏனென்றால் அதுவே அவர்களை இராஜ்ஜியத்திற்குள்

வைக்கிறது. ஸ்தாபனத்தின் மூலமாகவோ அல்லது கைகுலுக்குவதன் மூலமாகவோ அல்லது வேறெந்த காரியத்தினூடாகவோ மற்ற எந்தக் கொள்கையும் கள்ள மேசியாவாகும். நீங்கள் எவ்வளவு புகழ் வாய்ந்தவராக இருந்தாலும், நீங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்தாலும், நீங்கள் ஒரு உதவிக்காரராக இருந்தாலும், ஒரு போதகராக அல்லது ஒரு பேராயராக இருந்தாலும் கூட, அல்லது மூப்பராகவோ அல்லது மாநிலக் கண்காணியாகவோ, நீங்கள் என்னவாயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் தேவனுடைய தாழ்மையான ஆட்டுக்குட்டியானவருக்கும் அவருடைய இராஜ்ஜியத்திற்கும் திரும்பி வரும் வரையில் அது போலியானது.

204 இப்பொழுது கவனியுங்கள். அவர் நமக்கு ஒரு திட்டத்தை, பிதாவின் வார்த்தையைக் கொடுத்தார். உண்மையான விசுவாசி அதை இறுகப் பற்றிக்கொள்கிறான், ஏனென்றால் அவனால் அதைத் தவிர்க்க முடியாது, அது அவனுக்குள்ளாகத் தேவனுடைய இராஜ்ஜியமாய் உள்ளது. ஆபிரகாமைப் போல, அவன் தேவனுடைய வார்த்தைக்கு முரணான எந்தக் காரியத்தையும் இல்லாதது போல அழைக்கிறான். ஸ்தாபனம் தேவனால் உண்டானது என்று யாராவது உங்களிடம் கூறினால், நீங்கள் ஆபிரகாமைப் போல நிலைத்திருங்கள். எவரேனும் நீங்கள் தெளிக்கப்பட வேண்டும் என்று கூறினால், அல்லது ஏதோ ஒரு சிறு காரியம் முறைமை அல்லது தேவனுடைய வார்த்தைக்கு முரணான ஏதோ ஒன்று, நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டாம். அதை இல்லாதது போலக் கருதுங்கள். அவர்கள், "சரி, இப்பொழுது, அன்பே, *இதைச்* செய்வது உனக்குத் தீங்கு விளைவிக்காது" என்று கூறினால். நீங்கள் அதை நம்பாதீர்கள், தேவன்…"பெண்கள் தங்களுடைய தலைமுடியைக் கத்தரித்துக் கொள்வது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்காது" என்று கூறும்போது, தேவனுடைய வார்த்தை அதைச் செய்வது அவருக்கு அருவருப்பானது என்று கூறும்போது. நீங்கள், "ஏன், நான் தளர் ஆடைகளை அணிகிறேன். நான் அரைக்கால் சட்டைகளை அணிவதில்லை" என்று கூறும்போது. ஒரு ஸ்திரீ ஒரு புருஷனுடைய ஆடையை அணிவது, அது அவருக்கு அருவருப்பானது என்று தேவன் கூறினார். ஒரு ஸ்திரீ தன்னுடைய தலைமுடியை கத்தரித்துக் கொள்வது தவறு என்று வேதம் உரைத்துள்ளது, அவள் ஜெபிப்பது மற்றும் அது போன்றவை கூட வழக்கத்திற்கு மாறானதாயுள்ளது. தன்னுடைய தலை மூடப்படாமலிருந்தாலும், அவள் தன்னுடைய தலையையே கனவீனப்படுத்துகிறாள். தேவன் அதைத் தடை செய்கிறார்! அதைச் செய்வது சரியென்று உங்களுக்குச் சொல்லுகிற அந்த முறைமை, அதை நீங்கள் நம்ப வேண்டாம். அது ஒரு கள்ள அபிஷேகம். அது ஒரு கள்ளக் கிறிஸ்து. அது தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாயுள்ளது. நீதிமான்கள் தேவனுடைய வார்த்தையைப் பற்றிக் கொள்கிறார்கள், ஏனென்றால் அது

தேவனுடைய நித்திய முறைமையின் திட்டமாயிருக்கிறது.

205 தேவன் ஒரு மனிதனை உண்டாக்கினபோது, அவர் அவனை ஒரு வழியாய் உண்டாக்கினார். ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார், அவர் அவனை வேறொரு விதமாக உண்டாக்கினார்...அவளை வேறொரு விதமாக ஆக்கினார். இரண்டு வித்தியாசமான உடன்படிக்கைகள், இரண்டு வித்தியாசமான திட்டங்கள், அவைகளுக்கிடையே இரண்டு வித்தியாசமானவைகள் உள்ளன. அவைகள் ஒரே மாதிரியாகக் காணப்படவில்லை. அவர்கள் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இல்லை, அவர்கள் ஒரே மாதிரியாகச் செயல்படக் கூடாது, அவர்கள் முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறார்கள். ஸ்திரீகள் புருஷனைப் போல இருக்க முயற்சிக்கிறார்கள், ஒரு மனிதன் மிகவும் பெண்மை தன்மை கொண்ட ஒரு ஸ்திரீயைப் போன்றிருக்கிறான். நான் நேற்று சின்சினாட்டியில் ஒரு பையனைக் கண்டேன், அது திருமதி கென்னடியைப் போன்றிருந்தது, அந்தத் தலைமுடி, அது அந்த விதமாக இருந்தது. ஒரு மனிதன் ஒரு மனிதனைப் போன்று காணப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்! ஒரு ஸ்திரீ ஒரு ஸ்திரீயைப் போன்று காணப்பட வேண்டும் என்று விரும்புகிறார்!

206 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்தப் பிசாசின் யேசபேல் முறைமை முழு உலகத்தையும் சீர்கேட்டிற்குள்ளாக வைத்துள்ளது, அதில் ஒரு நல்ல இடம் இல்லை. இவையெல்லாம் சீழ் பிடித்த புண்கள், புற்றுநோய்ப் புண்கள், அவர்கள் இங்கே அமைத்துள்ள அமைப்புகளின் ஆணிவேரையே அரித்துத் தின்னும் சாத்தானின் கொடிய நோய். சாத்தான் தன்னுடைய சொந்த இராஜ்ஜியத்தைப் புசிக்கும் ஒரு பருந்து. அவன் ஒரு பிசாசு, அவன் ஒரு தூய்மையற்றவன், அவன் ஒரு பொய்யின் பிதாவாயிருக்கிறான். அவன் தன்னுடைய சொந்த ஜனங்களின் மாம்சத்தை புசிக்கிறான். பிசாசு!

207 கிறிஸ்து இராஜாதி இராஜாவாயும், கர்த்தாதி கர்த்தருமாகிய அபிஷேகிக்கப்பட்ட மேசியாவாயிருக்கிறார். விசுவாசி அந்த வார்த்தையைப் பற்றிக் கொள்கிறான். தேவனும் அவருடைய வார்த்தையும் ஒன்றே. நானும் என் வார்த்தையும் ஒன்றாயிருக்கிறோம். நீங்களும் உங்களுடைய வார்த்தையும் ஒன்றாயிருக்கிறீர்கள். அப்படியானால் சாய்ந்து கொள்ளாதீர்கள், உங்களுடைய சொந்த சிந்தனைகளை உபயோகிக்காதீர்கள்; அவருடைய சிந்தையை உபயோகியுங்கள், அப்பொழுது நீங்கள் தேவனுடைய ஒரு பாகமாயிருக்கிறீர்கள், ஏனென்றால் அவருடைய வார்த்தையும், நீங்களும் ஒரே விதமாக ஆகிவிட்டீர்கள். பார்த்தீர்களா? அப்படியானால் நீங்கள் இராஜ்ஜியத்தில் இருக்கிறீர்கள்.

208 ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு முரணான எந்தக் காரியத்தையும் அது இல்லாதது போல அழைத்தான். ஆம், அவன்...இன்றைக்கு மனிதனால் உண்டாக்கப்பட்ட முறைமைகள்,

அவன் அதேக் காரியத்தைச் செய்வான். அப்படிப்பட்ட ஒரு இராஜ்ஜியத்தில்...நான் முடிக்கப் போகிறேன், நான் இந்தக் குறிப்புகளில் சிலவற்றை விட்டுவிட்டு, முடிக்கப்போகிறேன். பாருங்கள், அது...அப்படிப்பட்ட ஒரு இராஜ்ஜியத்தில் இருக்கையில், என்ன சம்பவிக்கிறது? இப்போது, இவையெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டாலும், பயபக்தியுடனும், மரியாதையுடனும், நேர்மையுடனும், தேவனுடைய வார்த்தையினாலும், பரிசுத்த ஆவியானவரினாலும் எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையைக் குறித்து, அவர் எனக்குப் பொறுப்பாளியாக நியமித்த மந்தையைக் காத்து, அதற்குக் கனம் கொடுத்து, எது வந்தாலும் அதனுடன் நிலைத்திருந்து, அதை வலப்புறமும் இடப்புறமும் உதறித்தள்ளி, இந்த வார்த்தையோடு இங்கேயே நிலைத்திருக்க வேண்டும். இதுவே கட்டளையிடப்பட்டுள்ளது. அப்படியானால் நாம் ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொண்டால்...

209 "சகோதரன் பிரான்ஹாமே, இந்த மற்ற ஜனங்களெல்லாரும், 'நீங்கள் எந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்?' என்று கேட்கிறார்கள்."

"இல்லை" என்று கூறுங்கள்.

"நீங்கள் என்ன?"

"ஏனென்றால் நாம் ஒரு இராஜ்ஜியத்தில் இருக்கிறோம்."

"சரி, நீங்கள் இதில் எங்கே சந்திக்கிறீர்கள்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

210 "நாங்கள் உன்னதங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள் உட்கார்ந்து, நம்முடைய இராஜாவின் பிரசன்னத்திற்குள்ளாக உயர்த்தப்படுகிறோம்." இராஜ்ஜியம்! மகிமை! இப்பொழுது நான் பக்தி பரவசப்படத் துவங்குகிறேன். தேவனுடைய இராஜ்ஜியம் அவர்கள் ஒன்று கூடும் இடத்தில், பரிசுத்த ஆவியானவர் அவர்களை இராஜாவின் சமூகத்தில் உயர்த்தி, நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, நாம் ஒன்று சேர்ந்து உன்னதங்களில் அமருகிறோம். அங்குதான் நாம் இருக்கிறோம்.

211 நாங்கள் சந்தைக்குச் சென்றிருந்தபோது, மனைவி என்னிடம், கடந்த கோடைகாலத்தில் நான் உங்களிடம் கூறினேன், ஒரு பெண்மணி ஒரு ஆடை அணிந்திருப்பதை நாங்கள் கண்டோம். அது விநோதமாகக் காணப்பட்ட காரியமாயிருந்தது. அவள் விசித்திரமாகக் காணப்பட்டாள். புரிகிறதா? அவள், "அது ஏன்? இந்தப் பெண்களை நாம் அறிவோம். அவர்களில் சிலர் இங்கே சுற்றிலும் உள்ள பாடல் குழுக்களில் பாடுகிறார்கள்" என்றாள்.

212 ஓ, நண்பனே! நான் இதைக் கூறப் போகிறேன், இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அதை எப்படியும் கூறுவது நலமாயிருக்கும். உங்களுக்குத் தெரியும், நான் இதைப் பயபக்தியோடும் மரியாதையோடும் கூறுகிறேன். இதைப் அப்படியே பற்றிக் கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கானோர்

மேடைக்கு வருவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள், ஒவ்வொரு முறையும் எந்த ஒரு தோல்வியுமின்றி வருவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். மேலும் சகோதரர் ஆர்கன்பிரைட், நாங்கள் வெளிநாடுகளில் இருந்த உலகின் பகுதியைப் பற்றி அறிந்திருக்கிறார், உண்மையைச் சொல்வதில் அவர் ஒருமுறை கூடத் தவறியதில்லை. நான் இந்த இடங்களுக்குச் செல்லும்போது, இந்த அங்கி அணிந்த பாடற் குழுவினரையும், அந்தக் ஸ்திரீகளும் புருஷர்களும் அங்கே அந்தக் கொல்கொத்தா மேலங்கிகளோடு நிற்பதைக் காணும்போது, தேவதூதர்களைப் போல அவர்கள் பாடுவதைக் கேட்போம்; பகுத்தறிதலின் ஆவியோடு அங்கே கீழே நோக்கிப் பார்க்கும்போது, இந்தக் காலையில் நான் போய் அவர்களில் அசுத்தமான குற்றமாயில்லாதிருந்த ஐந்து பேரை முழு உலகத்திலிருந்தும் வெளியே இழுத்துவிட வேண்டுமானால், நான் அவர்களை எங்கே கண்டறிவேன் என்று எனக்குத் தெரியாது. அது ஒரு அறிக்கை, ஆனால் அது சத்தியமாயிருக்கிறது, தேவன் அதை அறிந்திருக்கிறார். என்னுடைய கரம் இங்கே வேதாகமத்தின் மேல் உள்ளது. அது உண்மை, நான் அவர்களை எங்கே கண்டறிவேன் என்று எனக்குத் தெரியாது. பாருங்கள், தேவன், “நீ போய் நீ அறிந்திருக்கிற ஐந்து பேரை அழைத்துக்கொள்” என்று கூறியிருந்தால், நான், “நான் எங்கே போவேன் என்று எனக்குத் தெரியாது” என்று கூறுவேன். ஓ, என்னே! அப்படிப்பட்ட ஒரு முறைமை! அப்படிப்பட்ட அசுத்தம்!

213 அதைத்தான் உலகம் விரும்புகிறது. அப்பொழுது அது அதைத்தான் விரும்பியது, அதைத்தான் இப்பொழுதும் அது விரும்புகிறது. அதைத்தான் இப்பொழுது பெற்றுக் கொள்ளப் போகிறது. அடுத்த மனிதனுடைய மனைவியோடு வெளியே சென்று கொண்டிருக்கும் மனிதன் அங்கே நின்று கொண்டிருக்கிறான். மது அருந்துதல், புகைத்தல், அதை மறைப்பதற்கென மேலங்கி அணிதல். சிந்தித்துப் பாருங்கள், தேவன் அந்த அத்தி இலையினூடாகப் பார்க்கிறார். அந்த ஏவாளும் கூட அவளுடைய இருதயத்தில் போதிய குற்றவுணர்வோடும், அசுத்தத்தோடும் நின்றுகொண்டிருந்தாள், அது தண்ணீராக மாறினால், ஒரு படகு மிதக்கும். இயற்கையாகவே அவளுக்குக் கிடைத்த பாடும் திறமையுடன் அங்கே நின்று, முகம் கறுத்துப்போகும் வரை தன் குரலை அடக்கி, ஏதோ ஒரு தேவதையைப் போலவோ அல்லது அது போன்ற வேறொன்றைப் போலவோ பாட முயன்றாள், அந்த அங்கிக்குக் கீழே, ஒரு இழிவான, அசிங்கமான, அழுக்கானதாய் இருக்கிறது. நீங்கள் பிரசங்க பீடத்தில் நின்று அதைக் கூறினால், அவள் வர்ணம் பூசப்பட்ட உதடுகளை உயர்த்தி, கட்டிடத்தை விட்டு வெளியேறிவிடுவாள், “நான் அதைப் போன்ற காரியத்தைக் கேட்க வேண்டியதில்லை” என்று கூறுகின்றனர். ஆனால் நீங்கள் என்றோ ஒரு நாள் இரக்கத்திற்காக நரகத்தில் கூக்குரலிடுவீர்கள். அப்பொழுது

அது மிகவும் காலதாமதமாகிவிடும். அதைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு ஒரு தருணம் இருக்கும்போதே நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள்! ஓ, என்னே!

214 ஆனால் நாம் உன்னதங்களில் உட்காரும்போது, சபையானது ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுக்கொள்கிறது தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளாக உயர்த்தப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் வீற்றிருந்து, நாம் அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாவின் பிரசன்னத்தில் இருக்கிறோம் என்ற விசுவாசத்தின் உறுதியோடு இதை அறிந்திருக்கிறோம். ஓ! ஒரு புதிய வானமும், ஒரு புதிய பூமியும் தோன்ற வேண்டும், நித்தியம் நீடித்திருக்கும் வரை அது மீண்டும் ஒருபோதும் பிரியாது. நாம் அந்தப் புதிய வானங்களையும் பூமியையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஒன்று, நீங்கள் விரும்பும் எல்லாவற்றையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில், எனக்கு அந்த ஒன்று வேண்டும்.

215 அது உங்களுடைய நேசங்களை எங்கே வைக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. அது நீங்கள் எந்தக் கம்பத்தில் கட்டுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது. நீங்கள் உங்களுடைய ஸ்தாபன கம்பத்தில் கட்டினால், நீங்கள் சரியாக அதனோடு கீழே செல்லப் போகிறீர்கள். நீங்கள் இந்த உலகத்தின் எந்தக் காரியத்தோடும், எந்த அரசியலோடும், அதைப் போன்ற காரியங்களோடும் பிணைத்து, அதில் நம்பிக்கை வைத்தால், நீங்கள் அதனோடு மூழ்கிவிடுவீர்கள்.

216 ஆனால் என்னுடைய நம்பிக்கையோ நீதியோடு கூடிய இயேசுவினுடைய இரத்தமேயன்றி, வேறெதிலுமே கட்டப்படவில்லை. என் ஆத்துமாவைச் சுற்றியிருந்த யாவும் கைவிட்டு, ஒவ்வொரு ஊழியக்காரனும் என்னைப் புறக்கணித்து, ஒவ்வொரு கோட்பாடும் என்னை வெளியே தள்ளி, நான் செல்ல ஒரு இடம் கூட இல்லை, அவரே என்னுடைய முழு நம்பிக்கையும், உறைவிடமாய் இருக்கிறார். அந்தக் கன்மலையின் மேல், கிறிஸ்துவின் அந்தத் திடமான கன்மலையின் மேல் நான் நிற்கிறேன், மற்ற எல்லா நிலங்களும் அமிழ்ந்து கொண்டிருக்கும் மணலாகவே உள்ளன. என்றோ ஒருநாள் நான் ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவேன், கடலுக்கு அடியில் எங்காவது, ஒரு விமான விபத்திலோ, ஒரு இரயிலிலோ அல்லது ஒரு மோட்டார் வாகனத்திலோ கொல்லப்படலாம், தேவன் நான் எங்குச் செல்ல வேண்டும் என்று தெரிந்து கொண்டாலும், ஆனால் இந்த ஒரு காரியத்தை, நான் இதை அறிவேன், அதாவது நான் என்னுடைய ஆத்துமாவை அந்த இளைப்பாறுதலின் புகலிடத்தில் அவருடைய வார்த்தையில் நங்கூரமிட்டிருக்கிறேன். இது தேவனுடைய வார்த்தையாக இருக்க வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

217 தேவன் உலகத்தை ஏதோ ஒன்றைக் கொண்டு நியாயந்தீர்க்க வேண்டும். அவர் சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரானால்,

அவற்றில் எந்த ஒன்றைக் கொண்டு அவர் நியாயந்தீர்க்கப் போகிறார்? ஏன், நியாயந்தீர்க்கப்படக் கூடிய அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. அப்படியானால் ஒரே ஒரு காரியம் மாத்திரமே விடப்பட்டிருக்கிறது, அவருடைய வார்த்தை, அது நித்தியமானது, அது இதனோடு கூட்டப்படவோ அல்லது எடுக்கப்படவோ முடியாது.

218 நான் என்னுடைய பலியின் மேல் என்னுடைய கரங்களை வைத்து, என்னுடைய ஆத்துமாவை அங்கே நங்கூரமிட்டிருக்கிறேன், நான் முற்றிலும் பயனற்றவன் என்று அறிக்கையிடுகிறேன். கர்த்தராகிய தேவனே, என்னில் ஒன்றும் இல்லை. அந்த மேசியாவை என்மேல் அனுப்பி, நான் முன்பிருந்த நிலைக்கு என் இயல்பை மாற்றும், உம்முடைய சொந்த வடிவத்தில், நீர் விரும்பியபடியே என்னை உருவாக்கும்.

219 நீங்கள் எவ்வளவுதான் ஒரு சரீரத்தை எரித்தாலும், ஒரு நபரை நீங்கள் எவ்வளவுதான் அழித்தாலும், நீங்கள் அவர்களுக்கு எதிராக எவ்வளவு பேசினாலும், அல்லது அவர் என்ன கூறினாலும், என்றோ ஒரு நாள் அவர் நம்மை மீண்டும் எழுப்புவார். அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தை நாம் பெற்றுக் கொள்கிறோம். ஓ, என்னே!

220 நாம் இப்பொழுது உன்னதங்களில் வீற்றிருந்து அனுபவித்துக்கொண்டிருக்கிற இந்த மகிமையான காரியம் யாவற்றையும் குறித்து, ஒரு முன்னுரையாகவே உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லேலூயா! அது என்ன வரப்போகிறது என்பதற்கு ஒரு முன்னுரையாயுள்ளது. வரவிருக்கும் இன்னிசைக்கு அறிமுகம் தான் அது. ஓ! அல்லேலூயா! இந்தச் சத்தமிடுதலைக் குறித்தும், துதித்தல், மகிமைப்படுத்துதல், ஆட்டுக்குட்டியானவரை மகிமைப்படுத்துதல் ஆகியவற்றைக் குறித்துப் பேசுங்கள்! ஒரு நாள் தூதர்கள் பூமியைச் சுற்றி நிற்கும்போது, பூமியின் வளைவில், தலைகள் வணங்கியிருப்பதோடு, இரத்தத்தினால் கழுவப்பட்ட அந்தச் சிறு குழுவினர் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மீட்பின் பாடல்களைப் பாடுவதையும் கேட்கும்போது, ஓ, தேவனே, நான் அவர்களோடு இணைக்கப்பட விரும்புகிறேன். இப்பொழுது நான் அவளோடு என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளட்டும். இயேசு என்னுடையவர், நான் அவரையும் அவருடைய வார்த்தையையும் ஏற்றுக்கொள்வேன் என்ற உறுதியை நான் அளிக்கட்டும். ஆம்.

221 முடிக்கும் நேரத்தில், கிறிஸ்துமஸிற்கான இந்தச் சிறு கதையை நான் கூற விரும்புகிறேன், எனவே சிறுவர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள். நான் நீண்ட நேரம் தங்கியிருப்பதன் மூலம் உங்களைப் புண்படுத்தியிருந்தால்…நேற்றைய தினம் ஒரு சிறு பெண்மணி…சகோதரன் பிரௌன் அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதனிடம் மிக அற்புதமான பிரசங்கத்தை

சுமார் ஒரு மணி நேரம் பிரசங்கித்தார். அதற்கு அவள், “அவர் அவர்களை நீண்ட நேரம் பிடித்து வைத்திருந்தார்” என்றாள். பவுல் இரவு முழுவதும் பிரசங்கித்தான். அவர்களுக்கு மிகவும் தூக்கக் கலக்கம் வரும் வரை அவர்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள், அநேகமாக மணிக்கணக்காக அமர்ந்திருக்கலாம், ஒரு மனிதன் கீழே விழுந்து மரித்துப் போனான். பவுல் அவன்மேல் படுத்துக்கொண்டு, “கவலைப்படாதே” என்றான். சரியான காரியத்தைக் கேளுங்கள்.

222 ஒரு வயதான செருப்புத் தைப்பவர் இருந்தார், அவர்—அவர் ஜெர்மனியில் அவர்களுக்குச் காலணிகளைச் செய்வார் என்று நான் நம்புகிறேன். ஒரு நாள்…அவர் தன்னுடைய ஓய்வு நேரத்தில் வேதாகமத்தை எடுத்து, அவர் அதை வாசிப்பார். அவர் வேதாகமத்தின் சூழலையும், பொருளையும் வாசித்து, அவர் உண்மையாகவே ஆழ்ந்த உத்தமத்தைக் கொண்டிருந்தார். அவர், “உங்களுக்குத் தெரியும்,” என்று கூறி, அவர், “நான்—நான்…இந்தக் கிறிஸ்துமஸ் வரும்போது, நான் எந்தக் கிறிஸ்துமஸ் மரத்திலும் விளக்கேற்றப் போவதில்லை” என்றார். ஆனால் அவரோ, “உங்களுக்கு என்னவென்று தெரியுமா?” என்று கேட்டார். அவர், “நான் ஒரு—ஒரு பெரிய விருந்து வைக்கப் போகிறேன், மேலும் நான் சமைக்கப் போகிறேன்…என்னுடைய ஆட்டுக்குட்டியை வறுத்தெடுத்து, நான் என்னுடைய குருதிநெல்லி பழங்களையும், என்னுடைய எல்லா குழம்பும் மற்ற பொருட்களையும் கொண்டு வரப் போகிறேன்” என்று கூறினார். அவர் தனியே இருந்தார். மேலும் அவர், “நான் அதை மேஜையின் மேல் வைக்கப் போகிறேன், இயேசுவை எனக்கு எதிரே மேஜையில் வந்து அமர நான் அழைக்கப் போகிறேன். நான் தேவனுடைய மேசியாவையும், மரியாதைகளில் என்னால் என்ன செய்ய முடியும் என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்” என்றார். அவர், “நான்—நான் இதையெல்லாம் செய்யப் போகிறேன். அதன்பின்னர் நான் மேஜையண்டை அமர்ந்து, ஆசீர்வாதம் கேட்கப் போகிறேன், தேவன் எனக்கு அளித்துள்ளதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்தப் போகிறேன். அதன்பின்னர் நான், ‘கர்த்தராகிய இயேசுவே, என்னோடு கிறிஸ்துமஸ் விருந்துக்கு இங்கே எதிரே உட்கார மாட்டீரா?’” என்று கூறப் போகிறேன் என்றார்.

223 எளிமை, தேவன் எப்பொழுதும் அதற்குச் செவிகொடுக்கிறார், உத்தமம். அந்த வயோதிக செருப்புத் தைக்கும் தொழிலாளி ராஜாதி ராஜாவை அப்படிப்பட்ட ஒரு இரவு உணவிற்கு அழைப்பதற்காகத் தன்னுடைய பணத்தை சேமித்து வைத்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் அதைக் கீழே வைத்து, அவர் அதைச் சமைத்து, அவர் அதை ஒரு மேஜையின் மேல் வைத்தார். அவர் தன்னை உண்மையாகவே நன்கு சுத்தம் செய்து, தன்னை சீர்படுத்திக் கொண்டு, தன்னுடைய தலைமுடியை சீவிக்கொண்டார். அவர் மேஜையண்டை உட்கார்ந்து, இயேசுவுக்கென்று ஒரு

நாற்காலியையும், சுற்றிலும் இன்னும் சில நாற்காலிகளையும் சுற்றி வைத்தார். அவர், “அது அப்போஸ்தலருடையதாயிருக்கலாம்” என்று கூறி, “அவர்கள் உள்ளே வந்தால்” என்றார்.

224 எனவே அந்த வயோதிக நபர் தன்னுடைய தலையை வணங்கி, அவர் ஆசீர்வாதங்களை கேட்டு, மேலும்—மேலும் உணவுக்காகத் தேவனுக்கு நன்றி கூறினார். மேலும் அவர், “இப்பொழுது, இயேசுவே, இந்தக் கிறிஸ்துமஸ் விருந்துக்காக நீர் வந்து என்னோடு புசிக்கமாட்டீரா?” என்று கேட்டார். அவர் சாப்பிடத் துவங்கி நாற்காலியைக் கவனிக்கத் துவங்கினார். எவருமே வரவில்லை. அவர் இன்னும் சற்று அதிகமாகப் புசித்து, “தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மை என் வீட்டிற்கு அழைத்திருக்கிறேன். நீர் வந்து என்னோடு இருக்கமாட்டீரா?” என்று கேட்டார். அவர் கையை நீட்டிப் புசிக்க ஏதோ ஒன்றை எடுக்கத் துவங்கினார், அப்பொழுது யாரோ ஒருவர் கதவைத் தட்டினார்.

225 அவர் வாசலண்டை சென்றார். அவர் ஒரு வயோதிக மனிதனாய், தோள்பட்டைகள் குனிந்தவராய், கந்தலான ஆடைகளை உடுத்தியிருந்தார். அவர், “அன்பான ஐயா, எனக்குக் குளிராக இருக்கிறது, நீங்கள் என்னைச் சூடேற்ற அனுமதிப்பீர்களா?” என்று கேட்டார்.

226 அவர், “உள்ளே வாருங்கள்” என்றார். அவர் உள்ளே வந்தபோது, அவர் அந்த உணவின் நறுமணத்தை முகர்ந்தார், அவருடைய வாயில் ஒருவிதமாகத் தண்ணீர் வடிந்தது, அவர் திரும்பிப் பார்த்தார். “நீர் உட்காருவீரா?” என்று கேட்டார். “நான் விருந்தினரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் விருந்தினர் வரும் வரைக்கும் நீர் என்னோடு அமர்ந்து புசிப்பீரா?” என்று கேட்டார்.

227 அவர், “உங்களுக்கு நன்றி. நான் மகிழ்ச்சியடைவேன்” என்றார். அப்பொழுது அவர் அமர்ந்தார், அவர்கள் இரவு உணவைப் புசித்தனர். அந்த வயோதிபர் அவருக்கு நன்றி கூறிவிட்டு, எழுந்து சென்றார்.

228 செருப்புத் தைக்கிறவர் திரும்பிப் பார்த்து, “தேவனாகிய கர்த்தரே, நீர் ஏன் எனக்கு ஏமாற்றம் அளித்தீர்?” என்று கேட்டார். மேலும், “நான் எல்லாவற்றையும் மிகவும் ஆயத்தம் செய்தேன். நான் எப்படி செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் செய்தேன்” என்றார். நீங்கள் அதைச் செய்தால் நலமாயிருக்குமே! “நான் எப்படி செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் செய்தேன், மேலும் நீர் உள்ளே வந்து என்னோடு போஜனம் பண்ணுவீர் என்று நினைத்தேன்.” அப்பொழுது அவர் அழுதுகொண்டு, ஓடிப்போய்க் கட்டிலின் விழுந்தார். அவர் அங்கே கட்டிலின் மேல் படுத்து அழுதுகொண்டிருந்தார். “கர்த்தாவே, நான் சரியென்று நினைத்த ஒவ்வொரு காரியத்தையும் நான்—நான்—நான் செய்தேன். நீர் ஏன் என்னோடு போஜனம் பண்ண வரவில்லை?”

229 அப்பொழுது ஒரு சத்தம் அவருக்கு உண்டாக, அவர் “மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” என்ற வேதவாக்கியத்தை நினைவு கூர்ந்தார்.

230 ஆம், ஐரினேயஸ்...நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன், அது பரிசுத்த மார்ட்டின். கிறிஸ்துமஸுக்கு முன்னர் ஒரு குளிர்ந்த நாளில், ஒரு ஏழை வயோதிக பிச்சைக்காரன் தெருவில் உறைந்துபோய்க் படுத்திருந்தான். தகுதியுள்ள ஜனங்கள் கடந்து சென்று, அந்த வயோதிக பிச்சைக்காரனை நோக்கிப் பார்த்தனர். “சரி, அவனுக்கு ஒன்றுமில்லை, அவன் ஒரு பிச்சைக்காரன். அவன் அங்கே கிடக்கட்டும்” என்றனர். மார்டின் நின்று, அதைச் செய்ய முடிந்த சில ஜனங்கள் அவனுக்கு உதவி செய்வார்களா என்று பார்த்தார், ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

231 முடிவாக, மார்டின் தாமே...அவர்—அவர் தேவனை விசுவாசித்தார், ஆனால் அவர் ஒரு இராணுவ வீரராக இருந்தார். அவர் ஒரேயொரு மேலங்கி மாத்திரமே உடையவராயிருந்தார். அவர், “வயதான மனிதன் அந்த விதமாகப் படுத்துக்கொண்டால், அவன் உறைந்து போய் மரித்துவிடுவான்” என்றார். எனவே அவர் தன்னுடைய பட்டயத்தை எடுத்து, தன்னுடைய அங்கியை இரண்டாகக் கிழித்து, அந்த வயோதிக பிச்சைக்காரனை அதில் சுற்றி, “என் சகோதரனே, அமைதியாய் உறங்கு” என்றார். உள்ளே நடந்து சென்றார்.

232 அவர் தன்னுடைய காலணிகளைப் பளபளப்பாக்கிவிட்டு, படுத்துக்கொண்டு, அன்றிரவு படைமுகாமில் உறங்கச் சென்றார். ஒரு சத்தம் அவரை எழுப்பினது. அவர் இவருக்கு முன்பாக நின்றார், அப்பொழுது இயேசு நின்றிருந்தார், அவர் அந்தப் பிச்சைக்காரனை சுற்றியிருந்த அந்தப் பழைய அங்கியை போர்த்தியிருந்தார்.

233 அப்படியானால் இந்தக் காரியங்களில் நான் என்ன செய்ய முடியும்? சரி என்று எனக்குத் தெரிந்த, சரியென உறுதிப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்ட இந்தக் காரியங்களை வைத்து நான் என்ன செய்ய வேண்டும்? நான் என்ன செய்ய முடியும்? சபையை ஒரு கோட்பாட்டிலோ அல்லது ஒரு ஸ்தாபனத்திலோ அல்ல, ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவருடைய வார்த்தையினால் சுற்றிக் கொள்ள முடியும். எனவே இயேசு, “நீங்கள் இவர்களுக்குச் செய்ததை எனக்கும் செய்தீர்கள்” என்றார்.

நாம் ஜெபிப்போமாக.

234 கர்த்தராகிய இயேசுவே, இந்தக் காலையில் நீர் இங்கே நின்று கொண்டிருந்தால், கர்த்தாவே...நீர் ஆவிக்குரிய ரூபத்தில் இருக்கிறீர் என்பதை நான் அறிவேன். ஆனால் நீர் இங்கே உண்மையில் நின்று கொண்டிருந்தால், நான் என்னுடைய பாடப்பொருளை சிறிதளவு கூட மாற்றியிருப்பேன் என்று நான் நம்பவில்லை. நான் அதையே

கூறியிருப்பேன் என்று நான் நம்புகிறேன். பரலோகப் பிதாவே, தங்கள் இயல்பான உணவைத் தவிர்த்து, களைப்பும் கரகரப்பும் கலந்த ஒரு குரலைக் கேட்டுக்கொண்டு இங்கே அமர்ந்திருந்த இந்த மக்கள், நீர் இங்கே நின்றிருந்தால், அவர்கள் இதற்கு மேல் தங்கியிருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன், ஏனெனில், நீர் இங்கே இருக்கிறீர் என்றும், அது உமது வார்த்தை என்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். அவர்கள் உம்மை நேசிக்கிறார்கள் என்பதையே அது காண்பிக்கிறது.

235 எங்களை வழிநடத்தி, கிறிஸ்துமஸ் என்றால் என்ன என்பதை எங்களுக்குக் காட்டும் பரிசுத்த ஆவியானவரின் இந்தக் கிறிஸ்துமஸ் வருகைக்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். உலகம் சீரழிந்து கொண்டிருக்கிறதை நாங்கள் காணும்போது, அதனுடைய முறைமைகள் உடைந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறோம், எங்களுக்கு ஒரு இராஜ்ஜியம் கிடைத்ததற்காகவும், எங்களுக்கு ஒரு இராஜா கிடைத்ததற்காகவும் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம், அது அசைக்கப்பட முடியாது. இனி உலகமே இல்லாதிருக்கும்போது, இனிமேல் அரசியல் இல்லாதிருக்கும்போது, தேசங்களே இனிமேல் இல்லாதிருக்கும்போது, தேவன் அவருடைய ராஜ்யத்தை நிறுவுவார், நீதிமான்கள் அவரோடு அரசாளுவார்கள். துன்பப்பட்டவர்கள் இனி ஒருபோதும் துன்பப்படமாட்டார்கள்.

236 கர்த்தாவே, இந்தக் கிறிஸ்துமஸ் காலத்தில் அபிஷேகிக்கப்பட்ட மேசியா எதைப் பொருட்படுத்துகிறார் என்பதை நினைவு கூரும்படி எங்களுக்கு உதவி செய்யும். புரிந்து கொள்ள எங்களுக்கு உதவி செய்யும்.

237 இதை, எங்கள் சபையை ஆசீர்வதியும். எங்கள் பிதாவே, அவர்களோடு இருந்து, பரிசுத்த ஆவியில் அவர்களுக்கு நீதியையும் சமாதானத்தையும் அருளும். எங்களுடைய போதகரை ஆசீர்வதியும். கர்த்தாவே, நாங்கள் அவரை நேசிக்கிறோம். இந்தத் தீரமான ஊழியக்காரன் உண்மையாய் நிற்கிறார். மேலும், அன்றொரு இரவு பேசுகையில், “இதோ நான் ஏறக்குறைய அறுபது வயதிற்குட்பட்டிருக்கிறேன்” என்றார். அவர்கள் சிறு பிள்ளைகளை உடையவர்களாயிருந்தனர். ஆனால் நினைவிருக்கட்டும், கர்த்தாவே, நீர் ஆயத்தமாயிருக்கும் வரையில் ஒன்றுமே அவரை இங்கிருந்து கொண்டு செல்ல முடியாது என்பதை அவர் நினைவில் கொள்வாராக. நீர் தாமதித்தால், அவருடைய பிள்ளைகள் யாவரும் விவாகம் செய்து, தங்களுடைய சொந்த வீடுகளை உடையவர்களாயிருக்கும் வரை அவர் காண ஜீவிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவருடைய விலையேறப்பெற்ற எளிய மனைவியை, உம்முடைய ஒரு எளிய ஊழியக்காரியை ஆசீர்வதியும். எங்களுடைய உதவிக்காரர்களையும், எங்களுடைய

தர்மகர்த்தாக்களையும் ஆசீர்வதியும்.

238 மேலும், தேவனே, இந்தக் கிறிஸ்துமஸ் அன்று, பனி வழியாகப் பயணித்து, வழுக்கும் சாலைகளையும் மழையையும் கடந்து, தங்கள் வாழ்வாதாரத்திற்காக நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து வரும் என் நண்பர்கள் அனைவருக்காகவும் நான் நன்றி கூறுகிறேன். தேவனே, இனி என்ன கூறுவதென்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய இருதயத்தில் என்ன உள்ளது என்பதை நீர் வெளிப்படுத்துவீர் என்று நான் நம்புகிறேன். தேவனே, நீர் எங்களை உள்ளே வைத்திருக்கிற இந்த இராஜ்ஜியத்திற்கு நான் எப்பொழுதும் உண்மையுள்ளவனாக இருப்பேனாக. நான் வலதோ அல்லது இடதோ, ஒருபோதும் ஒப்புரவாகாதிருப்பேனாக. அப்பொழுது நீர் என்னிடத்தில் கூறினதை, “வலது இடது புறம் அல்லது விலகாதிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய் உனக்கு வெற்றியும் உண்டாயிருக்கும்” என்பதை நன்கு நினைவுகூருகிறேன். ஒருக்கால் உலகத்தின் பார்வையில் இல்லாமலிருக்கலாம். உலகம் என்ன நினைக்கிறது என்று எனக்குக் கவலையில்லை, கர்த்தாவே, நீர் என்ன விரும்புகிறீர் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். உம்முடைய வாஞ்சையே எங்களுடைய…உம்முடைய சித்தமே எங்களுடைய வாஞ்சையாயிருக்கிறது. ஓ, கர்த்தாவே, உம்முடைய வாஞ்சைகளில் மிகச் சிறியது எங்களுக்கு ஜீவனோடு கட்டப்பட்ட கட்டளையாயிருக்கிறது. நாங்கள் உம்முடைய சபையாக நிற்கிறோம்.

239 கர்த்தாவே, இந்த ஆண்டு முழுவதும் நடந்தவற்றிற்காகவும், நாங்கள் செய்த தவறுகளுக்காகவும், பல இடங்களில் நாங்கள் தவறியதற்காகவும் இப்பொழுது எங்களை மன்னியும், எங்களைப் பலப்படுத்தும். நாங்கள், இந்தக் கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நேரத்தில், நாங்கள் எங்களுடைய இருதயங்களை தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவிற்கு திறப்போமாக. அவர் எங்களுடைய ஜீவியத்திற்குள் வந்து, எங்களை அபிஷேகித்து, அவருடைய சித்தத்தில் ஜீவித்து, அவருடைய இராஜ்யத்தை எங்கள் ஜீவியத்தினூடாக நிறைவேற்றுவாராக. எங்களை நலமாகவும் ஆரோக்கியமாகவும் காத்துக் கொள்ளும்.

240 இங்கே என் பக்கத்தில் அமர்ந்துள்ள இந்தத் தீரமான பழைய நண்பர், சகோதரன் ஆர்கன்பிரைட்டை ஆசீர்வதியும். ஓ, தேவனே, நீர் எப்படி அவரோடு இருந்து வந்திருக்கிறீர், எப்படியாய் அவருடைய இருதயம் எத்தனையோ முறை நசுக்கப்பட்டு நொறுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னமும் அவர் நித்திய ஜீவனைக் கொண்டு முளைப்பிக்கப்பட்டிருக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அவருடைய சிறு மனைவியை ஆசீர்வதியும். ஓ, தேவனே, நாங்கள் எப்படி இந்த மகத்தான ஐக்கியத்தை உடையவர்களாயிருக்கிறோம் என்பதை பட் மற்றும் ஃபிரட்டைக் குறித்தும், என்னைக் குறித்தும் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

241 நீர் எங்களை இப்பொழுது ஒருமித்து ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். எங்களுடைய சிறிய சபையையும், இந்த விலையேறப்பெற்ற மக்கள் அனைவரையும் ஆசீர்வதியும். மேலும் ஒருநாள், கர்த்தாவே…உலக காரியங்களிலிருந்து எங்கள் கண்கள் மிகவும் தூய்மையாக்கப்பட்டு, தேவனையும் அவருடைய ராஜ்யத்தையும் மட்டுமே காணும்படி நாங்கள் விரும்பும்போது, ஒருநாள் நாங்கள் குற்றமற்றவர்களாக, கற்புள்ள கன்னியாக, அவருக்கு முன்பாக வரவிருக்கும் அந்த மாபெரும் சபையின் ஒரு பகுதியாகக் கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம்.

242 அதன்பின்னர் நீர் உம்முடைய இராஜ்ஜியத்தை பூமியின் மேல் நிறுவும் நேரத்தை நாங்கள் எதிர்நோக்கியிருப்போம். காணக்கூடிய வீடுகளைக் கொண்ட காணக்கூடிய ஜனங்கள், அவர்கள் நடவு செய்து அதை மற்றவர்கள் புசிக்கமாட்டார்கள், ஆனால் அவர்கள் நித்தியமாக ஜீவிப்பார்கள். அதுவரைக்கும் நாம் ஒரு மலையின் மேல் அமருகிற ஒரு ஒளியாய், நம்மைச் சுற்றியிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் வெளிச்சத்தைக் கொடுக்கும் ஒரு மெழுகுவர்த்தியாய், ஒரு நீதியான ஜீவியத்தினாலே, கிறிஸ்துவின் இரத்தத்தினூடாகப் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். பிதாவே, இதை அருளும். இயேசுவின் நாமத்தில் நாங்கள் ஜெபிக்கிறோம்.

243 கர்த்தாவே, இந்த உறுமால்களின் மேல், நாங்கள் வியாதியஸ்தருக்காக ஜெபித்து, அவர்கள் மேல் எங்கள் கரங்களை வைத்து, அவர்களோடு எங்களை இணைத்துக் கொண்டு, நான் என்னுடைய கரங்களை இந்தக் கைக்குட்டைகளின் மேல் வைத்து, என்னுடைய ஜெபத்தை தேவனோடு இணைக்கிறேன். இந்த உறுமால்களோடும், ஜனங்களோடும், தேவனே, இந்த உறுமால்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த ஜனங்கள் ஒவ்வொருவரையும் நீர் சுகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். பிதாவே, வருகின்ற வருடத்தினூடாகத் தாங்கள் ஆரோக்கியத்தையும் பெலனையும் பெற்றுக் கொள்வார்களாக. தேவனுடைய கனத்திற்கும் மகிமைக்கும் நாங்கள் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

> நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்
> ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
> என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
> கல்வாரி மரத்தினிலே.

244 இப்பொழுது நாம் அதை மீண்டும் பாடும்போது, நம்மைச் சுற்றிலுமுள்ள யாரோ ஒருவரோடு நாம் கரங்குலுக்குவோம். அப்படியே தரித்திருந்து, கூறிக்கொண்டே இருங்கள்:

> நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்

ஏனென்றால் அவர் முதலில் நேசித்தார்...

சகோதரன் ஆர்கன்பிரைட், இது...?...

இப்பொழுது நம்முடைய கரங்களை அவரண்டை உயர்த்துவோம்.

நான் அவரை நேசிக்கிறேன்,

இப்பொழுது உண்மையாகவே உரத்த சத்தத்தோடு.

நான் அவரை நேசிக்கிறேன் (அந்தவிதமாகத்தான்.)
ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தினிலே.

245 இப்பொழுது இந்த வார்த்தையோடு, நாம் யாவரும் சேர்ந்து இதைக் கூறுவோம்: நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொள்கிறோம். ஆமென்!

246 இப்பொழுது நாம் எழுந்து நிற்போம். இப்பொழுது, நம்முடைய கரங்களையும், நம்முடைய இருதயங்களையும் தேவனண்டை உயர்த்துவோம், இப்பொழுது உண்மையாகவே நன்றியுணர்வோடு, நம்முடைய எல்லா இருதயங்களோடும், "நான் அவரை நேசிக்கிறேன்!" என்று கூறுவோம். இந்தக் கிறிஸ்துமஸ் நேரத்தில் அதை அவருக்கு வெளிப்படுத்துங்கள்.

நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்
ஏனென்றால்...
என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தினிலே.

247 இதைத் தொடர்ந்து இப்பொழுது உடனடியாக ஒரு ஞானஸ்நான ஆராதனை இருக்கும். போக வேண்டியவர்களே, நீங்கள் இங்கே இருந்ததற்காக நாங்கள் நன்றி கூறுகிறோம், மேலும் அசைக்க முடியாத அந்த ராஜ்ஜியத்தில் நீங்கள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுகிறோம். நாம் ஜெபத்திற்காக நம்முடைய தலைகளைச் சற்று நேரம் வணங்கியிருக்கையில், நான் நம்முடைய விலையேறப்பெற்ற சகோதரன் ஆர்கன்பிரைட்டை கேட்கப் போகிறேன், அவர் இங்கு வந்து இந்தக் கூட்டத்தாரை ஜெப வார்த்தையில் கலைந்து செல்ல வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

62-1216 உலகம் சீரழிந்து போதல்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

# பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org